# பகுதி III

# பகுதி III

## 2010 ஆம் ஆண்டில் நாணயச்சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

***உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டவை***


| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் மூத்த பிரஜைகளினால் வைப்பிலிடப்பட்ட ரூபாய் வைப்புக்களுக்கான 20 சதவீத வெகுமதிக் கொடுப்பனவு செயற்றிட்டம் | | 1 |
| 2. | வேளாண்மைத் துறைக்கு கடன் வழங்கலின் கடப்பாடு | 02/04/008/0002/002 | 4 |
| 3. | இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு | 02/17/800/0006/01 | 5 |
| 4. | வரையறுக்கப்பட்ட சிலோன் ஷிப்பிங் கோப்பிரேஷன் லிமிடெட்டிற்கான அரச துறை இறக்குமதி, கப்பலில் ஏற்றிச் செல்லும் சரக்குகளினுடைய ஒதுக்கீடு மீதான அமைச்சரவையின் தீர்மானம் - 2005 மே 6ஆம் திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இல. 415 | 02/17/800/0007/001 | 5 |
| 5. | வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம் | 02/17/600/0014/003 | 6 |
| 6. | 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல் | | 8 |
| 7. | 2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல் | | 10 |
| 8. | வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 02/17/402/0073/002 | 11 |
| 9. | வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 02/17/402/0073/002 | 12 |
| 10. | பணிப்பாளர்களின் நியமனம் | 02/17/600/0017/001 | 13 |
| 11. | கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள் குறைப்பு | 02/17/600/002/001 | 17 |
| 12. | 2010ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தங்கள் | | 18 |
| 13. | 2010ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தங்கள் | | 19 |
| 14. | 2010ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - வைப்புப் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | | 20 |
| 15. | 2010ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - வைப்புப் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | 21 |
| 16. | 2010ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் | | 22 |
| 17. | 2010ஆம் ஆண்டு 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் | | 26 |
| 18. | 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம் | | 30 |
| 19. | 2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம் | | 31 |

| | | |
|---|---|---|
| 20. 2010ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பவற்றை மதிப்பிடுதல் | | 32 |
| 21. 2010ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பவற்றை மதிப்பிடுதல் | | 38 |
| 22. கம்பனி ஆளுகை பணிப்புரைகளின் கீழான தேவைப்பாடுகள் | 02/17/550/002/003 | 44 |
| ***இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் அங்கத்துவ நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டவை*** | | |
| 23. வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1673/11 | 45 |
| 24. இலங்கை காப்புறுதி வைப்புத் திட்டம் - காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீது விதிக்கத்தக்க தவணைக் கட்டுப்பணம் | 01/2010 | 50 |
| 25. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் - தொழிற்பாட்டு விதிமுறைகள் | 02/2010 | 52 |
| **நாணயத் திணைக்களம்** | | |
| 26. சுற்றோட்டத் தாள்களின் புதிய தொடர் | 12/02/008/002/001 | 54 |
| **செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்** | | |
| 27. பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள் | 06/04/01/2010 | 55 |
| 28. இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1644/26 | 57 |
| 29. வெளிநாட்டு நாணயங்களில் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் | 06/04/02/2010 | 58 |
| 30. சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் | 06/04/03/2010 | 59 |
| 31. முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளின் மீது செய்யப்பட்ட இறக்குமதிகளுக்கான அளவுத் தேவைப்பாடுகள் | 06/04/04/2010 | 60 |
| 32. பன்னாட்டுப் பணிகள் வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/05/2010 | 60 |
| 33. வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்கின்ற இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல் | 06/04/06/2010 | 63 |
| 34. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1673/43 | 64 |
| 35. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1681/10 | 65 |
| 36. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் தொகுதிக் கடன்களை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்குமான அனுமதி தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1681/11 | 68 |
| 37. பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு மேலதிக பற்றுக்கள் மற்றும் வரவுகளை அனுமதித்தல் | 06/04/09/2010 | 70 |
| 38. உள்முக முதலீட்டுக் கணக்கு | 06/04/10/2010 | 71 |
| 39. இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள், இராஜதந்திர ஆளணியினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான வெளிநாட்டு நாணய மற்றும் ரூபாக் கணக்குகள் | 06/04/11/2010 | 72 |
| 40. வதிவற்ற இலங்கையரல்லாதவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு | 06/04/12/2010 | 74 |
| 41. இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/13/2010 | 75 |
| 42. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7, 10, 11, 15 பிரிவுகளினதும் அத்துடன் 30ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவினதும் நியதிகளின் கீழான அனுமதி தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1685/2 | 77 |

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்


43. கொடுகடன் அட்டை தொழிற்பாட்டு வழிகாட்டல்கள் 01/2010 78
44. 2010 சனவரி 26ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 01/2010 86
45. நேரடி பரீட்சிப்புக்களை நடத்தும் வியாபாரத்திற்காக லங்கா செட்டில் முறைமையை திறந்து விடுதல் ஆர்ரிஜிஎஸ்/ 02/2010 86
46. 2010.01.27ஆம் திகதியை சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 03/2010 87
47. உத்தேச லங்கா செட்டில் முறைமையின் நேரடிப் பரீட்சிப்பினை பிற்போடுதல் ஆர்ரிஜிஎஸ்/ 04/2010 88
48. நேரடி பரீட்சிப்புக்களை நடத்தும் வியாபாரத்திற்காக லங்கா செட்டில் முறைமையை திறந்து விடுதல் ஆர்ரிஜிஎஸ்/ 05/2010 88
49. 2010 பெப்புருவரி 26ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 06/2010 89
50. லங்கா செட்டில் முறைமையிலுள்ள ஆர்ரிஜிஎஸ்/எஸ்எஸ்எஸ்எஸ் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் திருத்தம் ஆர்ரிஜிஎஸ்/ 07/2010 90
51. 2010 ஏப்பிறல் 8ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 08/2010 91
52. 2010 ஏப்பிறல் 9ஆம் திகதியை சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 09/2010 92
53. 2010 ஏப்பிறல் 30ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 10/2010 93
54. 2010 மே 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளுதல் ஆர்ரிஜிஎஸ்/ 11/2010 94
55. 2010 யூன் 21ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்கு செய்யப்படும் மாற்றங்கள் ஆர்ரிஜிஎஸ்/ 12/2010 94
56. 2009 ஓகத்தின் லங்கா செட்டில் முறைமையின் விதிகள் வாசகம் 2.0 இற்கு திருத்தம் - லங்கா செட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை ஆர்ரிஜிஎஸ்/ 13/2010 97
57. 2010 நவெம்பர் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளுதல் ஆர்ரிஜிஎஸ்/ 14/2010 99
58. லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்வதற்கான அட்டவணையை பிற்போடுதல் ஆர்ரிஜிஎஸ்/ 15/2010 99
59. 2010 நவெம்பர் 19ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள் ஆர்ரிஜிஎஸ்/ 16/2010 100
60. 2010 திசெம்பர் 24ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/ 17/2010 100


## பொதுப்படுகடன் திணைக்களம்


61. செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட்டினை செலான் வங்கி பிஎல்சி யுடன் ஒருங்கிணைத்தல் எஸ்எஸ்எஸ்எஸ்/ 01/2010 101


## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்


62. 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை 102
63. 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வைப்புப் பொறுப்புக்களின் காப்புறுதி) பணிப்புரைகள் 103
64. 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல் - திருத்தம்) விதி 104
65. 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை 105
66. 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை 106
67. 2010ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (கிளைகள்/ வியாபாரத்தலங்களை திறத்தல்/ இடம் மாற்றுதல்/ மூடிவிடுதல்) பணிப்புரை 108
68. 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் 114

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 சனவரி 15

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் மூத்த பிரஜைகளினால் வைப்பிலிடப்பட்ட ரூபாய் வைப்புக்களுக்கான 20 சதவீத வெகுமதிக் கொடுப்பனவு செயற்றிட்டம்

1. **செயற்றிட்டம்**

பொருளாதாரத்தின் வட்டி வீத அமைப்பானது நாணயக் கொள்கை நிலையினை இலகுவாக்கியதுடன் படிப்படியாக குறைந்த மட்டத்தை அடைந்திருக்கின்றது. அதனைத் தொடர்ந்து வைப்பிற்குச் செலுத்தப்பட்ட வட்டி வீதமும் குறைவடைந்திருக்கின்றது. ஆகவே அன்றாட வாழ்க்கைச் செலவுகளினை மேற்கொள்வதற்காக வட்டி வருமானத்தில் தங்கியிருப்பவர்களான உரிமம் பெற்ற வங்கிகளில் சேமிப்பினை முதலிட்டிருக்கும் மூத்த பிரஜைகளை விசேட கவனத்தினைக் கொள்ளுதல் அவசியமாகின்றது. முன்னோக்கிப் பார்க்கும் போது, 2010.01.01இல் செயற்படுத்தும் வகையில் உரிமம் பெற்ற வங்கிகளில் மூத்த பிரஜைகளினால் வைப்பிலிடப்பட்ட ரூபாய் வைப்பிற்கு 20 சதவீத வெகுமதி வட்டியினைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

2. **தொழிற்பாட்டுக் கட்டமைப்பு**

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் வெகுமதி வட்டியினைச் செலுத்துவதற்காக பின்வரும் தொழிற்பாட்டுக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(அ) **நடைமுறைப்படுத்தல் -** இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் திட்டத்தின் கீழ் வெகுமதி வட்டி செலுத்துவதற்கான கட்டமைப்பு தொழிற்படுத்தப்படும்.

(ஆ) **தகைமை -** அறுபது வயதிற்கு மேற்பட்ட அனைத்து இலங்கை பிரஜைகளும் உரிமம் பெற்ற வங்கிகளிலுள்ள அவர்களின் நிலையான வைப்பு மற்றும் ரூபாய் சேமிப்புகளிற்கு வெகுமதி வட்டியினைப் பெறுவதற்கு தகைமையுடையவர்களாவர். (இந் நோக்கத்திற்கு வைப்புச் சான்றிதழின் வடிவிலுள்ள ரூபாய் வைப்புகளும் சேமிப்புச் சான்றிதழும் தகைமையானதாகக் கருதப்படமாட்டாது).

(இ) **தகைமையுடைய கணக்கு வகைகள் -** வெகுமதி வட்டியானது மூத்த பிரஜைகளின் பின்வரும் வகையான ரூபாய் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளின் அட்டுறு வட்டிகளின் மீது செலுத்தப்படும்.

(i) மூத்த பிரஜைகளின் ஏற்கனவேயுள்ள அல்லது புதிய தனிப்பட்ட மற்றும் கூட்டு வைப்புக் கணக்குகள்,

(ii) கணவன்/ மனைவியுடனான மூத்த பிரஜைகளின் ஏற்கனவேயுள்ள அல்லது புதிய கூட்டு வைப்புக் கணக்குகள், மற்றும்;

(iii) அறுபது வயதிற்குக் குறைந்த தனிநபர்/களுடன் (கணவன்/ மனைவி தவிர்ந்த) மூத்த பிரஜைகளினால் 2010.01.01 இற்கு முதலிலிருந்து செயற்படுத்தப்படும் கூட்டு வைப்புக் கணக்குகள் (புதிய கணக்குகள் இச் செயற்றிட்டத்தின் கீழ் கருதப்படமாட்டாது).

**குறிப்பு: உரிமம் பெற்ற வங்கிகளானது மேற்குறிப்பிடப்பட்ட கணக்குகளின் அட்டுறு வட்டிகளின் விபரத்தை வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட மாதிரி இணைப்பு 1இன் படி மாதம் முடிந்து அடுத்த 5 நாட்களுக்குள் அறிவிப்பதற்கு வேண்டிக் கொள்ளப்படுகின்றன.**

(ஈ) **வெகுமதி வட்டியின் அளவு -** வெகுமதி வட்டியானது மேலே (ஆ)இல் கூறப்பட்ட மூத்த பிரஜைகளின் ரூபாய் வைப்புக் கணக்குகளுக்கு எதிராக 2010.01.01இற்குப் பின் மூத்த பிரஜைகளின் கணக்கொன்றின் மாதாந்த அட்டுறு வட்டிக்கு 20 சதவீதத்திற்குச் சமமானதாக இருக்கும்.

(உ) **ஆகக் கூடுதலான கொடுப்பனவு -** இத் திட்டத்தின் கீழ் ஓர் மூத்த பிரஜைக்கான ஆகக் கூடுதலான வெகுமதி வட்டிக் கொடுப்பனவாக ஆண்டிற்கு ரூ. 120,000 மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஊ) **வெகுமதி வட்டியினை நிர்ணயித்தல் -** இத் திட்டத்தின் கீழ் மூத்த பிரஜைகளினால் உழைக்கப்பட்ட வெகுமதி வட்டியானது உரிமம் பெற்ற வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் கணிக்கப்படும் (வழங்கப்பட்ட மாதிரி இணைப்பு 1) என்பதுடன் அடுத்து வரும் மாதத்தில் மூத்த பிரஜைகளின் தெரிவு செய்யப்பட்ட கணக்குகளிற்கும் செலுத்தப்படும்.

(எ) **உரிமம் பெற்ற வங்கிகளின் தேவைப்பாடுகள் -** உரிமம் பெற்ற வங்கிகளானது ரூபாய் வைப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்குகளை தெரிவு செய்வதற்கு மற்றும் பொருத்தமான வெகுமதி வட்டியினைச் செலுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இக் கணக்குகளை (அதாவது வங்கி மற்றும்

கணக்கு இலக்கம்) அறிவிப்பதற்கு வேண்டப்படுவர். இதன் பிரகாரம் ஓர் மூத்த பிரஜைக்கு (அடையாள அட்டை இலக்கம்) ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகள், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வங்கிகளினால் அறிவிக்கப்படும் போது வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தற்றுணிபின் அடிப்படையில் உரிமம் பெற்ற வங்கியில் ஓர் கணக்கினைத் தெரிவு செய்து அக் கணக்கின் அட்டுறு வட்டிக்கு வெகுமதியைச் செலுத்தும்.

(ஏ) **வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பொறுப்புக்கள்**

(i) இச் செயற்றிட்டத்தின் கீழ் ஒவ்வொரு வைப்பாளருக்கும் மாதாந்த வெகுமதி வட்டித் தொகை ரூபாய் வைப்புக் கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்படும் என்பதை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பணிப்பாளரினால் ஒவ்வொரு மாத இறுதியின் 14 நாட்களுக்குள் ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கிக்குப் அறிவிக்கப்படும்.

(ii) மேலே (ஏ)இல் கூறப்பட்டதைப் போன்று தகவல்களை பரப்பும் நேரத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர், இத் திட்டத்தின் கீழ் இம் மாதத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வெகுமதி வட்டித் தொகையினை இலங்கை மத்திய வங்கியிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளின் தீர்ப்பனவுக் கணக்குகளுக்கு வரவு வைப்பார்.

(ஐ) **கணக்கிற்கு வட்டியினை வரவு வைத்தல் -** இதன் பிரகாரம் மாதாந்த வெகுமதி வட்டிக் கொடுப்பனவானது மேலே (எ) தீர்மானிக்கப்பட்ட அல்லது குறிப்பிடப்பட்ட கணக்குகளிற்கு மேலே (ஏ) இல் குறிப்பிட்டிருப்பதைப் போன்று வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அடுத்து வரும் மாதத்தில் உரிமம் பெற்ற வங்கிகளினால் செலவு வைக்கப்படும்.

(ஒ) **மூத்த பிரஜைகளின் தேவைப்பாடுகள் -** வங்கிகளானது இச் செயற்றிட்டத்தின் கீழ் வெகுமதி வட்டியினைப் பெறுவதற்கு தகைமையுடைய மூத்த பிரஜைகளான ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளரிடமிருந்து மற்றும் புதிய தகைமையுடைய வைப்புக்களை திறக்கும் போது புதிய வைப்பாளர்களிடமிருந்தும் ஆகக் கூடிய தொகையான ஆண்டிற்கு ரூ.120,000 இற்கு மேலதிகமான வெகுமதி வட்டியினை பெறும் மூத்த பிரஜையினால் திருப்பிச் செலுத்துவதன் பொறுப்பு பிரகடனங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஓ) **துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கை -** இச் செயற்றிட்டத்தில் நோக்கம் கருதிய தவறான பிரயோகமிருப்பின் அவ்வாறான வைப்பாளர்களை இச் செயற்றிட்டத்தின் கீழ் வெகுமதி வட்டியினைப் பெறுவதற்கு தகுதியற்றவர்களாக இலங்கை மத்திய வங்கி தனது தற்றுணிபு அடிப்படையில் தீர்மானிக்கும் என்பதுடன் அத் திகதி வரை இச் செயற்றிட்டத்தின் கீழ் பெறப்பட்ட வெகுமதி வட்டியினைத் திருப்பிச் செலுத்துவதற்கும் வேண்டப்படுவர்.

(ஔ) **பதிவேடுகளைப் பேணல் -** உரிமம் பெற்ற வங்கிகளானது வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பரீட்சிப்புக்களுக்கு எந்நேரத்திலும் வழங்குவதற்கான வெகுமதி வட்டிக் கொடுப்பனவு தொடர்பான அறிக்கையினை பேணுதல் வேண்டும்.

**இணைப்பு I**

## உரிமம் பெற்ற வங்கிகளின் மூத்த பிரஜைகளின் ரூபாய் வைப்புக்கள் மீதான முன்மொழியப்பட்ட 20 சதவீத வெகுமதி வட்டிக் கொடுப்பனவுக்கான கட்டமைப்பு

### தரவு அறிக்கையிடல் படிவம் - 1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கானது

1. **கணக்கு மற்றும் வட்டி விபரங்கள்**

1.1 அனைத்து மாதாந்த அட்டுறு வட்டிகளும் இங்கே கோவையிலுள்ள பின்வரும் படிவத்தில் அறிக்கையிடப்படும்.

1.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் அவசியமானது.

1.3 வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கு மாதிரி நிலையான வைப்பாக இருப்பின், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்குகள் அல்லது ஏதாவது சேமிப்புக்கள் அல்லது நடைமுறைக் கணக்கு இலக்கத்தினை பின்வரும் கோவையில் அனுப்புதல் கட்டாயமாகின்றது. இதன் பிரகாரம் கணக்கு வகை 3 ஆகவும் செலுத்தப்பட்ட வட்டி 0 ஆகவும் இருக்கும்.

**குறிப்பு: பின்வரும் களங்களின் அளவானது சிலிப்ஸ் கோவை மாதிரியினை அடிப்படையாகக் கொண்டது.**

**வங்கிக் குறியீடு, கிளைக் குறியீடு, கணக்கு இலக்கம் மற்றும் வாடிக்கையாளரின் பெயர்**

| களப் பெயர் | தரவு வகை | கட்டாயமானது | கருத்து |
|---|---|---|---|
| வங்கிக் குறியீடு | இலக்கம் (4) | ஆம் | வங்கிக் குறியீடு காசோலை மாற்றலிற்கு பயன்படுத்தப்பட்டது (7என்என்என்) |
| கிளைக் குறியீடு | இலக்கம் (3) | ஆம் | கணக்கு திறக்கப்பட்ட கிளையின் குறியீடு |
| கிளையின் பெயர் | உரை (40) | ஆம் | கணக்கு திறக்கப்பட்ட கிளையின் பெயர் |
| கணக்கு இலக்கம் | உரை (12) | ஆம் | கணக்கு இலக்கம் |
| வாடிக்கையாளரின் பெயர் | உரை (20) | ஆம் | |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | உரை (10) | ஆம் | வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் |
| கணக்கு வகை | இலக்கம் (2) | ஆம் | கணக்கு மாதிரி<br>1. நிலையான வைப்பு<br>2. சேமிப்புக்கள்<br>3. நடைமுறை வைப்பு |
| காலம் | இலக்கம் (6) | ஆம் | கணக்கிற்கு செலுத்தப்பட்ட திகதி உ-ம்: 2009 திசெம்பர் இனை 200912 ஆகக் காட்டவும் |
| அட்டுறு வட்டி | இலக்கம் (12, 2) | ஆம் | இக் கணக்கில் அட்டுறுவாகவுள்ள வட்டித் தொகை |
| பிரேரிக்கப்பட்டது | உரை (1) | ஆம் | ‘ஆம்’ அல்லது ‘இல்லை’ என குறிப்பிடவும்.<br>‘ஆம்’ ஆயின் இக் கணக்கில் வெகுமதி வட்டி செலவு வைப்பதற்கு பயன்படுத்தப்படும் என்பதாகும்.<br>‘ஆம்’ என்பது சேமிப்புக் கணக்கில் மட்டும் குறிப்பிடப்படல் வேண்டும். |

1.4 உரைக் கோவையினைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் பின்வருமாறு:

- அனைத்து களங்களும் பைப் ( | ) இக் குறியீட்டினைப் பயன்படுத்தி வேறுப்படுத்தப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு வரிகளும் கரிஜேஜ் உடன் முடிவடையும்.
- முதலாவது வரிசை தொகுதிப் பெயர்களைக் கொண்டிருப்பதுடன் பைப் ( | ) அடையாளம் மூலம் குறியீடு வேறுபடுத்தபட்டிருத்தல் வேண்டும்.

**தொடர்பு எண்: 02/04/008/0002/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 பெப்புருவரி 25

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வேளாண்மைத் துறைக்கு கடன் வழங்கலின் கடப்பாடு**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக 2009 யூலை 13ஆம் திகதியிடப்பட்ட 02/04/008/0002/002 இலக்க எங்களின் கடிதத்திற்கு மேலதிகமாக, நாங்கள் பின்வருவனவற்றை உங்களுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துகின்றோம்.

1. நாணயச் சபையானது பின்வருவனவற்றினை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றது:

   (அ) வங்கிகளினூடாக வேளாண்மைத் துறைக்கு கடன் வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மீள் நிதியிடல் நிதியொன்றை உருவாக்குதல்;

   (ஆ) 2009ஆம் ஆண்டின் இறுதியில் வேளாண்மைத் துறைக்கு 10 சதவீத கடன் வழங்குதல் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகாத வங்கிகள் அவற்றின் பற்றாக்குறையை இம் மீள் நிதியிடல் நிதிக்கு பங்களிப்புச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன; மற்றும்

   (இ) ஏனைய வங்கிகளினூடாக கடன் வழங்குதலினை ஆரம்பித்ததன் பின்னர் ஆண்டிற்கு 2 சதவீத வட்டியை பங்களிப்பு செய்யும் வங்கிகளுக்கு செலுத்துதல்.

2. இலங்கை மத்திய வங்கியில் “வேளாண்மைத் துறை அபிவிருத்திக்காக விசேட கடன் திட்டம் - கணக்கு இலக்கம் 32 0000 900” எனும் ஓர் மீள் நிதியிடல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

3. இதற்கமைய, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும்:

   (அ) இக் கடிதம் கிடைத்ததிலிருந்து 7 நாட்களுக்குள் 2009 இறுதியில் 10 சதவீதம் வேளாண்மைக் கடன் வழங்கும் தேவைப்பாடு மீதான பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் அளவிற்கு மேற்கூறப்பட்ட கணக்கில் நிதி செலுத்தப்பட வேண்டும்; அத்துடன்

   (ஆ) காலாண்டு ரீதியாக வேளாண்மைத் துறைக்கு வழங்கப்படும் கடனின் நிலையினை மதிப்பீடு செய்வதுடன் ஒவ்வொரு காலாண்டு முடிவிலிருந்தும் 15 நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட கணக்கிற்கு 10 சதவீத தேவைப்பாட்டின் பற்றாக்குறையை செலுத்துதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பதில் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 மாச்சு 11

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2008.10.31ஆம் திகதியிடப்பட்ட, தொடர்பு எண் 02/17/800/0006/01 இன் கீழ் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இதனால் இரத்துச் செய்யப்படுகின்றது என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

திருமதி ரி எம் ஜே வை பி பா்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0007/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 மாச்சு 19

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா

**வரையறுக்கப்பட்ட சிலோன் ஷிப்பிங் கோப்பிரேஷன் லிமிட்டெட்டிற்கான அரச துறை இறக்குமதி, கப்பலில் ஏற்றிச் செல்லும் சரக்குகளினுடைய ஒதுக்கீடு மீதான அமைச்சரவையின் தீர்மானம் - 2005 மே 6ஆம் திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இல. 415**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக துறைமுக மற்றும் வான் போக்குவரத்து அமைச்சு 2010 மே 10ஆம் திகதியிடப்பட்ட அவர்களினுடைய கடிதம் மூலம் கீழே குறிப்பிடப்படுகின்ற 2010 பெப்புருவரி 3ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கும்படி எங்களை கேட்டுக் கொண்டது.

“2005 மே 6 இன் பொது நிதி சுற்றறிக்கை இல. 415 இல் குறிப்பிடப்பட்டது போல் அரசுடைமையான கம்பனிகள் உள்ளடங்கலாக அரசாங்க நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் அனைத்து சரக்குகளும் வரையறுக்கப்பட்ட சிலோன் ஷிப்பிங் கோப்பிரேசன் லிமிடெட்டினூடாக நடாத்தப்பட வேண்டும்”

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பா்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/600/0014/003**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 மே 14

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

**வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

2010 ஏப்பிறல் 29இல் நடைபெற்ற முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கான மாதாந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதைப் போன்று, குறிப்பிட்ட சில உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களின் வெளிப்படுத்தல்களானது பூரணப்படுத்தப்படாமல் இருப்பதுடன் 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தொடர்பான இடர்முகாமைத்துவ பணிப்புரைகளின் தேவைப்பாடுகளிற்கேற்ப இசைவாக இல்லாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, நாங்கள் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனங்களின் மாதிரி படிவத்தை இத்துடன் இணைக்கின்றோம். ஏற்கனவே, பெரும்பாலும் இம் மாதிரிக்கேற்ப இப் பிரகடனங்களை சமர்ப்பித்த வங்கிகள் மீண்டும் இப் பிரகடனங்களை சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு

பிரதி: செயலாளர்
வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம்

**மாதிரிப் படிவம்**

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு**

**வங்கியின் பெயர்:**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி வியாபாரத்துடன் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் நியதிகளின்படி வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

...................... எனும் முகவரியில் வசிப்பவரும் ................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டை கொண்டவரும் ............................... (முழுப் பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கின்றேன்/ உறுதிப்படுத்துகின்றேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லீம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. நான் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகிய ....................... இல் (வங்கியின் பெயர்) ................................ பதவியினை வகிக்கின்றேன்.

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி வியாபாரத்துடன் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகளின் 10.2(i) நியதிகளின்படி நான் பின்வரும் கல்விசார் தகைமையை/ தகைமைகளையும் அத்துடன்/ அல்லது தொழில்சார் நிபுணத்துவ தகைமையை/ தகைமைகளையும் கொண்டுள்ளேன்:/ [2009 செத்தெம்பர் 1ஆம் நாளன்று நான் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதுடன்

மேற்குறிப்பிட்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் 10(2)(i)இல் குறித்துரைக்கப்பட்டவாறான தொடர்பான தகைமைகளை 2012 ஓகத்து 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ பெற்றுக் கொள்வேன்].

3. மேலே (2)இல் குறிப்பிடப்பட்டவற்றிற்குப் புறம்பாக நான் பின்வரும் தகைமைகளையும் கொண்டுள்ளேன்.

4. வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் பின்வரும் காத்திரமான தகைமைகளைக் கொண்டிருக்கின்றேன்.

5. நான் ஈடுபட்டிருக்கும்/ ஈடுபட எதிர்பார்த்திருக்கும் தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளுக்கு பொருத்தமானதும் போதுமானதுமான பொருத்தமான தொழில்சார் நிபுணர், கல்விக்கழகம் அல்லது கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதனூடாக தொடர்ச்சியான பயிற்சியை பெற்று வருவேன்.

6. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது முறையற்ற நடத்தைகள் தொடர்பான விடயங்களை நான் செய்துள்ளேன் என்றோ அல்லது அத்தகைய செயலுடன் தொடர்புட்டுள்ளேன் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் எந்தவொரு தீர்ப்புக்கும் உள்ளாகவில்லை.

7. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது அதேவகையான தவறான நடவடிக்கைகளைச் செய்தேன் என அறிவிக்கப்பட்டு குற்றச்சாட்டுப்பத்திரிகை வழங்கப்பட்டு இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் நான் விசாரணைக்கோ அல்லது ஆராய்வுக்கோ உட்பட்டிருக்கவில்லை என்பதனை கொள்கிறேன்.

8. நிதி முகாமைத்துவம் அல்லது வேறு விதமான தார்மீக ஒழுங்குமுறைகள் தொடர்பாக இழைக்கப்பட்ட குற்றத்திற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினாலோ தண்டிக்கப்படவில்லை என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. நான் ஒரு கடன் தீராற்றலற்றவர் என்றோ அல்லது வங்குரோத்துக்காரர் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

10. நான் இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையினை நிறைவேற்றுவதற்கோ அல்லது கடனைத் திருப்பிக் கட்டுவதற்கோ தவறவில்லை என நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் நான் ஒரு சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்படுத்தப்படவில்லை என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அதிகாரசபையின் கட்டளை ஒன்றின் மூலம் உரிமம் அளிக்கப்பட்டுள்ள வங்கி ஒன்றின் அல்லது நிதி நிறுவனத்தின் அல்லது கம்பனிச் சபையின் சேவையிலிருந்து நீக்கப்படவோ இடைநிறுத்தப்படவோ இல்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

**வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளினால் நிரப்பப்பட வேண்டிய பிரகடனம்**

மேலே குறிப்பிடப்பட்ட பெயரையுடைய நான் இங்கே தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானதும் பூரணமானது எனவும் உறுதிப்படுத்துவதுடன் மேற்குறிப்பிட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமிடத்து, அத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்து ஒரு வார காலப்பகுதிக்குள் அறிவிப்பேன் என்பதற்கும் உறுதியளிக்கின்றேன்.

**திகதி:** **கையொப்பம்**

**பெயர்:.....................................................**

---

**முதன்மை நிறைவேற்று அலுவலரால் நிரப்பப்பட வேண்டியது**

மேலே சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்கள், வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்குப் பொருத்தமானது எனக் கருதுகின்ற மற்றைய தகவல்கள்.

**திகதி:** **முதன்மை நிறைவேற்று அலுவலரின் கையொப்பம்**

**பெயர்:.....................................................**

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர்/**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 மே 26

## பணிப்புரைகள்

## 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை

## இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினுடைய 46(1) மற்றும் 46அ பிரிவுகளினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகித்து, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2008 மே 8ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பணிப்புரையை திருத்தும் விதத்தில் கீழ்வரும் பணிப்புரையை நாணயச் சபை இத்தால் வெளியிடுகின்றது. இப் பணிப்புரையானது 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரையானது 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 4(8)ஆம் இலக்க பணிப்புரையினை உடனடுத்து அறிமுகப்படுத்தப்படுகின்றது.

4(8)(I) வங்கி பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அதே கடன்பாட்டாளருக்கு அல்லது வேறு ஏதாவது ஒரு குழுவினருக்கு செயற்படாக் கடன்களை மீள் செலுத்துவதற்கு, புதிய கொடுகடன்களை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தாமல் புதிய கொடுகடன்கள் வழங்கலாம்:

(i) புதிய கொடுகடன் வசதியின் ஒரு பகுதி பின்வருவனவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது:

(அ) ஆற்றல் வாய்ந்த வியாபாரமெனின் அதனை மீளக் கட்டியெழுப்புதல் அல்லது

(ஆ) வியாபாரத்தை விரிவுபடுத்தல் அல்லது

(இ) புதிய ஆற்றல் வாய்ந்த வியாபாரத்தை மேற்கொள்ளுதல்

(ii) வங்கியானது

(அ) புதிய கடன்களின் மீது மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது மீதான பணிப்புரையின் கீழ், மூலதனப் போதுமை வீதம் 10 சதவீதத்திற்கு கூடுதலாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு 11 சதவீதம் கொண்ட மூலதனப் போதுமையினை அல்லது மேலதிக 10 சதவீதம் கொண்ட இடர்நேர்வு நிறையேற்றலைப் பேணுதல் வேண்டும்.

(ஆ) ஓர் வாடிக்கையாளருக்கான புதிய வசதிகளை வழங்குவதற்கு பொருத்தமான ஆகக் கூடிய வரையறையை தீர்மானிப்பதுடன் அதனை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அத் தீர்மானம் எடுக்கப்பட்ட அடிப்படையையும் சேர்த்து தெரியப்படுத்தல் வேண்டும்,

(இ) கடன் இடர்நேர்வினை குறைத்துக் கொள்வதற்குரிய இயலுமையில் அது திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) அக் கடன்களை ஒரே தடவையில் வழங்குவதுடன் அதன் பின் விதிவிலக்குகள் வழங்கப்படக்கூடாது; மற்றும்

(உ) ஏற்கனவே இருக்கின்ற செயற்படாக்கடன் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்களை இணைப்பு "அ" அறிக்கை மாதிரியின் பிரகாரம் அத் தகவல்களை தொடர்பான மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாள் அல்லது அதற்கு முன்பாக பராமரித்து அறிக்கையிடல் வேண்டும்.

(iii) இவ் விலக்கு 2011 யூன் 30 வரை நடைமுறையிலிருக்கும்.

**இணைப்பு அ**

**செயற்படாக் கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்களின் அறிக்கை**

2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கமைய வங்கிகளானவை ஏற்கனவேயுள்ள செயற்படாக் கடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்களை மாதாந்த அடிப்படையில் பேணி வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**வங்கியின் பெயர்:**

**...................................................... மாதத்திற்கான அறிக்கை**

| தொடர் இலக்கம் | கடன் வழங்கிய திகதி | புதிய கடனின் கடன் பாட்டாளரின் பெயர் | கடனின் நோக்கம் | | | துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை மீதான அறிக்கையொன்றாக பொருளியல் துறையின் செயற்படாக் கடன் | புதிய கடன்களின் மொத்தப் பெறுமதி* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (i) செயற்படாக் கடன் தீர்ப்பனவு | | (ii) மீளக் கட்டியெழுப்புதல்/ வியாபாரத்தை விரிவுபடுத்தல்/ புதிய சாத்தியமான வியாபாரத்தை பொறுப்பேற்று நடத்தல்* | | |
| | | | அதே கடன் பாட்டாளாராயின்* | வேறு கடன் பாட்டாளாராயின், அவரின் பெயர்** | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

இது தொடர்பான வெப்தள அடிப்படையிலான அறிக்கை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

* தொகை ஆயிரம் ரூபாயில் குறிப்பிடப்படல் வேண்டும்

** தொகை ஆயிரம் ரூபாயில் குறிப்பிடப்படுவதுடன் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும்

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர்/**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 மே 26

**பணிப்புரைகள்**

**2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை**

**இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல்**

நாணயச் சபையானது 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினுடைய 76(ஜே)(1) பிரிவினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகித்து, இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையால் 2008 மே 8ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரையை திருத்தும் விதத்தில் கீழ்வரும் பணிப்புரை நாணயச் சபையினால் இத்தால் வெளியிடப்படுகின்றது. இப் பணிப்புரையானது 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரையானது 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 4(8)ஆம் இலக்க பணிப்புரையினை உடனடுத்து அறிமுகப்படுத்தப்படுகின்றது.

4(8)(I) வங்கி பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அதே கடன்பாட்டாளருக்கு அல்லது வேறு ஏதாவது பகுதியினருக்கு செயற்படாக் கடன்களை செலுத்துவதற்கு புதிய கடன்களை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தாமல் அனுமதி வழங்கலாம்:

(i) புதிய கடன் வசதியின் பகுதி பின்வருவனவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது:

(அ) ஆற்றல் வாய்ந்த வியாபாரத்தினை மீளக் கட்டியெழுப்புதல் அல்லது

(ஆ) வியாபாரத்தை விரிவுபடுத்தல் அல்லது

(இ) புதிய ஆற்றல் வாய்ந்த வியாபாரத்தைக் கொண்டு நடத்தல்

(ii) வங்கியானது

(அ) புதிய கடன்களின் மீது மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது மீதான பணிப்புரையின் கீழ், மூலதனப் போதுமை வீதம் 10 சதவீதத்திற்கு கூடுதலாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு 11 சதவீதம் கொண்ட மூலதனப் போதுமையினை அல்லது மேலதிக 10 சதவீதம் கொண்ட இடர்நேர்வு நிறையேற்றலைப் பேணுதல் வேண்டும்.

(ஆ) ஓர் வாடிக்கையாளருக்கான புதிய வசதிகளை வழங்குவதற்கு பொருத்தமான ஆகக் கூடிய வரையறையை தீர்மானிப்பதுடன் அதனை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அத் தீர்மானம் எடுக்கப்பட்ட அடிப்படையையும் சேர்த்து தெரியப்படுத்தல் வேண்டும்,

(இ) கடன் இடர்நேர்வினை குறைத்துக் கொள்வதற்குரிய இயலுமையில் அது திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) அக் கடன்களை ஒரே தடவையில் வழங்குவதுடன் அதன் பின் விதிவிலக்குகள் வழங்கப்படக்கூடாது; மற்றும் ஏற்கனவே இருக்கின்ற செயற்படாக்கடன் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்களை இணைப்பு “அ” அறிக்கை மாதிரியின் பிரகாரம் அத் தகவல்களை தொடர்பான மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாள் அல்லது அதற்கு முன்பாக பராமரித்து அறிக்கையிடல் வேண்டும்.

(iii) இவ் விலக்கு 2011 யூன் 30 வரை நடைமுறையிலிருக்கும்.

**இணைப்பு அ**

### செயற்படாக் கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்களின் அறிக்கை

2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கமைய வங்கிகளானது ஏற்கனவேயுள்ள செயற்படாக் கடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்களை மாதாந்த அடிப்படையில் பேணி வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**வங்கியின் பெயர்:**

**...................................................... மாதத்திற்கான அறிக்கை**

| தொடர் இலக்கம் | கடன் வழங்கிய திகதி | புதிய கடனின் கடன் பாட்டாளரின் பெயர் | கடனின் நோக்கம் | | | துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை மீதான அறிக்கையொன்றாக பொருளியல் துறையின் செயற்படாக் கடன் | புதிய கடன்களின் மொத்தப் பெறுமதி* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (i) செயற்படாக் கடன் தீர்ப்பனவு | | (ii) மீளக் கட்டியெழுப்புதல்/ வியாபாரத்தை விரிவுபடுத்தல்/ புதிய சாத்தியமான வியாபாரத்தை பொறுப்பேற்று நடத்தல்* | | |
| | | | அதே கடன் பாட்டாளாராயின்* | வேறு கடன் பாட்டாளாராயின், அவரின் பெயர்** | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

* தொகை ஆயிரம் ரூபாயில் குறிப்பிடப்படல் வேண்டும்

** தொகை ஆயிரம் ரூபாயில் குறிப்பிடப்படுவதுடன் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும்

இது தொடர்பான வெப்தள அடிப்படையிலான அறிக்கை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**தொடர்பு எண்: 02/17/402/0073/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 யூலை 29

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா

### வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல்

மேற்குறிப்பிட்ட விடயம் பற்றி 2005 ஏப்பிறல் 12 ஆம் திகதியிடப்பட்ட எமது 02/17/402/0073/001 இலக்க சுற்றறிக்கை தொடர்பாகவும் மற்றும் 2009 நவெம்பர் 24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் பலமானதும் மற்றும் ஆற்றல் வாய்ந்ததுமான வங்கி முறைமையை ஏற்படுத்தும் ஆர்வத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் மூலதனத்தினை கீழ்வரும் முறையில் அதிகரிக்கும்படி வேண்டிக் கொள்வதற்கு தீர்மானித்திருக்கின்றது என்பதனை அறியத் தருகின்றோம்.

(அ) 2011 திசெம்பர் 31 அளவில் ரூ. 3 பில்லியன்

(ஆ) 2013 திசெம்பர் 31 அளவில் ரூ. 4 பில்லியன்

(இ) 2015 திசெம்பர் 31 அளவில் ரூ. 5 பில்லியன்

இந் நோக்கத்திற்காக, மூலதனம் என்பது 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டு 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரையுடன் அட்டவணை 1 என இணைக்கப்பட்டிருந்த வழிகாட்டலின் மூலதனப் போதுமை வீதத்தினை பேணுதல் தொடர்பான 6.2.2.2 இலக்க வழிகாட்டலின் பிரகாரம் விபரிக்கப்பட்ட அடிப்படை மூலதனம் எனக் கருதப்படும்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/402/0073/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 யூலை 29

*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா

**வங்கிகளின் குறைந்தபட்ச மூலதன தேவைப்பாட்டினை அதிகரித்தல்**

மேற்குறிப்பிட்ட விடயம் பற்றி 2005 ஏப்பிறல் 12 ஆம் திகதியிடப்பட்ட எமது 02/17/402/0073/001 இலக்க சுற்றறிக்கை தொடர்பாகவும் மற்றும் 2009 நவெம்பர் 24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் பலமானதும் மற்றும் ஆற்றல் வாய்ந்ததுமான வங்கி முறைமையை ஏற்படுத்தும் ஆர்வத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அவற்றின் மூலதனத்தினை கீழ்வரும் முறையில் அதிகரிக்கும்படி வேண்டிக் கொள்வதற்கு தீர்மானித்திருக்கின்றது என்பதனை அறியத் தருகின்றோம்.

(அ) 2011 திசெம்பர் 31 அளவில் ரூ. 2 பில்லியன்

(ஆ) 2013 திசெம்பர் 31 அளவில் ரூ. 2.5 பில்லியன்

(இ) 2015 திசெம்பர் 31 அளவில் ரூ. 3 பில்லியன்

இந் நோக்கத்திற்காக மூலதனம் என்பது 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டு 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரையுடன் அட்டவணை 1 என இணைக்கப்பட்டிருந்த வழிகாட்டலின் மூலதனப் போதுமை வீதத்தினை பேணுதல் தொடர்பான 6.2.2.2 இலக்க வழிகாட்டலின் பிரகாரம் விபரிக்கப்பட்ட அடிப்படை மூலதனம் எனக் கருதப்படும்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/600/0017/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 ஓகத்து 27

*உரிமம் பெற்ற அனைத்து வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**பணிப்பாளர்களின் நியமனம்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2005 மாச்சு 31ஆம் திகதியிடப்பட்ட, எமது கடிதத் தொடர்பு இலக்கம் 02/04/002/0012/002 இற்கு அமைவாக.

வங்கிகளின் பணிப்பாளர்கள், கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கி நடப்பதை உரிமம் பெற்ற வங்கிகள் அறிந்து கொள்வதை அனுமதிக்கும் வகையில் மேலதிக தகவல்களை உள்ளடக்கிய திருத்தியமைக்கப்பட்ட பிரகடனப் படிவத்தை இத்துடன் இணைக்கின்றோம்.

2010.09.01ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் திருத்தியமைக்கப்பட்ட பிரகடனத்தை மேற்குறிப்பிட்ட தொடர்புக்கு அமைவான கடிதத்தினுடைய இணைப்பு 2 இற்கு தயவுசெய்து மாற்றீடு செய்யவும்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

பிரதி: திரு உபாலி டி சில்வா
செயலாளர் நாயகம் - இலங்கை வங்கிகளின் கூட்டமைப்பு
8ஆம் மாடி, செலிங்கோ இல்லம்
இல. 69, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

**இணைப்பு 2**

**வங்கியின் பெயர்:**

**வங்கித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவிற்கிணங்க, ஒரு உரிமம் பெற்ற வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு, தெரிவு செய்யப்படுவதற்கு, பரிந்துரைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நபர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

**1. தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர்:

1.2 அடையாள அட்டை இலக்கம்/ கடவுச் சீட்டு இலக்கம்:

1.3 பிறந்த திகதி:

1.4 வயது:

1.5 நிரந்தர முகவரி:

1.6 தற்போதைய முகவரி:

1.7 தொழில்:

**2. வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமனம் பெறல்**

2.1 வங்கியின் பணிப்பாளர் சபைக்கு ஒரு பணிப்பாளராக முதலில் நியமனம் பெற்ற திகதி

2.2 நியமனத்தின் தன்மை (நிறைவேற்று அதிகாரம் பெற்ற பணிப்பாளர்/ சுயாதீனமான பணிப்பாளர்/ சுயாதீனமற்ற பணிப்பாளர்/ நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்/ மாற்றுப் பணிப்பாளர்)

**3. வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவிற்கிணங்க நெருங்கிய உறவினர்களின்[1] தனிப்பட்ட தகவல்கள்**

3.1 வாழ்க்கைத் துணைவரின் முழுப் பெயர்:

3.2 அடையாள அட்டை இலக்கம்/ கடவுச் சீட்டு இலக்கம்:

3.3 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்:

| | முழுப் பெயர் | அடையாள அட்டை/ கடவுச்சீட்டு இல. |
|---|---|---|
| 3.3.1 | | |
| 3.3.2 | | |

[1] "நெருங்கிய உறவினர்" என்பது வாழ்க்கைத் துணைவர் மற்றும் நிதி சார்பாக தங்கி வாழும் பிள்ளைகள் என கருதப்படலாம்

**4. பின்னணியும் அனுபவமும்**

4.1 உரிமம் பெற்ற வங்கி/கள் வங்கித்தொழில் சட்டத்திற்கிணங்க, அதனுடைய துணை நிறுவனங்கள்[2], இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் அவன்/ அவள் பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவராக இருந்தால் அல்லது இருந்திருந்தால் அவற்றினுடைய பெயர்/ பெயர்கள்

| நிறுவனத்தின் பெயர் | பதவிக் காலம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.2 அவன்/ அவள் தற்போது பணிப்பாளராக இருக்கின்ற தொழில்முயற்சிகளின் பெயர்கள்

| **4.2.1 1995ஆம் ஆண்டு 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்திற்கு அமைவாக குறிப்பிடப்பட்ட தொழில்முயற்சிகளின் பெயர்கள்** |
|---|
| (அ) |
| (ஆ) |
| (இ) |
| (ஈ) |
| **4.2.2 தொழில்முயற்சிகள்/ நிறுவனங்களின் பெயர்கள்** |
| (அ) |
| (ஆ) |
| (இ) |
| (ஈ) |

4.3 உரிமம் பெற்ற வங்கிகள், அதனுடைய துணை நிறுவனங்கள்[2], இணைந்த நிறுவனங்கள் ஏதாவதொன்றில் அவன்/ அவள் தொழிற்பாட்டு நிறைவேற்று அலுவலர் ஒருவராக அல்லது தொழிற்பட்டால்/ தொழிற்பட்டு இருந்திருந்தால் அவற்றினுடைய பெயர்/ பெயர்கள்

| நிறுவனத்தின் பெயர் | பதவி/ உத்தியோகம் | பதவிக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

**2 -** "துணை நிறுவனம்" என்பது வங்கித்தொழில் சட்டம் பிரிவு 17(3) இன் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாகும்.

## 5. வங்கிகள் மற்றும் அவற்றினுடைய தொடர்புபட்ட கம்பனிகளிலுள்ள பங்குடமைகள்

5.1 உரிமம் பெற்ற வங்கிகள், அவற்றின் துணை நிறுவனங்கள்[2] மற்றும் இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின், அவற்றில் தற்போது வைத்திருக்கும் நேரடியான அல்லது மறைமுகமான பங்கு உரித்துடமைகள்:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் வீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியான | மறைமுகமாக | நேரடியான | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |
| | | | | |

2 - "துணை நிறுவனம்" என்பது வங்கித்தொழில் சட்டம் பிரிவு 17(3) இன் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாகும்.

## 6. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்[3]

6.1 பணிப்பாளர் அல்லது முன்மொழியப்பட்ட பணிப்பாளர் தற்போது உரிமம் பெற்ற வங்கிகள், அவற்றினுடைய துணை நிறுவனங்களில்[2] மற்றும் இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளில், பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு உடனடியாக முற்போந்த கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொண்ட ஏதாவது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................யில் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணை வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| கடன்பாடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

3 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது ஏதாவது கடன் வசதிகள், கடன்பாடுகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்களைக் குறிப்பதாகும்.

6.2 பணிப்பாளர் அல்லது முன்மொழியப்பட்ட பணிப்பாளர்/ பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு உடனடியாக முற்போந்த கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டு வங்கித்தொழில் சட்ட பணிப்புரை இல. 11 மற்றும் 12 பிரிவு 3(7)(i) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட "தொடர்புபட்ட நபர்களுடன்" வைத்திருக்கும் ஏதாவது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்.

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................ யில் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணை வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| கடன்பாடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

## 7. நெருங்கிய உறவினர்களின் நியமனம், பங்குரிமைகள் மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்

7.1 உரிமம் பெற்ற வங்கி/கள் அவற்றினுடைய துணை நிறுவனங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் தற்போது அவற்றினுடைய ஒரு பணிப்பாளராக அல்லது நிறைவேற்று அலுவலராக அல்லது பிரதான முகாமைத்துவத்தினுடைய ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்ட எவரேனும் நெருங்கிய உறவினர்.

| வங்கியின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

7.2 யாராவது நெருங்கிய உறவினரால் தற்போது உரிமம் பெற்ற வங்கிகளில், அதனுடைய துணை நிறுவனங்களில் மற்றும் இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் பங்குரிமை.

| நிறுவனத்தின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் வீதம் | |
|---|---|---|---|---|---|
| | | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

7.3 நெருங்கிய உறவினர்கள் தற்போது உரிமம் பெற்ற வங்கிகளில், அதனுடைய துணை நிறுவனங்களில் மற்றும் இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில், பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு உடனடியாக முற்போந்த கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொண்ட ஏதாவது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்.

| நிறுவனத்தின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | கொடுக்கல்வாங்கலின் தன்மை | கொடுக்கல்வாங்கல் திகதி | ......... யில் வரையறை (ரூ. மில்.) | ......... யில் நிலுவை (ரூ. மில்.) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ.மில்.) | வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம்(%) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

8. மேலே சொல்லப்பட்ட தகவல்களுடன் தொடர்புபட்ட ஏதாவது விபரிப்பு/ தகவல்கள் மற்றும் பணிப்பாளர் அல்லது முன்மொழியப்பட்ட பணிப்பாளரின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்காக தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்:

---

**பிரகடனம்**

மேலே கூறப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் அவை உண்மையானது எனவும் பூரணமானது எனவும் நம்புவதாக உறுதிப்படுத்துகின்றேன். மேலே வழங்கப்பட்ட தகவல்களுடன் தொடர்புபடும் தொடர்ந்து வரும் எல்லா நிகழ்வுகளையும் உடனுக்குடன் வங்கிக்கு பூரணமாக தெரியப்படுத்துவதற்கு உடன்படுகின்றேன்.

மேலே கூறப்பட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை கம்பனியினுடைய அமைப்பு அகவிதிகளோ அத்துடன் அல்லது வேறு ஏதேனும் சட்டங்களோ தடை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திகதி:** **பணிப்பாளர்/ முன்மொழியப்பட்ட பணிப்பாளரின் கையொப்பம்**

---

கம்பனிச் செயலாளரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது

1. பணிப்பாளர் அல்லது முன்மொழியப்பட்ட பணிப்பாளரின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்காக தொடர்புபட்டதெனக் கருதக்கூடிய ஏனைய தகவல்களும் மேலே கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புபட்ட ஏதாவது ஏனைய தகவல்கள் அல்லது விபரிப்புக்களும்

2. வங்கியினுடைய பணப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**திகதி** **கம்பனிச் செயலாளரின் கையொப்பமும்**
**அலுவலக முத்திரையும்**

**தொடர்பு எண்: 02/17/600/002/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 செத்தெம்பர் 21

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா

## கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள் குறைப்பு

2009ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்திலிருந்து இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை வீதங்களை அதாவது மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களை முறையே 325 அடிப்படைப் புள்ளிகளினாலும் 300 அடிப்படைப் புள்ளிகளினாலும் குறைத்ததன் மூலம் அதன் நாணயக் கொள்கை நிலையினைத் தளர்த்தியது. இதற்குப் பதிலிறுத்தும் விதத்தில், சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கி சீராக்கப்பட்டன. வங்கிகளின் கடன் வட்டி வீதங்களிலும் கூட ஒரு கால தாமதத்துடனான வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் அவை இன்னும் பூரண கீழ் நோக்கிய சீராக்கத்தைக் காட்ட வேண்டியிருக்கின்றன. அதேநேரம், தற்போதைய பேரண்டப் பொருளாதாரச் செயற்றிறனும் உறுதிப்பாடும் கடன் வட்டி வீதங்களுக்கு சேர்க்கப்பட்ட இடர்நேர்வு கொடுப்பனவில் ஒரு குறைப்பை உறுதி செய்வதுடன் வங்கிகளின் கடன் வீதங்களிற்கும் வைப்பு வீதங்களிற்கும் இடையிலான வீச்சு மேலும் குறைவடைவதற்கு வழியமைக்கின்றது.

மேலே கூறப்பட்டதனைக் கொண்டு, நாணயச் சபையானது வங்கிகள் 2010 ஒத்தோபர் இறுதியளவில் கடன் வட்டி வீதங்களை பின்வரும் மட்டங்களுக்காவது குறைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தைக் கொண்டிருக்கின்றது.

(i) வீட்டுக் கடன் மீதான வட்டி வீதங்களை ஆண்டுக்கு 14 சதவீதத்திற்குக் குறைத்தல்

(ii) கடனட்டை முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களை ஆண்டுக்கு 24 சதவீதத்திற்குக் குறைத்தல்

(iii) ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களை மேலும் ஆண்டுக்கு அண்ணளவாக 1 - 2 சதவீதத்தால் கீழ் நோக்கி சீராக்குதல்.

இதற்கிணங்க, நீங்கள் மேலே கூறப்பட்டவற்றை அமுல்படுத்துவதற்கான பொருத்தமான நடைமுறைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 செத்தெம்பர் 27

## 2010ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தங்கள்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க இறுதியாக திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினுடைய 46(1) மற்றும் 46அ பிரிவுகளினால் அளிக்கப்பட்ட அதிகாரத்தினை பிரயோகித்து, நாணயச் சபையினால் 2008 மே 8 திகதியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையினுடைய இலக்கம் 6(1)(1) பணிப்புரைகளுக்குப் பதிலாக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

6(1)(1) பொது ஒதுக்கீடுகள்

வங்கிகள் பின்வரும் அடிப்படையில் பொது ஒதுக்கீடுகளை பராமரிக்கும்:

(i) 2012 சனவரி 1 தொடக்கம், மேலுள்ள பணிப்புரை 3(4)இன்படி செயற்படுகடன்களின் மொத்தத் தொகை, மொத்த நிலுவைகள் மற்றும் மேலேயுள்ள பணிப்புரை 4(6)(1)இன்படி ஐந்தொகையில் அடங்கும் விசேட கவனிப்பு கொடுகடன்களின் மொத்த தொகை ஆகியவற்றிலிருந்து தொடர்புடைய கணக்குகளின் தேறிய வட்டித் தொங்கல் தொகை நீக்கப்பட்டு வரும் தொகையின் 0.5 சதவீதம்.

(ii) இந்த நோக்கத்திற்காக, வங்கிகள் 2010 ஒத்தோபர் 1 தொடக்கம் 5 காலாண்டுகளுக்கு, காலாண்டுக்கு 0.1 வீதம் எனும் வகையில் நடப்பிலிருக்கும் பொது ஒதுக்கீட்டு தேவைப்பாடான 1 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு குறைக்க வேண்டும்.

(iii) காசு வைப்புக்கள், தங்கம் அல்லது அதே வங்கியுடனான அரச பிணையங்கள் என்பன மூலம் பிணைப்படுத்தப்பட்ட கொடுகடன்களின் ஒரு பொது ஒதுக்கீடுகள் பேணுவது தொடர்பில் வங்கிகள் விலக்களிக்கப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக வங்கிகள் இந்த விதிவிலக்கிற்கு தகுதி பெறும் பொருட்டு பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கடன்பெறுநர் கடனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அல்லது கடன் தீராற்றல் இல்லாத போது அல்லது வங்குரோத்து நிலைமையடையும் பட்சத்தில் வங்கியானது இவ் வகையான பிணையங்களை சட்ட ரீதியாகத் தனது உடமையாக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இந்த வகையான பிணையங்களினைக் கொண்ட பரிமாற்றங்களின் அனைத்து ஆவணங்களும் எல்லா தரப்பினரையும் பிணிப்பதோடு இது, தொடர்புபட்ட நியாயாதிக்கத்தில் சட்ட ரீதியான வலியுறுத்தல்களாகவும் அமையும்.

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 செத்தெம்பர் 27

## 2010ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தங்கள்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட, 1988ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினுடைய 76ஜே(1) பிரிவினால் அளிக்கப்பட்ட அதிகாரத்தினை பிரயோகித்து, நாணயச் சபையால் 2008 மே 8 திகதியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையினுடைய இலக்கம் 6(1)(1) பணிப்புரைகளுக்குப் பதிலாக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

6(1)(1) பொது ஒதுக்கீடுகள்

வங்கிகளின் பின்வரும் அடிப்படையில் பொது ஒதுக்கீடுகளை பராமரிக்கும்:

(i) 2012 சனவரி 1 தொடக்கம், மேலுள்ள பணிப்புரை 3(4)இன்படி செயற்படுகடன்களின் மொத்தத் தொகை, மொத்த நிலுவைகள் மற்றும் மேலேயுள்ள பணிப்புரை 4(6)(1)இன்படி ஐந்தொகையில் அடங்கும் விசேட கவனிப்பு கொடுகடன்களின் மொத்த தொகை ஆகியவற்றிலிருந்து தொடர்புடைய கணக்குகளின் தேறிய வட்டித் தொங்கல் தொகை நீக்கப்பட்டு வரும் தொகையின் 0.5 சதவீதம்.

(ii) இந்த நோக்கத்திற்காக, வங்கிகள் 2010 ஒத்தோபர் 1 தொடக்கம் 5 காலாண்டுகளுக்கு, காலாண்டுக்கு 0.1 வீதம் எனும் வகையில் நடப்பிலிருக்கும் பொது ஒதுக்கீட்டு தேவைப்பாடான 1 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு குறைக்க வேண்டும்.

(iii) காசு வைப்புக்கள், தங்கம் அல்லது அதே வங்கியுடனான அரச பிணையங்கள் என்பன மூலம் பிணைப்படுத்தப்பட்ட கொடுகடன்களின் ஒரு பொது ஒதுக்கீடுகள் பேணுவது தொடர்பில் வங்கிகள் விலக்களிக்கப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக வங்கிகள் இந்த விதிவிலக்கிற்கு தகுதி பெறும் பொருட்டு பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கடன்பெறுநர் கடனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அல்லது கடன் தீராற்றல் இல்லாத போது அல்லது வங்குரோத்து நிலைமையடையும் பட்சத்தில் வங்கியானது இவ் வகையான பிணையங்களை சட்ட ரீதியாகத் தனது உடமையாக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இந்த வகையான பிணையங்களினைக் கொண்ட பரிமாற்றங்களின் அனைத்து ஆவணங்களும் எல்லா தரப்பினரையும் பிணிப்பதோடு இது, தொடர்புபட்ட நியாயாதிக்கத்தில் சட்ட ரீதியான வலியுறுத்தல்களாகவும் அமையும்.

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 செத்தெம்பர் 27

## 2010ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## வைப்புப் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகித்து, நாணயச் சபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 2010 ஒத்தோபர் 1 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இப் பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

**1. எடுத்துக்காட்டு**

1.1 இப் பணிப்புரைகளானது வைப்புப் பொறுப்பு காப்புறுதி மீதான 2010ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2. அதிகாரமளிக்கும் சட்ட ரீதியான ஏற்பாடுகள்**

2.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் நியதிகளின்படி வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் தன்மையை உறுதிப்படுத்தும் முகமாக, வங்கி அல்லது வங்கிகள் வியாபாரத்தினை மேற்கொள்ள வேண்டிய முறை பற்றி நாணயச் சபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அவை வியாபாரத்தினைக் கொண்டு நடாத்தப்படும் ஏதாவது விடயம் தொடர்பாக பணிப்புரைகளை வழங்க முடியும்.

**3. பணிப்புரைகளின் நோக்கம்**

3.1 வங்கித்தொழிலின் சட்ட ரீதியான முன்னேற்பாடுகள் மற்றும் சிறந்த செயற்பாடுகளின் அடிப்படையில், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் என்பது ஒரு பிரதானமான வர்த்தகமாக இருப்பதுடன் இது வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மை மீது தீவிரமாகத் தங்கியிருப்பதால் வினைத்திறனான இடர்முகாமைத்துவ நடவடிக்கைகளை வேண்டி நிற்கின்றது. அவ்வாறெனின், வைப்புக்களினுடைய காப்புறுதியானது மிகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு வலை நடவடிக்கையாக இருக்கின்றதுடன் அது பொதுமக்களின் நம்பகத்தன்மையையும் மற்றும் வங்கித்தொழில் முறைமைகளினுடைய உறுதித்தன்மையையும் பாதுகாப்பதுடன் மேம்படுத்தவும் செய்யும்

**4. வைப்புக்களின் காப்புறுதி**

4.1 எனவே, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் தமது வைப்புப் பொறுப்புக்களை 2010 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும், நாணயச் சட்டத்தின் பிரிவுகள் 32அ தொடக்கம் 32உ வரையிலானவற்றின் கீழ் வழங்கப்பட்ட 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித்திட்ட ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் நாணயச் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற வைப்புக் காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி செய்ய வேண்டும்

4.2 வைப்பாளர் ஒருவருக்கு ஆகக்கூடியது ரூ.200,000 வரையான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுக்கான பொருத்தமான தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் நாணயச் சபையால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தில் அவற்றின் தகுதியான வைப்புப் பொறுப்புக்கள் காப்புறுதி செய்யப்பட்டுவிட்டன என்பதை அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் வைப்புக்களுக்காக வேண்டுகோள் விடுக்கும் அவர்களுடைய விளம்பரங்களில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 செத்தெம்பர் 27

## 2010ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## வைப்புப் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகித்து, நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு 2010 ஒத்தோபர் 1 இலிருந்து அமுலுக்கு வரும் இப் பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

**1. எடுத்துக்காட்டல்**

1.1 இப் பணிப்புரைகளானது வைப்புப் பொறுப்பு காப்புறுதி மீதான 2010ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2. அதிகாரமளிக்கும் சட்ட ரீதியான ஏற்பாடுகள்**

2.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் நியதிகளின்படி வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் தன்மையை உறுதிப்படுத்தும் முகமாக, வங்கி அல்லது வங்கிகள் வியாபாரத்தினை மேற்கொள்ள வேண்டிய முறை பற்றி நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு அவை வியாபாரத்தினைக் கொண்டு நடாத்தப்படும் ஏதாவது விடயம் தொடர்பாக பணிப்புரைகளை வழங்க முடியும்.

**3. பணிப்புரைகளின் நோக்கம்**

3.1 வங்கித்தொழிலின் சட்ட ரீதியான முன்னேற்பாடுகள் மற்றும் சிறந்த செயற்பாடுகளின் அடிப்படையில், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் என்பது ஒரு பிரதானமான வர்த்தகமாக இருப்பதுடன் இது வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மை மீது தீவிரமாகத் தங்கியிருப்பதால் வினைத்திறனான இடர்முகாமைத்துவ நடவடிக்கைகளை வேண்டி நிற்கின்றது. அவ்வாறெனின், வைப்புக்களினுடைய காப்புறுதியானது மிகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு வலை நடவடிக்கையாக இருக்கின்றதுடன் அது பொதுமக்களின் நம்பகத்தன்மையையும் மற்றும் வங்கித்தொழில் முறைமைகளினுடைய உறுதித்தன்மையையும் பாதுகாப்பதுடன் மேம்படுத்தவும் செய்யும்

**4. வைப்புக்களின் காப்புறுதி**

4.1 எனவே, அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தமது வைப்புப் பொறுப்புக்களை 2010 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும், நாணயச் சட்டத்தின் பிரிவுகள் 32அ தொடக்கம் 32உ வரையிலானவற்றின் கீழ் வழங்கப்பட்ட 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித்திட்ட ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் நாணயச் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற வைப்புக் காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி செய்ய வேண்டும்

4.2 வைப்பாளர் ஒருவருக்கு ஆகக்கூடியது ரூ.200,000 வரையான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுக்கான பொருத்தமான தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் நாணயச் சபையால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தில் அவற்றின் தகுதியான வைப்புப் பொறுப்புக்கள் காப்புறுதி செய்யப்பட்டுவிட்டன என்பதை அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் வைப்புக்களுக்காக வேண்டுகோள் விடுக்கும் அவர்களுடைய விளம்பரங்களில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 நவெம்பர் 2

**2010ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்**

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகித்து நாணயச் சபையானது பணிகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் மீதான பின்வரும் பணிப்புரைகளை இத்தால் வெளியிடுகின்றது.

**1. எடுத்துக்காட்டல்**

1.1 இப் பணிப்புரையானது வங்கித்தொழில் சட்டத்தின் 2010ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம். இப் பணிப்புரைகளில் குறிப்பிடப்படும் பிரிவுகள், 2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்.

**2. வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழான அதிகாரமளிப்பு**

2.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் நியதிகளின்படி வங்கித்தொழில் முறைமையின் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்கும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் எந்தவொரு வியாபார நடவடிக்கைகளும் நடாத்தப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலான பணிப்புரைகளை விடுப்பதற்கும் நாணயச் சபைக்கு அதிகாரமுண்டு. அதற்கு அமைவாக இப் பணிப்புரைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தங்கள் வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைக்கும் போது ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டன.

**3. வெளியாட்களிடம் ஒப்படைத்தல் பற்றிய வரைவிலக்கணம் மற்றும் பிரயோகம்**

3.1 "வெளியாட்களிடம் ஒப்படைத்தல் ஒப்பந்தம்" என்பது உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கும் பணி வழங்குநருக்கும் இடையிலான ஒப்பந்தமாகும். அதில் பணி வழங்குநர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நடைமுறைகளுக்கு தொடர்பான செயற்பாடு, தொழிற்பாடு அல்லது செயன்முறையை செயற்படுத்துபவராக இருத்தல் வேண்டும்.

3.2 வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகளை, வங்கி தொடர்பான செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த வளங்கள் மற்றும் செயற்படுத்தும் திறனைக் கொண்டுள்ள வெளி பணி வழங்குநர்களுடன் மாத்திரமே செய்து கொள்ள முடியும்.

3.3 வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஊழியர்களினால் பெரும்பாலான உரிமையை கொண்ட மற்றும்/ அல்லது ஊழியர்களின் கிட்டிய உறவுகளைக் கொண்ட பணி வழங்குநருடன் செய்யப்படலாகாது.

3.4 இப் பணிப்புரைகளானது, நிதியியல் பணிகளுடன் நேரடியாக தொடர்பில்லாத வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளான தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயற்பாடுகள் நீங்கலாக கூரியர், அலுவலர்களுக்கு உணவளித்தல் சேவை, பணிமனை பராமரித்தல் மற்றும் சுகாதார சேவைகள் மற்றும் அலுவலக பாதுகாப்பு என்பனவற்றிற்கு ஏற்புடையதல்ல.

**4. வெளியாட்களிடம் ஒப்படைக்கக்கூடிய செயற்பாடுகள்**

4.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கீழே பட்டியலிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைக்கலாம்.

- வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முகாமைத்துவம்
- இணங்குவிப்பு
- வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் மற்றும் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளல்

- திறைசேரி செயற்பாடுகள்
- இடர்நேர்வு முகாமைத்துவம்
- முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட (பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட) கடன்கள் நீங்கலாக அனைத்துக் கடன் வசதிகளுக்கு அனுமதியளித்தல்
- உள்ளக கணக்காய்வானது வங்கியின் பரிமாணம் மற்றும் இடர்நேர்வு அளவானது உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டை செயற்படுத்த முழு நேர உள்ளக கணக்காய்வு ஊழியர்களின் பணித் தேவையை நியாயப்படுத்தாதவிடத்து/ அதன் உள்ளக கணக்காய்வின் அல்லது வங்கியானது சிறப்பியல்பு பகுதிகளில் ஒன்றான தகவல் தொழில்நுட்ப கணக்காய்வில் சிறப்புத் தேர்ச்சி உள்ளவர்கள் இல்லாதவிடத்து வங்கியானது தனது சொந்த வெளியக கணக்காய்வாளர் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வெளியக கணக்காய்வாளர் அணியிலுள்ள கணக்காய்வாளர் ஒருவரை உள்ளக கணக்காய்வு பணி வழங்குநராக ஏற்பாடு செய்யலாம்.

**5. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் மீதான கொள்கைகள்**

5.1 வங்கியின் செயற்பாடுகள் எவ்வாறு சரியான முறையில் வெளியாட்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை கணிப்பீடு செய்வதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் விரிவான கொள்கையொன்றினை கொண்டிருத்தல் வேண்டும். கொள்கையானது குறைந்தபட்சம் கீழே குறிக்கப்பட்டவைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் நடவடிக்கைகளுக்கும் மற்றும் கொள்கை வகுப்புக்களுக்குமான பணிப்பாளர் சபையினதும் அல்லது கணக்காய்வு குழு மற்றம் மூத்த முகாமைத்துவத்தினதும் அனைத்து பொறுப்புக்கள்

ஆ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் நடவடிக்கையால் உருவாகும் இடர்நேர்வுகளை அடையாளம் காணவும் அவற்றை திறமையாக முகாமைத்துவம் செய்யவுமான ஒரு கட்டமைப்பு

இ) வெளியாட்களிடம் ஒப்படைக்கப்படவுள்ள ஒவ்வொரு நடவடிக்கை அல்லது செயற்பாடு அல்லது செய்முறையின் பயன் பகுப்பாய்வு

ஈ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் சேவைகளைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய விலைக் குறிப்பீட்டு நடைமுறைகள்

உ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகள் இருப்பின் அவற்றை கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வங்கியில் ஒரு தனி செயலகம் ஒன்றை அமைத்தல்

ஊ) பணி வழங்குநரை தெரிந்து கொள்ளல் மற்றும் நெருக்கமாகக் கவனித்தல் என்பனவற்றிற்கான செயற்றிட்டம்

எ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தும் ஒப்பந்த பொறுப்பை செயற்படுத்துவதற்கு பணி வழங்குநரின் ஆற்றல், திறன் மற்றும் கட்டண முறை/ வழி என்பவற்றை கணிப்பீடு செய்யும் முறை

ஏ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாட்டினை சட்ட பூர்வமாக பிணிக்கக் கூடிய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் வடிவமைப்பு குறைந்தபட்சம் பின்வருவனவற்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

- பணிகளின் தரங்கள்
- உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரினதும் எதிர்பார்ப்புகள்
- தகராறுகளை தீர்க்கும் முறை
- தகவல்களை பாதுகாப்பது மற்றும் இரகசியமாக வைத்திருத்தல்
- ஒப்பந்தத்தினை முடிவிற்கு கொண்டு வருதல்
- பதில் ஒப்பந்தங்கள் இருப்பின், மற்றும்
- தடங்கலற்ற வியாபார முகாமைத்துவம்

ஐ) பணி வழங்குநரால் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை வழங்க முடியாதுள்ள ஒரு அவசரமான வேளை எழும் பொழுது, அவ் வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை வங்கியின் உள்ளகத்திற்கு கொண்டு வருவதற்கான செலவுகள், நேரம் மற்றும் வளங்கள் என்பன உள்ளடங்கலான ஒரு குறிப்பிட்ட தடங்கலற்ற திட்டம்.

ஒ) வேறுபட்ட நாட்டுச் சூழல்களின் வேறுபாடுகளை கருத்தில் கொண்டு எல்லை கடந்த வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் நடவடிக்கைகளுக்கான செயற்றிட்டம்.

ஓ) பெறுமானம் மற்றும் ஒப்பந்தங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு பணி வழங்குநருக்கு கூடிய பட்சம் வழங்கக்கூடிய பணிகளின் வரையறை.

**6. தடங்கலற்ற வியாபார முகாமைத்துவம்**

6.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது வங்கியின் வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்த ஏற்பாடுகள் அடங்கலாக வங்கியின் எல்லா செயன்முறைகளையும் உள்ளடக்கியதாக இருத்தலை உறுதி செய்ய வேண்டும்.

6.2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பணி வழங்குநர் திருப்தி அளிக்கும் வகையில் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் மற்றும் அத் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் முறையான பரீட்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

**7. கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு**

7.1 எல்லா வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகள் தலைமை அலுவலகத்திலுள்ள வங்கியின் பிரிவு/அலகால் கையாளப்படுதல் வேண்டும்.

7.2 கண்காணிப்புப் பிரிவானது பிரச்சனைகளை கையாளுதல், அப் பிரச்சனைகளின் அறிக்கைகளை பராமரித்தல், வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை காலத்திற்குக் காலம் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

7.3 வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணி செயற்பாட்டின் வகை, செலவு, பரிமாணம், வழங்கப்பட வேண்டியவை மற்றும் ஒப்பந்தம் புதுப்பித்தல் மற்றும் காலாவதியாகும் திகதிகள், பிரச்சனைகள் மற்றும் பணி வழங்குநரின் நிதி மற்றும் செயற்பாட்டு நிலைமை என்பனவற்றை உள்ளடக்கிய தகவல்களை ஒழுங்கான முறையில் தருவதற்கேற்ற ஒரு சரியான முகாமைத்துவ தகவல் முறையை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நிறுவ வேண்டும்.

**8. சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் என்பனவற்றுடன் தொடர்புடைய பணிகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்**

8.1 பணி வழங்குநரால் சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் நடவடிக்கைகளுக்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்கள் தமது கடமைகளை கவனமாகவும், முன்னெச்சரிக்கையாகவும் செய்வதற்கு சரியான முறையில் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உறுதி செய்ய வேண்டும்.

8.2 பணி வழங்குநர், வங்கியின் வாடிக்கையாளர்களின் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மற்றும் சந்தேக கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு வழங்குதல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கடமையாகும்.

**9. ஏனைய தேவைப்பாடுகள்**

9.1 01.01.2011 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் திட்டமிடப்பட்டுள்ள வெளியிலிருந்து பணிகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக குறித்த ஆண்டுக்கான தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு சனவரி 31 இற்கு முன் தெரியப்படுத்தல் வேண்டும்.

**10. தற்போதுள்ள ஏற்பாடுகளின் மதிப்பீடு**

10.1 அனைத்து வங்கிகளும் தமது தற்போதுள்ள வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகளை சுய மதிப்பீடு செய்து அவற்றை இப் பணிப்புரைகளுக்கு இசைவாக 2011.06.30 இற்கு முன் ஒழுங்கமைத்து அவற்றை வங்கி மேற்பார்வை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**11. மாற்றத்திற் குள்ளாகின்ற ஏற்பாடுகள்**

11.1 இப் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவது 2011.01.01 இலிருந்து ஆரம்பிப்பதுடன் தற்போது வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகளை கையாண்டு கொண்டிருக்கும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவை தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய பட்டியலொன்றை 2010.12.31 இற்கு முன் அல்லது அன்று சமர்ப்பிக்க வேண்டும்.

**12. அறிக்கையின் படிவம்**

12.1 வங்கிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை 9(1) மற்றும் 11(1) இலுள்ள மத்திய வங்கிக்கு அறிக்கையிடும் தேவைக்கு பயன்படுத்தவும்

**........ ஆண்டுப் பகுதியில் வெளியாட்களிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள/ ஒப்படைக்கவிருக்கும் வியாபார நடவடிக்கைகள்**

**வங்கியின் பெயர்:**

| | வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள/ ஒப்படைக்கவிருக்கும் செயற்பாடு/ தொழிற்பாடு/ செயன்முறை | பணி வழங்குநரின் பெயர் | விலாசம் | தொடங்கும் திகதி | கால எல்லை | சம்பந்தப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப் படத்தக்க பணிகள் | செலவு (வருடமொன்றிற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | | |
| 2. | | | | | | | | |
| 3. | | | | | | | | |
| 4. | | | | | | | | |

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 நவெம்பர் 2

## 2010ஆம் ஆண்டு 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) பிரிவினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகித்து நாணயச் சபையானது பணிகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் மீதான பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றது.

**1. எடுத்துக்காட்டல்**

1.1 இப் பணிப்புரையானது வங்கித்தொழில் சட்டத்தின் 2010ஆம் ஆண்டு 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம். இப் பணிப்புரைகளில் குறிப்பிடப்படும் பிரிவுகள், 2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்.

**2. வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் கீழான அதிகாரமளிப்பு**

2.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் நியதிகளின்படி வங்கித்தொழில் முறைமையின் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்கும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் எந்தவொரு வியாபார நடவடிக்கைகளும் நடாத்தப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலான பணிப்புரைகளை விடுப்பதற்கும் நாணயச் சபைக்கு அதிகாரமுண்டு. அதற்கு அமைவாக இப் பணிப்புரைகள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தங்கள் வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைக்கும் போது ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டன.

**3. வெளியாட்களிடம் ஒப்படைத்தல் பற்றிய வரைவிலக்கணம் மற்றும் பிரயோகம்**

3.1 "வெளியாட்களிடம் ஒப்படைத்தல் ஒப்பந்தம்" என்பது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பணி வழங்குநருக்கும் இடையிலான ஒப்பந்தமாகும். அதில் பணி வழங்குநர் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் நடைமுறைகளுக்கு தொடர்பான செயற்பாடு, தொழிற்பாடு அல்லது செயன்முறையை செயற்படுத்துபவராக இருத்தல் வேண்டும்.

3.2 வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகளை, வங்கி தொடர்பான செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த வளங்கள் மற்றும் செயற்படுத்தும் திறனைக் கொண்டுள்ள வெளி பணி வழங்குநர்களுடன் மாத்திரமே செய்து கொள்ள முடியும்.

3.3 வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஊழியர்களினால் பெரும்பாலான உரிமையை கொண்ட மற்றும்/ அல்லது ஊழியர்களின் கிட்டிய உறவுகளைக் கொண்ட பணி வழங்குநருடன் செய்யப்படலாகாது.

3.4 இப் பணிப்புரைகளானது, நிதியியல் பணிகளுடன் நேரடியாக தொடர்பில்லாத வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளான தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயற்பாடுகள் நீங்கலாக கூரியர், அலுவலர்களுக்கு உணவளித்தல் சேவை, பணிமனை பராமரித்தல் மற்றும் சுகாதார சேவைகள் மற்றும் அலுவலக பாதுகாப்பு என்பனவற்றிற்கு ஏற்புடையதல்ல.

**4. வெளியாட்களிடம் ஒப்படைக்கக்கூடிய செயற்பாடுகள்**

4.1 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் கீழே பட்டியலிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைக்கலாம்.

- வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முகாமைத்துவம்
- இணங்குவிப்பு
- வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் மற்றும் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளல்

- திறைசேரி செயற்பாடுகள்
- இடர்நேர்வு முகாமைத்துவம்
- முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட (பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட) கடன்கள் நீங்கலாக அனைத்துக் கடன் வசதிகளுக்கு அனுமதியளித்தல்
- உள்ளக கணக்காய்வானது வங்கியின் பரிமாணம் மற்றும் இடர்நேர்வு அளவானது உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டை செயற்படுத்த முழு நேர உள்ளக கணக்காய்வு ஊழியர்களின் பணித் தேவையை நியாயப்படுத்தாதவிடத்து/ அதன் உள்ளக கணக்காய்வின் அல்லது வங்கியானது சிறப்பியல்பு பகுதிகளில் ஒன்றான தகவல் தொழில்நுட்ப கணக்காய்வில் சிறப்புத் தேர்ச்சி உள்ளவர்கள் இல்லாதவிடத்து வங்கியானது தனது சொந்த வெளியக கணக்காய்வாளர் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வெளியக கணக்காய்வாளர் அணியிலுள்ள கணக்காய்வாளர் ஒருவரை உள்ளக கணக்காய்வு பணி வழங்குநராக ஏற்பாடு செய்யலாம்.

**5. வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் மீதான கொள்கைகள்**

5.1 வங்கியின் செயற்பாடுகள் எவ்வாறு சரியான முறையில் வெளியாட்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை கணிப்பீடு செய்வதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் விரிவான கொள்கையொன்றினை கொண்டிருத்தல் வேண்டும். கொள்கையானது குறைந்தபட்சம் கீழே குறிக்கப்பட்டவைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் நடவடிக்கைகளுக்கும் மற்றும் கொள்கை வகுப்புக்களுக்குமான பணிப்பாளர் சபையினதும் அல்லது கணக்காய்வு குழு மற்றும் மூத்த முகாமைத்துவத்தினதும் அனைத்துப் பொறுப்புக்கள்

ஆ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைக்கும் நடவடிக்கையால் உருவாகும் இடர்நேர்வுகளை அடையாளம் காணவும் அவற்றை திறமையாக முகாமைத்துவம் செய்யவுமான ஒரு கட்டமைப்பு

இ) வெளியாட்களிடம் ஒப்படைக்கப்படவுள்ள ஒவ்வொரு நடவடிக்கை அல்லது செயற்பாடு அல்லது செய்முறையின் பயன் பகுப்பாய்வு

ஈ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் சேவைகளைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய விலைக் குறிப்பீட்டு நடைமுறைகள்

உ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகள் இருப்பின் அவற்றை கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வங்கியில் ஒரு தனி செயலகம் ஒன்றை அமைத்தல்

ஊ) பணி வழங்குநரை தெரிந்து கொள்ளல் மற்றும் நெருக்கமாகக் கவனித்தல் என்பனவற்றிற்கான செயற்றிட்டம்

எ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தும் ஒப்பந்த பொறுப்பை செயற்படுத்துவதற்கு பணி வழங்குநரின் ஆற்றல், திறன் மற்றும் கட்டண முறை/ வழி என்பவற்றை கணிப்பீடு செய்யும் முறை

ஏ) வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாட்டினை சட்ட பூர்வமாக பிணிக்கக் கூடிய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் வடிவமைப்பு குறைந்தபட்சம் பின்வருவனவற்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

- பணிகளின் தரங்கள்
- உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரினதும் எதிர்பார்ப்புகள்
- தகராறுகளை தீர்க்கும் முறை
- தகவல்களை பாதுகாப்பது மற்றும் இரகசியமாக வைத்திருத்தல்
- ஒப்பந்தத்தினை முடிவிற்கு கொண்டு வருதல்
- பதில் ஒப்பந்தங்கள் இருப்பின், மற்றும்
- தடங்கலற்ற வியாபார முகாமைத்துவம்

ஐ) பணி வழங்குநரால் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை வழங்க முடியாதுள்ள ஒரு அவசரமான வேளை எழும் பொழுது, அவ் வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை வங்கியின் உள்ளகத்திற்கு கொண்டு வருவதற்கான செலவுகள், நேரம் மற்றும் வளங்கள் என்பன உள்ளடங்கலான ஒரு குறிப்பிட்ட தடங்கலற்ற திட்டம்.

ஒ) வேறுபட்ட நாட்டுச் சூழல்களின் வேறுபாடுகளை கருத்தில் கொண்டு எல்லை கடந்த வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் நடவடிக்கைகளுக்கான செயற்றிட்டம்.

ஓ) பெறுமானம் மற்றும் ஒப்பந்தங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு பணி வழங்குநருக்கு கூடிய பட்சம் வழங்கக்கூடிய பணிகளின் வரையறை.

**6. தடங்கலற்ற வியாபார முகாமைத்துவம்**

6.1 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது வங்கியின் வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்த ஏற்பாடுகள் அடங்கலாக வங்கியின் எல்லா செயன்முறைகளையும் உள்ளடக்கியதாக இருத்தலை உறுதி செய்ய வேண்டும்.

6.2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பணி வழங்குநர் திருப்தி அளிக்கும் வகையில் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் மற்றும் அத் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் முறையான பரீட்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

**7. கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு**

7.1 எல்லா வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகள் தலைமை அலுவலகத்திலுள்ள வங்கியின் பிரிவு/அலகால் கையாளப்படுதல் வேண்டும்.

7.2 கண்காணிப்புப் பிரிவானது பிரச்சனைகளை கையாளுதல், அப் பிரச்சனைகளின் அறிக்கைகளை பராமரித்தல், வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை காலத்திற்குக் காலம் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

7.3 வெளியாட்களிடன் ஒப்படைக்கப்பட்ட பணி செயற்பாட்டின் வகை, செலவு, பரிமாணம், வழங்கப்பட வேண்டியவை மற்றும் ஒப்பந்தம் புதுப்பித்தல் மற்றும் காலாவதியாகும் திகதிகள், பிரச்சனைகள் மற்றும் பணி வழங்குநரின் நிதி மற்றும் செயற்பாட்டு நிலைமை என்பனவற்றை உள்ளடக்கிய தகவல்களை ஒழுங்கான முறையில் தருவதற்கேற்ற ஒரு சரியான முகாமைத்துவ தகவல் முறையை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் நிறுவ வேண்டும்.

**8. சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் என்பனவற்றுடன் தொடர்புடைய பணிகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்**

8.1 பணி வழங்குநரால் சந்தைப்படுத்தல் மற்றும் அறவிடல் நடவடிக்கைகளுக்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்கள் தமது கடமைகளை கவனமாகவும், முன்னெச்சரிக்கையாகவும் செய்வதற்கு சரியான முறையில் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதனை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் உறுதி செய்ய வேண்டும்.

8.2 பணி வழங்குநர், வங்கியின் வாடிக்கையாளர்களின் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மற்றும் சந்தேக கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு வழங்குதல் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கடமையாகும்.

**9. ஏனைய தேவைப்பாடுகள்**

9.1 01.01.2011 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் திட்டமிடப்பட்டுள்ள வெளியிலிருந்து பணிகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக குறித்த ஆண்டுக்கான தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு சனவரி 31 இற்கு முன் தெரியப்படுத்தல் வேண்டும்.

**10. தற்போதுள்ள ஏற்பாடுகளின் மதிப்பீடு**

10.1 அனைத்து வங்கிகளும் தமது தற்போதுள்ள வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகளை சுய மதிப்பீடு செய்து அவற்றை இப் பணிப்புரைகளுக்கு இசைவாக 2011.06.30 இற்கு முன் ஒழுங்கமைத்து அவற்றை வங்கி மேற்பார்வை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**11. மாற்றத்திற் குள்ளாகின்ற ஏற்பாடுகள்**

11.1 இப் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவது 2011.01.01 இலிருந்து ஆரம்பிப்பதுடன் தற்போது வெளியாட்களிடம் பணிகளை ஒப்படைத்தல் ஏற்பாடுகளை கையாண்டு கொண்டிருக்கும் அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அவை தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய பட்டியலொன்றை 2010.12.31 இற்கு முன் அல்லது அன்று சமர்ப்பிக்க வேண்டும்.

**12. அறிக்கையின் படிவம்**

12.1 வங்கிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை 9(1) மற்றும் 11(1) இலுள்ள மத்திய வங்கிக்கு அறிக்கையிடும் தேவைக்கு பயன்படுத்தவும்

**இணைப்பு**

**....... ஆண்டுப் பகுதியில் வெளியாட்களிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள/ ஒப்படைக்கவிருக்கும் வியாபார நடவடிக்கைகள்**

**வங்கியின் பெயர்:**

| | வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள/ ஒப்படைக்கவிருக்கும் செயற்பாடு/ தொழிற்பாடு/ செயன்முறை | பணி வழங்குநரின் பெயர் | விலாசம் | தொடங்கும் திகதி | கால எல்லை | சம்பந்தப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப் படத்தக்க பணிகள் | செலவு (வருடமொன்றிற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | | |
| 2. | | | | | | | | |
| 3. | | | | | | | | |
| 4. | | | | | | | | |

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 8 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட சட்ட தீர்மானங்கள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 நவெம்பர் 8

## 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம்

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்

**எடுத்துக்காட்டல்**

1 இத் தீர்மானமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் என எடுத்துக்காட்டப்படலாம். இத் தீர்மானத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள், திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8இன் கீழான அதிகாரமளிப்பு**

2 (i) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1)இன் நியதிகளின்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் நாணயச் சபையினால், அவ் வங்கிகளில் மேற்கொள்ளப்படும் வேறுபட்ட வங்கித்தொழில் வியாபாரங்களை கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றவாறான வருடாந்த உரிமக் கட்டணத்தினை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டும்.

(ii) வங்கித்தொழில் சட்டப் பிரிவு 8(2)இன் நியதிகளுக்கிணங்க அத்தகைய ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் செலுத்த வேண்டிய உரிமத் தொகையையும் அவை செலுத்தப்பட வேண்டிய வழிமுறையையும் நாணயச் சபை அறிவிக்கும்.

**2011இற்கான ஆண்டு உரிமக் கட்டணம்**

3 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1) இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கிணங்க, உரிமம் பெற்ற வர்த்த வங்கியொன்று செலுத்த வேண்டிய 2011ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணத்தினை மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் பின்வருமாறு இருக்குமென நாணயச் சபை தீர்மானித்தது:

| முந்திய ஆண்டு இறுதியிலுள்ள மொத்தச் சொத்துக்கள் | உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூ. 75 பில்லியனுக்கு மேற்பட்டது | ரூ. 10 மில்லியன் |
| ரூ. 25 பில்லியனுக்கும் ரூ. 75 பில்லியனுக்கும் இடைப்பட்டது | ரூ. 5 மில்லியன் |
| ரூ. 25 பில்லியனுக்கு குறைந்தது | ரூ. 2 மில்லியன் |

**உரிமக் கட்டணம் செலுத்துதல்**

4 (i) ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் 2011ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணத்தினை 2010 சனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(ii) 2011இல் உரிமம் பெறும் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் வழங்கப்படுவதற்கு முன்னதாக 2011இற்குரிய உரிமக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 76டி(6) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 நவெம்பர் 8

## 2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்

**எடுத்துக்காட்டல்**

1 இத் தீர்மானமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் என எடுத்துக்காட்டப்படலாம். இத் தீர்மானத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள், திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76டி(6)இன் கீழான அதிகாரமளிப்பு**

2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76டி(6)இன் நியதிகளின்படி உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒவ்வொன்றும் நாணயச் சபையினால், அவ் வங்கிகளில் மேற்கொள்ளப்படும் வேறுபட்ட வங்கித்தொழில் வியாபாரங்களை கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றவாறான வருடாந்த உரிமக் கட்டணத்தினை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டும்.

**2011இற்கான ஆண்டு உரிமக் கட்டணம்**

3 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76டி(6) இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கிணங்க, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று செலுத்த வேண்டிய 2011ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணத்தினை மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் பின்வருமாறு இருக்குமென நாணயச் சபை தீர்மானித்தது.

| முந்திய ஆண்டு இறுதியில் மொத்தச் சொத்துக்கள் | உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூ. 75 பில்லியனுக்கு மேற்பட்டது | ரூ. 10 மில்லியன் |
| ரூ. 25 பில்லியனுக்கும் ரூ. 75 பில்லியனுக்கும் இடைப்பட்டது | ரூ. 5 மில்லியன் |
| ரூ. 25 பில்லியனுக்கு குறைந்தது | ரூ. 2 மில்லியன் |

**உரிமக் கட்டணம் செலுத்துதல்**

4 (i) ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் அதற்குரிய உரிமக் கட்டணத்தினை 2010 சனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(ii) 2011இல் உரிமம் பெறும் ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் உரிமம் வழங்கப்படுவதற்கு முன்னதாக 2011இற்குரிய உரிமக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 44ஏ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட தீர்மானங்கள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 நவெம்பர் 24

## 2010ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம்

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பவற்றை மதிப்பிடுதல்

**எடுத்துக்காட்டல்**

1 இந் தீர்மானமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2010ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் என எடுத்துக்காட்டப்படலாம். இத் தீர்மானத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்.

**அதிகாரமளித்தல்**

2.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவின் 44ஏ நியதிகளின்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில், நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிறைவேற்று பணிகளை ஆற்றும் அலுவலர்கள் பொருத்தம் மற்றும் தகுதியான ஆட்களாக இருக்க வேண்டும். வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 42(2), நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர் பொருத்தம் மற்றும் தகுதியான ஆட்களா என தீர்மானிப்பதற்கு பிரயோகிக்கப்படும்.

2.2 மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கம்பனி ஆளுகை மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரையில் செய்யப்பட்ட பிரமாணங்களும் இலங்கையில் ஏற்புடைத்தாகும்.

**நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள்**

3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் பின்வரும் பதவிகளில்/ நிலைகளில் உள்ள அலுவலர்கள் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) மேலதிக பொது முகாமையாளர்
(ii) மூத்த துணை பொது முகாமையாளர்
(iii) துணை பொது முகாமையாளர்
(iv) உதவிப் பொது முகாமையாளர்
(v) முதன்மை தொழிற்பாட்டு அலுவலர்
(vi) முதன்மை இடர்நேர்வு அலுவலர்
(vii) முதன்மை கணக்காளர்
(viii) முதன்மை நிதியியல் அலுவலர்
(ix) முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர்
(x) இணங்குவிப்பு அலுவலர்
(xi) திறைசேரி தலைவர்
(xii) சட்டத்துறை தலைவர்
(xiii) தகவல் தொழில்நுட்ப தலைவர்
(xiv) பணிப்பாளர் சபைச் செயலாளர்
(xv) பணிப்பாளர் சபை/ வங்கிக்கு ஆலோசகர்கள்/ மதியுரையாளராக கடமையாற்றும் அலுவலர்கள்
(xvi) இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைக்கான 2007ஆம் ஆண்டு வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 11இன் பிரிவு 3(1)(i)(ஊ)இன் வரைவிலக்கணத்தில் கீழ்வரும் எவரேனும் அலுவலர்கள்

**பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

4.1 நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் இத்தகைய அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பன வங்கித்தொழில் சட்டத்தில் தொகுக்கப்பட்டவாறு வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டு தீர்மானிக்கப்படுவதோடு பின்வரும் அலுவலர்களுக்கு பொருந்துவதாகவும் இருக்கும்.

(i) தற்போது அலுவலகத்தில் இருப்போர்

(ii) நிரந்தரமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெறும் வேளையில்

(iii) தொழில் ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் வேளையில்; அத்துடன்

(iv) வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளரின் தீர்மானத்திற்கமைய ஏதாவதொரு அலுவலர் மீது மேற்பார்வை விடயம் தொடர்பான அக்கறைகள் எழும் ஏதேனும் நேரத்தில்

4.2 ஒவ்வொரு வங்கியும் தகுதியான அலுவலர்களிடமிருந்து இணைப்பு I மற்றும் இணைப்பு IIஇல் தரப்பட்ட முறையே சத்தியப் பிரமாணம் ஒன்றையும் பிரகடனம் ஒன்றையும் பெறுவதோடு அவற்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3 இதற்கு மேலாக, ஒரு அலுவலர் முதன் முதலாகப் பதவியேற்கும் போது, இதற்கு உடனடியாக முற்போந்த (முன்பாக வேலை பார்த்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் முன்னாள் ஊழியராக இல்லாத போது) தொழில்தருநரிடமிருந்து குறிப்பிட்ட நிறுவனத்தில் ஆற்றிய கடமைகளின் செயற்பாட்டு பற்றிய கடிதமொன்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4.4 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளில் (வெளிநாட்டு) வங்கிகள்) கடமையில் ஈடுபடுத்தப்படும் வெளிநாட்டு அலுவலர்கள் அவர்களின் பொருத்தப்பாடு மீது ஏதாவது மேற்பார்வை விடயம் தொடர்பான அக்கறைகள் தொடர்பாக அவ் வெளிநாட்டு வங்கி மேற்பார்வையாளரின் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.5 தற்போது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள் தொடர்பாக, வங்கிகள் சத்தியப் பிரமாணங்களையும் பிரகடனங்களையும் 2010 திசெம்பர் 31இற்கு முன்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**இணைப்பு I**

**வங்கியின் பெயர்**

**வங்கித்தொழில் சட்டம் 44ஏஇன் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியப் பிரமாணம்**

.......................................... எனும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கிறேன்/ உறுதிப்படுத்துகிறேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லிம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. மேற்கூறப்பட்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம்) அளிப்பவரும் நான்தான் என்பதுடன் 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் மூலம் ஆக்கப்பட்ட வர்த்தக வங்கியாகிய .................................. இல் (வங்கியின் பெயர்) ........................ ............................................... பதவியினை வகிப்பவருமாவேன்.

2. நான் பின்வரும் கல்விசார் தகமையையும்/ தகைமைகளையும் தொழில்சார் நிபுணத்துவ தகைமையையும்/ தகைமைகளையும் கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

3. வங்கி, நிதி, வர்த்தகம், நிர்வாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் காத்திரமான தகைமைகளை கொண்டிருக்கிறேன் என்பதனையும் பயன்படுத்தக்கூடிய அனுபவங்கள் பின்வருமாறு இருக்கும் எனவும் நான் (உறுதிப்படுத்துகிறேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

4. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது முறையற்ற நடத்தைகள் தொடர்பான விடயங்களை நான் செய்துள்ளேன் என்றோ அல்லது அத்தகைய செயலுடன் தொடர்புபட்டுள்ளேன் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் எந்தவொரு தீர்ப்புக்கும் உள்ளாகவில்லை.

5. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது அதேவகையான தவறான நடவடிக்கைகளைச் செய்தேன் என அறிவிக்கப்பட்டு குற்றச்சாட்டுப்பத்திரிகை வழங்கப்பட்டு இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் நான் விசாரணைக்கோ அல்லது ஆராய்வுக்கோ உட்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

6. நிதி முகாமைத்துவம் அல்லது வேறு விதமான ஒழுங்குமுறைகள் தொடர்பாக இழைக்கப்பட்ட குற்றத்திற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினாலோ தண்டிக்கப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

7. நான் ஒரு கடன் தீராற்றலற்றவர் என்றோ அல்லது வங்குரோத்துக்காரர் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

8. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையினை நிறைவேற்றுவதற்கோ அல்லது கடனைத் திருப்பிக் கட்டுவதற்கோ தவறவில்லை என நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

9. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் நான் ஒரு சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்படுத்தப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

10. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அதிகாரசபையின் கட்டளை ஒன்றின் மூலம் உரிமம் அளிக்கப்பட்டுள்ள வங்கி ஒன்றின் அல்லது நிதி நிறுவனத்தின் அல்லது கம்பனிச் சபையின் சேவையிலிருந்து நீக்கப்படவுமில்லை தடுக்கப்படவுமில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

11. (i) உரிமம் இரத்து செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட; அல்லது

(ii) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ மூடப்பட அல்லது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற

எந்தவொரு வங்கியிலும் அல்லது நிதி நிறுவனத்திலும் பணிப்பாளராகவோ அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது அதிகாரம் மிக்க ஏதேனும் பணிகளையோ வகிக்கவில்லை என்பதனை (உறுதி/ தெரிவித்து) கொள்கிறேன்.

12 அறிவுக்கு எட்டியவரை வங்கித்தொழில் சட்டம் பிரிவு 44(ஏ) இன் கீழ் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் ................ ஆகப் பதவி வகிப்பதற்கு நான் தகுதியானவரும் பொருத்தமானவருமாவேன் என (உறுதிப்படுத்தி/ தெரிவித்து) கொள்கிறேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மை எனவும் ஏற்றுக் கொண்டும் உறுதிப்படுத்துகின்றார் சத்தியம் செய்து தனது கையெழுத்தினை ............ ஆகிய திகதியில் கொழும்பில் வைக்கின்றார்.

முத்திரை பதிக்கவும்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்

**இணைப்பு II**

**வங்கியின் பெயர்:**

**வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

**(...................... இற்குப் பொருத்தமான இணைப்புக்களுடன்)**

**1. தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர்:

1.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

1.3 பிறந்த திகதி:

1.4 நிரந்தர முகவரி:

1.5 தற்போதைய முகவரி:

**2. வங்கியில் நியமனம்:**

2.1 தற்போதைய பதவியை ஏற்றுக்கொண்ட திகதி: (தயவுசெய்து நியமனக் கடிதமொன்றின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதப் பிரதியொன்றை இணைக்கவும்)

2.2 பதவி:

2.3 உள்நாட்டவர்/ வெளிநாட்டவர்:

**3. வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவிற்கிணங்க நெருங்கிய உறவினர்களின்[1] தனிப்பட்ட தகவல்கள்**

3.1 வாழ்க்கைத் துணைவரின் முழுப் பெயர்:

3.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

3.3 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்:

| | முழுப் பெயர் | அடையாள அட்டை/ கடவுச்சீட்டு இல. |
|---|---|---|
| 3.3.1 | | |
| 3.3.2 | | |

**4. பின்னணியும் அனுபவமும்**

உரிமம் பெற்ற வங்கி/கள், வங்கித்தொழில் சட்டத்திற்கிணங்க, அதனுடைய துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் அவன்/ அவள் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றியிருந்தால் அவை பற்றிய விபரம்

| நிறுவனத்தின் பெயர் | பதவியிலிருந்த காலம் | பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

5. வங்கிகள் மற்றும் அவற்றினுடைய தொடர்புபட்ட கம்பனிகளில் பங்குடமை

உரிமம் பெற்ற வங்கிகள், அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் தற்போது அவற்றில் வைத்திருக்கும் பங்கு உரிமையாண்மை:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குடமை சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

6. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்[1]

வங்கியுடன் அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின், அவற்றுடன் நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலர் வைத்திருக்கும் ஏதாவதொரு வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணை வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

7. நெருங்கிய உறவினர்களின் நியமனம், பங்குடமை மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்

7.1 நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலரின் நெருங்கிய உறவினர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் அவற்றின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்களில் எவராவது இருப்பின்,

| வங்கியின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

7.2 ஏதாவதொரு நெருங்கிய உறவினர் நேரடியாக/ மறைமுகமாக வங்கியில்/ அதன் துணை நிறுவனங்களில் அல்லது இணை நிறுவனங்களில் பங்குடமைகள் ஏதும் வைத்திருப்பின்,

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |
| | | | | |

1 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது ஏதாவது கடன் வசதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்களைக் குறிக்கும்.

7.3 நெருங்கிய உறவினர் வங்கியுடன் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றுடன் வைத்துள்ள ஏதாவதொரு கொடுக்கல்வாங்கல்

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | கொடுக்கல்வாங்கலின் தன்மை | கொடுக்கல்வாங்கலின் திகதி | ........... இல் வரையறை (ரூ. மில்.) | ........... இல் நிலுவை (ரூ. மில்.) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ.மில்) | வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

8. மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய ஏதாவது விபரிப்பு/ தகவல்கள் மற்றும் வங்கியின் நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலர்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்.

---

**பிரகடனம்**

எனது அறிவுக்கு எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக வங்கிக்கு அறியத் தருவேன் என்பதற்கும் உடன்படுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திகதி:**

**வங்கியில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் கையொப்பம்**

---

**முதன்மை நிறைவேற்று அலுவலரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது**

1. மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் வங்கியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்

2. வங்கித்தொழில் சட்டத்தின் 44ஏ இன் நியதிகளில் மேற்கூறப்பட்ட அலுவலர், நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுவதற்கு பொருத்தம் மற்றும் தகுதி உள்ளவர் என நான் உறுதியளிக்கிறேன்.

**திகதி:**

**முதன்மை நிறுவேற்று அலுவலரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்**

திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 44 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 76எச் இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2010 நவெம்பர் 24

## 2010ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பவற்றை மதிப்பிடுதல்

**எடுத்துக்காட்டல்** 1 இத் தீர்மானமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2010ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் என எடுத்துக்காட்டப்படலாம். இத் தீர்மானத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்.

**அதிகாரமளித்தல்** 2.1 வங்கித்தொழில் சட்டத்தின் 44ஏ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 76எச் பிரிவின் நியதிகளின்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில், நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிறைவேற்று பணிகளை ஆற்றும் அலுவலர்கள் பொருத்தம் மற்றும் தகுதியான ஆட்களாக இருக்க வேண்டும். வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 42(2), நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர் பொருத்தம் மற்றும் தகுதியான ஆட்களா என தீர்மானிப்பதற்கு பிரயோகிக்கப்படும்.

2.2 மேலும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கம்பனி ஆளுகை மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரையில் செய்யப்பட்ட பிரமாணங்களும் இலங்கையில் ஏற்புடைத்தாகும்.

**நிறைவேற்று பணிகளை ஆற்றும் அலுவலர்கள்** 3 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் பின்வரும் பதவிகளில்/ நிலைகளில் உள்ள அலுவலர்கள் நிறைவேற்று பணிகளை ஆற்றும் அலுவலர்கள் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) மேலதிக பொது முகாமையாளர்
(ii) மூத்த துணை பொது முகாமையாளர்
(iii) துணை பொது முகாமையாளர்
(iv) உதவிப் பொது முகாமையாளர்
(v) முதன்மை தொழிற்பாட்டு அலுவலர்
(vi) முதன்மை இடர்நேர்வு அலுவலர்
(vii) முதன்மை கணக்காளர்
(viii) முதன்மை நிதியியல் அலுவலர்
(ix) முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர்
(x) இணங்குவிப்பு அலுவலர்
(xi) திறைசேரி தலைவர்
(xii) சட்டத்துறை தலைவர்
(xiii) தகவல் தொழில்நுட்ப தலைவர்
(xiv) பணிப்பாளர் சபைச் செயலாளர்
(xv) பணிப்பாளர் சபை/ வங்கிக்கு ஆலோசகர்கள்/ மதியுரையாளராக கடமையாற்றும் அலுவலர்கள்
(xvi) இலங்கையில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைக்கான 2007ஆம் ஆண்டு வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 12இன் பிரிவு 3(1)(i)(ஊ)இன் வரைவிலக்கணத்தில் கீழ்வரும் எவரேனும் அலுவலர்கள்

**பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்**

4.1 நிறைவேற்று பணிகளை ஆற்றும் இத்தகைய அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி என்பன வங்கித்தொழில் சட்டத்தில் தொகுக்கப்பட்டவாறு வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டு தீர்மானிக்கப்படுவதோடு பின்வரும் அலுவலர்களுக்கு பொருந்துவதாகவும் இருக்கும்.

(i) தற்போது அலுவலகத்தில் இருப்போர்

(ii) நிரந்தரமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெறும் வேளையில்

(iii) தொழில் ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் வேளையில்; அத்துடன்

(iv) வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளரின் தீர்மானத்திற்கமைய ஏதாவதொரு அலுவலர் மீது மேற்பார்வை விடயம் தொடர்பான அக்கறைகள் எழும் ஏதேனும் நேரத்தில்

4.2 ஒவ்வொரு வங்கியும் தகுதியான அலுவலர்களிடமிருந்து இணைப்பு I மற்றும் இணைப்பு IIஇல் தரப்பட்ட முறையே சத்தியப் பிரமாணம் ஒன்றையும் பிரகடனம் ஒன்றையும் பெறுவதோடு அவற்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3 இதற்கு மேலாக, ஒரு அலுவலர் முதன் முதலாகப் பதவியேற்கும் போது, இதற்கு உடனடியாக முற்போந்த (முன்பாக வேலை பார்த்த உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றின் முன்னாள் ஊழியராக இல்லாத போது) தொழில்தருநரிடமிருந்து குறிப்பிட்ட நிறுவனத்தில் ஆற்றிய கடமைகளின் செயற்பாட்டு பற்றிய கடிதமொன்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4.4 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளில் (வெளிநாட்டு) வங்கிகள்) கடமையில் ஈடுபடுத்தப்படும் வெளிநாட்டு அலுவலர்கள் அவர்களின் பொருத்தப்பாடு மீது ஏதாவது மேற்பார்வை விடயம் தொடர்பான அக்கறைகள் தொடர்பாக அவ் வெளிநாட்டு வங்கி மேற்பார்வையாளரின் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.5 தற்போது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள் தொடர்பாக, வங்கிகள் சத்தியப் பிரமாணங்களையும் பிரகடனங்களையும் 2010 திசெம்பர் 31இற்கு முன்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**இணைப்பு I**

**வங்கியின் பெயர்**

**வங்கித்தொழில் சட்டம் 44ஏ உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 76எச் இன் கீழ் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியப் பிரமாணம்**

........................................ எனும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ..................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்கிறேன்/ உறுதிப்படுத்துகிறேன்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லிம் என்ற வகையில் சத்தியம் செய்து) பின்வருவனவற்றை தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. மேற்கூறப்பட்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம்) அளிப்பவரும் நான்தான் என்பதுடன் 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் மூலம் ஆக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாகிய .................................. இல் (வங்கியின் பெயர்) ....................................................................... பதவியினை வகிப்பவருமாவேன்.

2. நான் பின்வரும் கல்விசார் தகமையையும்/ தகைமைகளையும் தொழில்சார் நிபுணத்துவ தகைமையையும்/ தகைமைகளையும் கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

3. வங்கி, நிதி, வர்த்தகம், நிர்வாகம் அல்லது இவை தொடர்பான துறைகளில் நான் காத்திரமான தகைமைகளை கொண்டிருக்கிறேன் என்பதனையும் பயன்படுத்தக்கூடிய அனுபவங்கள் பின்வருமாறு இருக்கும் எனவும் நான் (உறுதிப்படுத்துகிறேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

4. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது முறையற்ற நடத்தைகள் தொடர்பான விடயங்களை நான் செய்துள்ளேன் என்றோ அல்லது அத்தகைய செயலுடன் தொடர்புட்டுள்ளேன் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் எந்தவொரு தீர்ப்புக்கும் உள்ளாகவில்லை.

5. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதாவது அதேவகையான தவறான நடவடிக்கைகளைச் செய்தேன் என அறிவிக்கப்பட்டு குற்றச்சாட்டுப்பத்திரிகை வழங்கப்பட்டு இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தால் ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அல்லது தொழில்சார் நிபுணத்துவ சங்கத்தினால் அல்லது வேறு ஏதேனும் விசாரணை ஆணைக்குழுவினால் அல்லது நியாய சபையினால் அல்லது வேறு ஏதும் அமைப்பினால் நான் விசாரணைக்கோ அல்லது ஆராய்வுக்கோ உட்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

6. நிதி முகாமைத்துவம் அல்லது வேறு விதமான ஒழுங்குமுறைகள் தொடர்பாக இழைக்கப்பட்ட குற்றத்திற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினாலோ தண்டிக்கப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

7. நான் ஒரு கடன் தீராற்றலற்றவர் என்றோ அல்லது வங்குரோத்துக்காரர் என்றோ இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

8. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ எந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையினை நிறைவேற்றுவதற்கோ அல்லது கடனைத் திருப்பிக் கட்டுவதற்கோ தவறவில்லை என நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

9. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் நான் ஒரு சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்படுத்தப்படவில்லை என்பதனை நான் (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

10. இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அதிகாரசபையின் கட்டளை ஒன்றின் மூலம் உரிமம் அளிக்கப்பட்டுள்ள வங்கி ஒன்றின் அல்லது நிதி நிறுவனத்தின் அல்லது கம்பனிச் சபையின் சேவையிலிருந்து நீக்கப்படவுமில்லை தடுக்கப்படவுமில்லை என்பதனை (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

11. (i) உரிமம் இரத்து செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட; அல்லது

(ii) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ மூடப்பட அல்லது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற

எந்தவொரு வங்கியிலும் அல்லது நிதி நிறுவனத்திலும் பணிப்பாளராகவோ அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது அதிகாரம்மிக்க ஏதேனும் பணிகளையோ வகிக்கவில்லை என்பதற்கு (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

12. அறிவுக்கு எட்டியவரை வங்கித்தொழில் சட்டம் பிரிவு 44(ஏ) இன் கீழ் அனுமதியளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கியில் ................ ஆகப் பதவி வகிப்பதற்கு நான் தகுதியானவரும் பொருத்தமானவருமாவேன் என (உறுதிப்படுத்தி/ தெரிவித்துக்) கொள்கிறேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவருக்கு (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மை எனவும் ஏற்றுக் கொண்டும் உறுதிப்படுத்துகின்றார் சத்தியம் செய்து தனது கையெழுத்தினை ............ ஆகிய திகதியில் கொழும்பில் வைக்கின்றார்.

முத்திரை பதிக்கவும்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்

**இணைப்பு II**

**வங்கியின் பெயர்:**

**வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

**(.......... இற்குப் பொருத்தமான இணைப்புக்களுடன்)**

**1. தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர்:

1.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

1.3 பிறந்த திகதி:

1.4 நிரந்தர முகவரி:

1.5 தற்போதைய முகவரி:

**2. வங்கியில் நியமனம்:**

2.1 தற்போதைய பதவியை ஏற்றுக்கொண்ட திகதி: (தயவுசெய்து நியமனக் கடிதமொன்றின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதப் பிரதியொன்றை இணைக்கவும்)

2.2 பதவி:

2.3 உள்நாட்டு/ வெளிநாட்டு:

**3. வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவிற்கிணங்க நெருங்கிய உறவினர்களின்[1] பிரத்தியேகமான தகவல்கள்**

3.1 வாழ்க்கைத் துணைவரின் முழுப் பெயர்:

3.2 அடையாள அட்டை/ கடவுச் சீட்டு இலக்கம்:

3.3 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்:

| | முழுப் பெயர் | அடையாள அட்டை/ கடவுச்சீட்டு இல. |
|---|---|---|
| 3.3.1 | | |
| 3.3.2 | | |
| 3.3.3 | | |
| 3.3.4 | | |

**4. பின்னணியும் அனுபவமும்**

உரிமம் பெற்ற வங்கி/கள் வங்கிச் சட்டத்திற்கிணங்க, அதனுடைய துணை நிறுவனங்கள், இணைந்த நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றில் அவன்/ அவள் உயர் பதவி வகித்திருந்தால் அவை பற்றிய விபரம்

| நிறுவனத்தின் பெயர் | பதவியிலிருந்த காலம் | பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

5. வங்கிகள் மற்றும் அவற்றினுடைய தொடர்புபட்ட கம்பனிகளில் பங்குடமை

உரிமம் பெற்ற வங்கிகள், அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் தற்போது அவற்றில் வைத்திருக்கும் பங்கு உரிமையாண்மை:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குடமை சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

6. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்[1]

வங்கியுடன் அவற்றின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றுடன் நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலர் வைத்திருக்கும் ஏதாவதொரு வியாபாரக் கொடுக்கல்வாங்கல்

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | தொகை ................ (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணை வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | மூ வங்கிகளின் சட்டப்படியான மூலதனம் |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| கடன் வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வைப்புக்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

7. நெருங்கிய உறவினர்களின் நியமனம், பங்குடமை மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்

7.1 நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலரின் நெருங்கிய உறவினர்கள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் அவற்றின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்களில் எவராவது இருப்பின்

| வங்கியின் பெயர் | நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

7.2 ஏதாவதொரு நெருங்கிய உறவினர் நேரடியாக/ மறைமுகமாக வங்கியில்/ அதன் துணை நிறுவனங்களில் அல்லது இணை நிறுவனங்களில் பங்குடமைகள் ஏதும் வைத்திருப்பின்:

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |
| | | | | |

1 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது ஏதாவது கடன் வசதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்களைக் குறிக்கும்.

7.3 நெருங்கிய உறவினர் வங்கியுடன் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றுடன் வைத்துள்ள ஏதாவதொரு கொடுக்கல்வாங்கல்:

| நெருங்கிய உறவினரின் முழுப் பெயர் | கொடுக்கல்வாங்கலின் தன்மை | கொடுக்கல்வாங்கலின் திகதி | ........... இல் வரையறை (ரூ. மில்.) | ........... இல் நிலுவை (ரூ. மில்.) | பிணையின் வகையும் பெறுமதியும் (ரூ.மில்) | சட்டப்படியான வங்கி மூலதன வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

8. மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய ஏதாவது விபரிப்பு/ தகவல்கள் மற்றும் வங்கியின் நிறைவேற்றுப் பணிகள் ஆற்றும் அலுவலர்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்.

---

**பிரகடனம்**

எனது அறிவுக்கு எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக வங்கிக்கு அறியத் தருவேன் என்பதற்கும் உடன்படுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திகதி:** **வங்கியில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் கையொப்பம்**

---

**முதன்மை நிறைவேற்று அலுவலரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது**

1. மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்களும் வங்கியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்

2. வங்கித்தொழில் சட்டத்தின் 44ஏ உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 76எச் இன் நியதிகளில் மேற்கூறப்பட்ட அலுவலர், நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுவதற்கு பொருத்தம் மற்றும் தகுதி உள்ளவர் என நான் உறுதியளிக்கிறேன்.

**திகதி:** **முதன்மை நிறுவேற்று அதிகாரியின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்**

**தொடர்பு எண்: 02/17/550/002/003**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 திசெம்பர் 24

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும் வங்கிக்*
*கணக்காய்வுகளை மேற்கொள்ளும் கணக்காய்வாளர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**கம்பனி ஆளுகை பணிப்புரைகளின் கீழான தேவைப்பாடுகள்**

உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறைகள் மீது இலங்கைக் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவகம் விடுத்த வழிகாட்டல்கள் பற்றியும் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட 2007.12.26ஆம் நாளிடப்பட்ட கம்பனி ஆளுகைப் பணிப்புரையின் பணிப்புக்கள் 3(8)(ii) பீ), சி) மற்றும் ஜி) தொடர்பாக வங்கிகளினால் பின்பற்றப்பட வேண்டிய வருடாந்த கம்பனி ஆளுகை அறிக்கை பற்றியும் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

தயவுசெய்து ஐசிஏஎஸ்எல் இன் வெப்தளத்தில் இவ் வழிகாட்டல்களை பார்வையிடவும். இணைப்பு பின்வருமாறு:

http://www.icasrilanka.com/Technical/Central%20Bank%20Internal%20Contol%20-%20Final%20printed%20uploaded.pdf

உங்கள் உண்மையுள்ள

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

பிரதி: தலைவர்
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்
30ஏ மலலசேகர மாவத்தை
கொழும்பு 7

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

இல. 1673/11 செவ்வாய்க்கிழமை 2010 செத்தெம்பர் 28

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### நாணய சட்ட விதி

நாணய விதிச் சட்டம், (அத்தியாயம் 4220) பிரிவு 32உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்

### இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள்

1. **எடுத்துக்காட்டல்**

1.1 இந்த ஒழுங்குவிதிகள் 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. **திட்டத்தின் நோக்கம் மற்றும் அமுலாக்கல் விதிகள்**

2.1 நாணய சட்டத்தின் பிரிவு 5இன் நியதிகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியானது இச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட சாத்தியமானளவு செயற்பாடு மூலம் (அ) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு (ஆ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு எனும் அதன் இரு நோக்கங்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

2.2 நாணய சட்டத்தின் பிரிவுகள் 32அ தொடக்கம் 32உ என்பவற்றின் நியதிகளின் அடிப்படையில் மத்திய வங்கியானது காலத்திற்குக் காலம் நாணயச் சபையால் தீர்மானிக்கப்படுவதற்கு அமைவாக வங்கியியல் நிறுவனங்களால் வைத்திருக்கப்படும் வைப்புக்களினுடைய காப்புறுதிக்கான ஒரு திட்டத்தை உருவாக்குதல், பராமரித்தல், முகாமை மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை செய்யலாம்.

2.3 வங்கிச் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76(ஒ) இன் நியதிகளின் அடிப்படையில், வங்கி முறைமைகளின் பலமான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நாணயச் சபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் அவ் வங்கிகள் கொண்டு நடாத்தும் வியாபாரத்தின் ஏதாவது விடயம் தொடர்பாக பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது.

2.4 நிதிக் கம்பனிச் சட்டத்தின் பிரிவு 27இன் நியதிகளின் அடிப்படையில் மத்திய வங்கியானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் வைத்திருக்கும் வைப்புக்கள் மீதான காப்புறுதிக்கான ஒரு திட்டத்ததை செயற்படுத்தலாம் என்பதோடு இத் திட்டத்தின் கீழ் அல்லது நாணயச் சபையால் பரிந்துரைக்கப்படுகின்ற ஏதாவது ஏனைய திட்டத்தின் கீழ் அவர்களினுடைய வைப்புப் பொறுப்புக்களை காப்புறுதி செய்வதற்கு கோரலாம்.

2.5 மேற்கூறப்பட்டமைக்கு அமைவாக, இந்த வைப்புக் காப்புறுதித் திட்டமானது நாட்டினுடைய முழுமையான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான அக்கறையின் காரணமாக அமுல்படுத்தப்படும் அதேவேளை சிறு அளவு வைப்பாளர்களின் நம்பிக்கையை பேணுவதன் மூலம் நிதி நிறுவனங்களின் உறுதித்தன்மையை உயர்த்துவதை நோக்காகக் கொண்டு நிதி நிறுவனங்களின் வீழ்ச்சியிலிருந்து சிறு அளவு வைப்பாளர்களை பாதுகாப்பதற்கான ஒரு பொறிமுறைமையினை வடிவமைக்கின்றது.

3. **திட்டத்தின் தலைப்பு மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி**

3.1 இந்தத் திட்டம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் எனப் பெயரிடப்படும்.

3.2 இத் திட்டமானது 2010 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**4. இத் திட்டத்தின் மூலம் ஆளுகை செய்யப்படவுள்ள அங்கத்துவ நிறுவனங்கள்**

4.1 அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் இத் திட்டத்தினுடைய அங்கத்தவர்களாக இருப்பர்.

**5. காப்புறுதி செய்யப்படுவதற்கு தகுதியான வைப்புக்கள்**

5.1 காப்புறுதி செய்யப்படுவதற்கான வைப்புக்களானது, அனைத்து கடன்பாட்டுக்கருவிகளும் நீங்கலாக அங்கத்துவ நிறுவனங்களினுடைய கேள்வி, கால மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களையும் உள்ளடக்கும்.

5.2 பின்வரும் வைப்புப் பொறுப்புக்கள் இத் திட்டத்திலிருந்து நீக்கப்படும்.

(i) அங்கத்துவ நிறுவனங்களுக்குரிய வைப்புப் பொறுப்புக்கள்.

(ii) அமைச்சுக்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரசாங்கம் உள்ளடங்கலாக இலங்கை அரசிற்கான வைப்புப் பொறுப்புக்கள்.

(iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டு 12 இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான 2008ஆம் ஆண்டு இல. 3 நிதிக் கம்பனிச் சட்டம் (கம்பனி ஆளுகை) என்பவற்றினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான பங்குதாரர்கள், பணிப்பாளர்கள், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய தொடர்பான தரப்பினர்களின் வைப்புப் பொறுப்புக்கள்.

(iv) ஏதாவது வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கு எதிராக பிணையாக வைத்திருக்கப்படும் வைப்புப் பொறுப்புக்கள்.

(v) வங்கிச் சட்டத்தின் நியதிகளின் அடிப்படையில் கைவிடப்பட்ட சொத்துக்கள் எனக் கருதக்கூடிய வைப்புக்கள் மற்றும் நிதிக் கம்பனிச் சட்டத்தின் நியதிகளின் அடிப்படையிலான செயற்படாத வைப்புக்கள், நாணயச் சபையால் வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளின்படி மத்திய வங்கிக்கு மாற்றப்பட்ட நிதிகள் என்பன.

5.3 அனைத்து தகுதியான வைப்புக்களும் அங்கத்துவ நிறுவனங்களால் காப்புறுதி செய்யப்படல் வேண்டும்.

**6. காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீது விதிக்கப்பட வேண்டிய காப்புறுதி தவணைக் கட்டணம்**

6.1 அங்கத்துவ நிறுவனங்கள், ஒழுங்குவிதி 7இல் கூறப்பட்டபடி மேலே 5.2 குறிப்பிடப்பட்ட வைப்புக்கள் மீதான பொறுப்புகள் தவிர ஏனைய வைப்புக்களினுடைய மொத்த தொகை மீது கணக்கிடப்பட்ட ஒரு காப்புறுதி தவணைக் கட்டணத்தை மாத இறுதியில் அல்லது காலாண்டு இறுதியில் செலுத்துதல் வேண்டும்.

6.2 தவணைக் கட்டண கணிப்பீடு மறு அறிவித்தல் வரை பின்வருமாறு இருக்கும்.

(i) வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின்படி நேர் முன்னைய ஆண்டு முடிவில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேலான மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணிய உரிமம் பெற்ற வங்கிகள் ஆண்டுக்கு 0.10 சதவீதம் எனும் அடிப்படையிலான ஒரு தவணைக் கட்டணத்தை ஒவ்வொரு காலாண்டு இறுதியிலுள்ள தகுதியான வைப்புக்களின் மொத்த தொகை மீது கணிப்பிட்டு அக் காலாண்டுக்காக செலுத்துதல் வேண்டும்.

(ii) ஏனைய அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் காலாண்டு இறுதியிலுள்ள எல்லா தகுதியான வைப்புக்களினுடைய மொத்த தொகை மீது ஆண்டுக்கு 0.125 சதவீதம் எனும் அடிப்படையில் தவணைக் கட்டணத்தை கணிப்பிட்டு காலாண்டுக்காக செலுத்துதல் வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மாத இறுதியிலுள்ள தகுதியான முழு வைப்புக்களினுடைய மொத்த தொகை மீது ஆண்டுக்கு 0.15 சதவீதம் எனும் அடிப்படையில் தவணைக் கட்டணத்தை கணிப்பிட்டு மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.

6.3 அங்கத்துவ நிறுவனங்கள் ஏற்புடைத்தான தவணைக் கட்டணத் தொகையை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் கணக்கிற்கு அந்தந்த மாத/ காலாண்டு இறுதியின் 15 நாட்களுக்குள் செலுத்துவதுடன் வைப்புக்கள் மற்றும் தவணைக் கட்டண கணிப்பீடு என்பவற்றின் விபரங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டும்.

6.4 குறைவான தவணைக் கட்டணத் தொகையைச் செலுத்துகின்ற சந்தர்ப்பங்கள் உள்ளடங்கலாக தாமதமாக தவணைக் கட்டணத்தை செலுத்தும் சந்தர்ப்பங்களில் 91 நாட்கள் முதன்மை திறைசேரி உண்டியல் வருமான வீதத்தின் நிறையிடப்பட்ட சராசரியுடன் 200 அடிப்படைப் புள்ளிகள் சேர்ந்த தொகையொன்று தண்டப் பணமாக அறவிடப்படும்.

**7. வைப்புக் காப்புறுதி நிதியம்**

7.1 இத் திட்டமானது "வைப்புக் காப்புறுதி நிதியம்" எனும் பெயரைக் கொண்டிருப்பதோடு (இதன் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்). இது நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் இதற்கான பொறுப்பை அதன் விருப்ப அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினுடைய ஒரு உத்தியோகத்தருக்கு அல்லது ஒரு திணைக்களத்துக்கு ஒப்படைக்கலாம்.

7.2 இந் நிதியத்துக்கான வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: அங்கத்துவ நிறுவனங்களால் செலுத்தப்படும் தவணைக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பணங்கள், அனைத்து இலாபத் தொகைகள், நிதியத்தினுடைய பணத்தை முதலீடுகள் செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள், நட்ட ஈடாக செலுத்தப்பட்ட வைப்புக்களினுடைய அறவீடு, நிதிக் கம்பனிச் சட்டத்தின் 31(1) இலிருந்து 31(3) வரையிலான பிரிவுகளின் கீழும் வங்கிச் சட்டத்தின் பகுதி IX இன் 72ஆம் மற்றும் 76ஆம் பிரிவுகளின் கீழும் நாணயச் சபையால் வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள பணிப்புரைகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றல் செய்வதற்குத் தகுதியுடைய நிதிக் கம்பனிகளினுடைய செயற்படுத்தப்படாத வைப்புக்களினதும் உரிமம் பெற்ற வங்கிகளினுடைய கைவிடப்பட்ட சொத்துக்களினதும் தொகைகள், அரசிடமிருந்தான கடன் மற்றும் உதவித் தொகைகள் மற்றும்/ அல்லது நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு நிதிப் பங்களிப்புகள் என்பன உள்ளடக்கும்.

7.3 இந் நிதியத்திற்கான பற்றுக்கள் பின்வருமாறு இருக்கும்: வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள், முதலீடுகள், செயற்படுத்தப்படாத வைப்புக்கள் அல்லது கைவிடப்பட்ட சொத்துக்கள் நிதியத்தில் இருக்கும் பட்சத்தில் அவற்றின் மீள்செலுத்துகை மற்றும் நாணயச் சபையால் தீர்மானிக்கப்பட்ட நடைமுறைச் செலவுகள் என்பனவாகும்.

**8. நிதியத்திலுள்ள பணத்தினுடைய முதலீடுகள்**

8.1 நிதியத்திலுள்ள பணமானது பின்வருவனவற்றில் முதலீடு செய்யப்படும்.

(i) அரச பிணையங்கள் - இவ் அரச பிணையங்கள் திறைசேரி உண்டியல், திறைசேரி முறி மற்றும் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஏனைய சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களை உள்ளடக்கும்.

(ii) பாரிய திரவத்தன்மை நெருக்கடி நிலைமையை எதிர்நோக்குகின்ற எந்தவொரு அங்கத்துவ நிறுவனங்களுக்கும் நாணயச் சபையின் கருத்தின் அடிப்படையில் (பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பில் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தினுடைய பணிப்பாளரினதும் உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினாலும் சமர்ப்பிக்கப்பட்ட திரவத்தன்மை நிலைமையினுடைய ஒரு மதிப்பீட்டு அறிக்கையை கவனத்தில் கொண்டதன் பிறகு) அதாவது அந்த குறிக்கப்பட்ட நிறுவனத்தின் அல்லது முழுமையான நிதியியல் முறைமையின் பாரிய நிதி சிக்கலை தவிர்க்க உதவும் எனக் கருதும் பட்சத்தில் ஏதாவது ஒரு அங்கத்துவ நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பிணையிடப்பட்ட கடன்கள் அல்லது முற்பணங்கள்.

8.2 இத்தகைய அங்கத்துவ நிறுவனங்களுக்கான முற்பணங்களும் கடன்களும் மீள்விற்பனை செய்யக்கூடிய பிணைகளாகவும் அத்துடன் அல்லது அரச/ இலங்கை மத்திய வங்கி உத்தரவாதங்களின் மீது வழங்கப்பட வேண்டியதுடன் வட்டி வீதங்கள் நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்படக்கூடிய வீதமொன்றிலும் இருத்தல் வேண்டும்.

8.3 இத்தகைய முற்பணங்கள் மற்றும் கடன்களினுடைய மீளச் செலுத்தும் காலமானது நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படும்.

**9. காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீதான நட்ட ஈடு**

9.1 காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களின் வைப்பாளர்களுக்கான நட்டஈடு, நாணய சபையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளின்படி அல்லது கீழ்க் குறிப்பிட்டவாறு வழங்கப்படும்.

9.2 அங்கத்துவ நிறுவனமொன்றின் உரிமம்/ பதிவு செய்தல் நாணய சபையினால் தொடர்பான சட்ட விதிகளிலும் நியதிகளின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் அல்லது இரத்துச் செய்யப்பட்ட பின்னர் மட்டுமே அதன் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கான நட்டஈடு வழங்கப்படும்.

9.3 அங்கத்துவ நிறுவனமொன்றின் உரிமம்/ பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அல்லது இரத்துச் செய்வதென்ற தீர்மானத்தினை நாணயச் சபை அறிவிப்புச் செய்த ஒரு கிழமைக்குள், நாணய சபையினால் உரிமம்/ பதிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட தினத்தன்று, உள்ளவாறான வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை உள்ளடங்கலாக வைப்புக் கணக்குகளின் விபரங்களைக் கொண்ட வைப்பாளர்களின் பட்டியலை அந் நிறுவனம் அனுமதிக்கப்பட்ட வங்கியாக இருக்குமிடத்து வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர் அல்லது அந் நிறுவனம் பதிவு செயயப்பட்ட நிதிக் கம்பனி எனும் பட்சத்தில் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர் தயாரிக்க வேண்டும்.

9.4 குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்ட நட்டஈடு குறித்துரைக்கப்பட்டவாறு இடைநிறுத்தி வைக்கப்பட்ட/ இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் வழங்கப்படும். இக் காலப்பகுதிக்கான வட்டி வழங்கப்படமாட்டாது.

9.5 அங்கத்துவ நிறுவனமொன்றின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு, உரிமம்/ பதிவு இடைநிறுத்தப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட நாளன்று அங்கத்துவ நிறுவனத்திற்கு வைப்பாளர் செலுத்த வேண்டிய தொகை ஏதுமிருப்பின் அதனைக் கழித்து, ஏதேனும் ஒன்று சேர்ந்த வட்டி இருப்பின் அதனை உள்ளடக்கி ஒவ்வொரு வைப்பாளருக்குமுடைய காப்புறுதி செய்யப்பட்ட அனைத்து வைப்புக்களினை ஒன்று திரட்டி “காப்புறுதியாளர் ஒவ்வொருவருக்கு” என்ற அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

9.6 வைப்பாளர் ஒருவருக்கு செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை ரூ.200,000 க்கு மேற்படும் பட்சத்தில், ஆகக் கூடியது ரூ.200,000, அல்லது அந்நிய நாட்டு பண வைப்பாக இருப்பின் அதற்குச் சமனான தொகை என்ற அடிப்படையில் மேற்குறிப்பிட்ட விதத்தில் கணிக்கப்பட்டு மொத்த காப்புறுதி செய்யப்பட்ட தொடக்கத்தில் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படும்.

9.7 வைப்புக் காப்புறுதி நிதியத்திலிருந்து அங்கத்துவ நிறுவனமொன்றின் வைப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்ற எந்தவொரு நட்டஈடும், அந் நிறுவனத்தின் கணக்கேடுகளில், வைப்புக் காப்புறுதி திட்டத்தின் வைப்புப் பொறுப்பாக கணக்கிடப்படுவதுடன் வைப்பாளர்களுக்கான வைப்புப் பொறுப்புக்களின் தீர்ப்பனவுகளுக்கு சமமான தொகையாகவும் கொள்ளப்படும்.

9.8 நட்டஈடு செலுத்தும் வேளையில் எந்தவொரு வைப்பாளரும் அவருக்கு சேரவேண்டிய நட்டஈட்டை பெறமுடியாது போனால் நடைமுறையிலுள்ள சட்ட விதிகள் மற்றும் முறைமைகளின் நியதிகளின் அடிப்படையில் வைப்பாளரின் சட்ட உரித்துடைய பயனாளிகளுக்கு அந்த நட்டஈடு வழங்கப்படும்.

9.9 நட்டஈடு செலுத்துதல் நாணயச் சபையினதோ அல்லது இலங்கை மத்திய வங்கியினதோ பொறுப்பாகமாட்டாது என்பதுடன் செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகையானது கையிருப்பிலிருக்கும் நிதியின் அளவு அல்லது அனுமதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் நிதி பங்களிப்புக்கள் உள்ளடங்கலாக வைப்புக் காப்புறுதி நிதியத்தின் மூலம் திரட்டப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படும். நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் நிதியத்திலுள்ள மொத்த தொகைக்கும் மேலான எந்தவொரு பொறுப்புக்கும் பொறுப்பாளியாகமாட்டாது.

9.10 இடை நிறுத்தப்பட்ட/ இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பான எந்தவொரு நட்டஈட்டுக் கொடுப்பனவுகளும் 2012 சனவரி 01 அல்லது அதன் பின்னரான நாணயச் சபையின் கட்டளைக்கு அமைவாக இருக்கும்.

**10. திட்டத்தின் ஏடுகளும் கணக்குகளும்**

10.1 நாணயச் சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்பட்ட பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள்/ மற்றும் கொள்கை நியதிகளின் அடிப்படையில், செயற்பாட்டு, முகாமைத்துவ ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக, வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் வைப்பு காப்புறுதிப் பிரிவு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் நிறுவப்பட வேண்டும்.

10.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க, இத் திட்டத்தின் நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கணக்குகளும், கூற்றுக்களும் இப் பிரிவினால் பராமரிக்கப்படல் வேண்டும்.

10.3 இத் திட்டத்தின் நிதியியல் ஆண்டு கலண்டர் ஆண்டாக இருப்பதுடன் கணக்காய்வாளர் நாயகம் அதிபதி கணக்காய்வாளராக இருப்பார்.

10.4 காப்புறுதிப் பிரிவு, ஒவ்வொரு நிதியியல் ஆண்டுக்கும், வருமானங்கள் மற்றும் செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் முதலீடுகள் என்பன தொடர்பான நிதிக் கூற்றுக்களை தயாரித்து, கணக்காய்வு செய்யப்பட்ட அந் நிதிக் கூற்றுக்களை 31 மாச்சு அன்று அல்லது அதற்கு முன்பாக நாணயச் சபைக்கு ஒப்படைப்பதுடன் இக் கூற்றுக்களை அங்கத்துவ நிறுவனங்களும், பொதுமக்களும் தெரிந்து கொள்வதற்காக வெளிப்படுத்த வேண்டும்.

10.5 இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். இதன்படி இப் பிரிவின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களோடு கூட்டிணைக்கப்படமாட்டாது.

**11 1987ஆம் ஆண்டு பெப்புருவரி 27ஆம் திகதி வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளையும் 1987ஆம் ஆண்டு மாச்சு மாதம் 6ஆம் திகதி வெளியிடப்பட்ட 443/17ஆம் இலக்க அதி விசேடமான வர்த்தமானப் பத்திரிகையையும் நீக்குதல்**

11.1 நாணய விதிச் சட்டம் (அத்தியாயம் 422) பிரிவு 32உ இன் கீழ் 1987ஆம் ஆண்டு பெப்புருவரி 27ஆம் திகதி வெளியிடப்பட்ட 1ஆம் இலக்க வைப்பு காப்புறுதி ஒழுங்குவிதிகளும் அதன் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களும், 1987ஆம் ஆண்டு மாச்சு மாதம் 6ஆம் திகதி வெளியிடப்பட்ட 443/17ஆம் இலக்க அதி விசேடமான வர்த்தமானப் பத்திரிகையின் தொடர்பான திருத்தங்களும் நீக்கப்பட்டு, 2010 ஒத்தோபர் 1ஆம் திகதி முதல் நிறுத்தப்படுவதுடன் 2010 செத்தெம்பர் 30ஆம் திகதியிலுள்ள இவ் ஒழுங்குவிதிகளுக்கமைவாக செயற்படும் வைப்புக் காப்புறுதி நிதியம் 2010 ஒத்தோபர் 1ஆம் திகதி தொடக்கம் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்திடம் கையளிக்கப்படும்.

11.2 எனவே, 1987ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வைப்பு காப்புறுதி திட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் இயங்கும் திட்டத்தின் 2010ஆம் ஆண்டு யூலை 31 திகதியுள்ள எல்லா பொறுப்புக்கள் அல்லது எதிர்பாராத இடையூறுகள் 2010ஆம் ஆண்டு 1ஆம் திகதி முதல் முடிவுக்கு வரும்.

**சுற்றறிக்கை எண்: 01/2010**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 ஒத்தோபர் 15

*இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட அங்கத்துவ நிறுவனங்களின்*
*அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலங்கை காப்புறுதி வைப்புத் திட்டம் - காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீது விதிக்கத்தக்க தவணைக் கட்டுப்பணம்**

2010 செத்தெம்பர் 27 திகதியிடப்பட்ட 1ஆம் இலக்க இலங்கை காப்புறுதி வைப்புத் திட்ட ஒழுங்குவிதிகளின் 10.1 ஒழுங்குவிதிக்கு அமைவாக நாம் இங்கு உங்களுக்கு பின்வருவனவற்றை அறியத் தருகிறோம்.

1. ஒழுங்குவிதிகளின் 6ஆம் இலக்க ஒழுங்குவிதி நியதிகளின்படி வைப்புகளின் மீதான தவணைக் கட்டுப்பணமானது "இலங்கை வைப்புக் காப்புறுதி நிதி"க்கு, முக்கியமாக கணக்கின் பெயர் "இலங்கை வைப்புக் காப்புறுதி நிதிக் கணக்கு இலக்கம் 4681" எனக் குறிப்பிட்டு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக செலுத்தப்பட வேண்டும், அல்லது, மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு காசோலை ஒன்று வரையப்பட வேண்டும்.

2. ஒழுங்குவிதிகளின் 6.3 இலக்க ஒழுங்குவிதிப்படி இத் திட்டத்தின் கீழ் வரும் அனைத்து அங்கத்தவர்களும் இணைப்பு 1இல் குறிக்கப்பட்டவாறு "காப்புறுதி கட்டுப்பணம் கணிக்கப்பட்ட முறையை" விபரமாக காப்புறுதித் தவணைக் கட்டுப்பணத்துடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு மின்னஞ்சல் செய்ய வேண்டும் (மின்னஞ்சல்: dbsd@cbsl.lk, anuradha@cbsl.lk and sumithi@cbsl.lk).

3. அனைத்து அங்கத்துவ நிறுவனங்களும் துல்லியமான காப்புறுதித் தவணைக் கட்டுப்பணக் கணிப்பிற்கு உதவும் வகையில் ஒழுங்குமுறையான தகவல் முறைமையை பேணுதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு:

**இணைப்பு 1**

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்**

**தவணைக் கட்டுப்பணக் கொடுப்பனவு**

1. **அங்கத்துவ நிறுவனத்தின் பெயர் :**
2. **மூலதனப் போதுமை விகிதம் (உடனடுத்து முற்போந்த நிதியாண்டின் இறுதியிலுள்ள படியான அதனுடைய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின்படி) :**
3. **காலாண்டு/ மாதம் :**
4. **செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணம் (ரூ.'000)**

| | |
|---|---|
| பொதுப் பேரேட்டின்படி மொத்த வைப்பு மீதான பொறுப்பு (அ)<br>கழி: மொத்த புறக்கணிக்கப்பட்ட வைப்புக்கள் | XXX<br>(XX) |
| மொத்த தகுதியான வைப்புக்கள் | XXX |
| பொருத்தமான வருடாந்த காப்புறுதி தவணைக் கட்டண வீதம் (%) (ஆ) | XX |
| **காலாண்டு/ மாதம் செலுத்தப்பட வேண்டிய மொத்த காப்புறுதித் தவணைக் கட்டுப்பணம் (இ)** | **XXX** |

(அ) உரிமம் பெற்ற வங்கிகளெனில் காலாண்டு இறுதியிலுள்ள வைப்புக்களின் மீதான பொறுப்பும் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களெனின் மாத இறுதியிலுள்ள வைப்புக்கள் மீதான பொறுப்பும்

(ஆ) தவணைக் கட்டுப்பண வீதம்

(i) உரிமம் பெற்ற வங்கியெனில் உடனடுத்த முன்னைய நிதியாண்டின் இறுதியிலுள்ள வடிவிலான அதனுடைய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கிற்கிணங்க பராமரிக்கப்பட்ட வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலதன போதுமை விகிதம் 14 சதவீதம் அல்லது அதற்கு மேற்படின் ஆண்டிற்கு 0.10 சதவீத தவணைக் கட்டணம் காலாண்டுக்கு ஒரு முறை செலுத்தப்பட வேண்டும்.

(ii) மற்றைய உரிமம் பெற்ற வங்கியாயின் - ஆண்டிற்கு 0.125 சதவீத தவணைக் கட்டுப்பணம் காலாண்டுக்கு ஒரு முறை செலுத்தப்பட வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனமாயின் மாத இறுதியில் உள்ள மொத்த அனைத்து தகுதியான வைப்புக்களின் ஆண்டுக்கு 0.15 சதவீத தவணைக் கட்டுப்பணம் எனக் கணிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும்.

(இ) தவைணக் கட்டுப்பணமானது காலாண்டு/ மாத இறுதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

| | தயாரித்தவர் | சரி பிழை பார்த்தவர் | அனுமதி அளித்தவர் |
|---|---|---|---|
| அலுவலகரின் பெயர் | ................................ | ................................ | ................................ |
| அலுவலகரின் பதவி | ................................ | நிதித் தலைவர் | முதன்மை நிறைவேற்று அலுவலர் |
| திகதி | ................................ | ................................ | ................................ |

**இப் படிவம் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்**

தொலைபேசி: 01124772100, 0112398602 மற்றும் 0112477169, தொலைநகல்: 0112477711

மின்னஞ்சல்: dbsd@cbsl.lk, anuradha@cbsl.lk மற்றும் sumithi@cbsl.lk

**சுற்றறிக்கை எண்: 02/2010**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2010 திசெம்பர் 09

*இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்*
*அனைத்து அங்கத்துவ நிறுவனங்களினதும் அனைத்து*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் - தொழிற்பாட்டு விதிமுறைகள்**

அனைத்து அங்கத்துவ நிறுவனங்களும் பின்வரும் விதிமுறைகளைப் பின்பற்றுமாறு கோரப்படுகின்றன.

1. **வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்களுக்கான மாற்று வீதங்கள்:** வெளிநாட்டுச் செலாவணிப் பொறுப்புக்களை உள்நாட்டு கணக்கீட்டுத் தேவைகளுக்கு மாற்றிக் கொள்வதற்கு மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் மத்திய வங்கி இணையத்தில் (http://www.cbsl.gov.lk) வெளியிடப்படும் தினசரி நாணய மாற்று விகித சுட்டி பாவிக்கப்பட வேண்டும்.

2. **வழங்கப்பட்ட ஏதாவது கடன் வசதிகளுக்கு எதிராக பிணையாக வைத்திருக்கப்படும் வைப்புப் பொறுப்புக்கள்:** அறிக்கை செய்யப்படும் தினத்தன்று, உண்மையாகப் பாவிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் தொகைக்கு ஈடாக பிணையாக வைத்திருக்கப்படும் வைப்புப் பொறுப்புக்கள் காப்புறுதித் தவணைக் கட்டணம் கணக்கிடும் போது அவற்றிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஒரு வைப்பானது மேலதிகப் பிணையாகப் பெறப்பட்டிருப்பின், வைப்பு மீதி அல்லது தீர்க்கப்படாத கடன்வசதியின் மீதி என்பவற்றுள் எது குறைந்ததோ அது நீக்கப்பட வேண்டும்.

3. **வைப்புப் பொறுப்பு கணக்கிடல்:** மாத இறுதியில்/ காலாண்டு இறுதியிலுள்ள காப்புறுதிக்கு தகுதியான வைப்பீட்டாளர்களின் கணக்குகளின் நிலுவை வைப்புப் பொறுப்பாக கொள்ளப்படல் வேண்டும்.

4. **தகுதியான வைப்புக்கள்:**

   (அ) வைப்புப் சான்றிதழ்கள் தகுதியான வைப்பாகக் கருதப்படல் வேண்டும்.

   (ஆ) அங்கத்துவ நிறுவனத் தொகுதியிலுள்ள, ஒரு நிறுவனத்தின் வொஸ்றோ (வெளிநாட்டு வங்கி உள்நாட்டு வங்கியில் வைத்திருக்கும் ரூபாய்க் கணக்கு) கணக்குகள் தகுதியான வைப்புக்களாகக் கருதப்படமாட்டாது.

   (இ) கடல்கடந்த வங்கியியல் பிரிவு மற்றும் வெளிநாட்டுக் கிளைகள் என்பவற்றின் வைப்புக்கள் தகுதியான வைப்புக்களாகக் கருதப்படமாட்டாது.

5. **வைப்பாளர் ரீதியாக விபரங்களை அறிக்கைப்படுத்துதல்:** 2011 திசெம்பரிலிருந்து அங்கத்துவ நிறுவனங்கள், இணைப்பிலுள்ள வடிவத்திலுள்ளவாறு, வைப்பாளர்கள் ரீதியான தகவல்களை இலத்திரனியல் உருவில் இலங்கை மத்திய வங்கியின் வைப்புக் காப்புறுதி பிரிவுக்கு, முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் முதன்மை நிதி அலுவலரினதும் கையொப்பமிடப்பட்ட உள்ளடக்கக் கடிதத்துடன் ஒப்படைக்க வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

பிரதி: வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு**

**படிவ எண்: எஸ்எல்டிஐஎஸ்/02/2010/01**

**இரகசியமானது**

**................................................................ ( அங்கத்துவ நிறுவனத்தின் பெயர்)**

**.............................................. (திகதி/ மாதம்/ வருடம்) இல்**

**தகுதியான வைப்புக்களின் வைப்பாளர் ரீதியான விபரங்கள் தொடர்பான அறிக்கை**

| கணக்கு இலக்கம் | வைப்பாளர்கள் பெயர் | தேசிய அடையாள அட்டை இல. அல்லது வேறு ஏதாவது அடையாள இல. | தகுதியான வைப்பு நிலுவை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**குறிப்பு:** கூட்டுக் கணக்குகளாயின், கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், மொத்த வைப்பு நிலுவை என்பன அறிக்கைப்படுத்தப்பட வேண்டும்.

.......................................................... ..........................................................

முதன்மை நிதி அலுவலர் முதன்மை நிறைவேற்று அலுவலர்

.......................................................... ..........................................................

பெயர் பெயர்

**தொடர்பு எண்: 12/02/008/002/001**

நாணயத் திணைக்களம்
2010 யூலை 29

*அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

**சுற்றோட்டத் தாள்களின் புதிய தொடர்**

2011இன் இரண்டாம் காற்பகுதியில் சுற்றோட்டத் தாள்களின் புதிய தொடரொன்றினை வெளியிடுவதற்கு இலங்கை மத்திய வங்கி திட்டமிட்டு வருகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்பொழுது சுற்றோட்டத்திலிருக்கும் பத்தாவது நாணயத் தொடர் வெளியிடப்பட்ட 1991இற்குப் பின்னர் 19 ஆண்டுகளுக்குப் பின்னர் பதினோராவது நாணயத் தொடராக இப் புதிய தொடர் வெளியிடப்படவுள்ளது. ஏற்கனவேயுள்ள தொடர்களுக்கும் இப் புதிய தொடருக்குமிடையிலான முக்கிய வேறுபாடு யாதெனில் தாள்களின் பருமனாகும். ஏற்கனவேயுள்ள தாள்களின் தொடர்களுக்கு மாறாக தாள்களின் அகலம் மற்றும் நீளம் ஆகிய இரண்டும் எல்லா நாணய இனங்களுக்குமிடையில் வேறுபடுகின்றன. புதிய நாணயத் தொடரின் அகலம் எல்லா இன நாணயங்களுக்கும் ஒரே மாதிரியாகவுள்ள வேளையில் நீளம் மட்டும் நாணய இனங்களின்படி அதிகரித்துச் செல்கின்றன. புதிய தாள்களைக் கையாளும் விதத்தில் முறைமையில் பூர்வாங்க சீராக்கங்களை வங்கிகள் செய்வதற்கு வசதியாக ஏற்கனவேயுள்ள தொடர்களினதும் புதிய தொடர்களினதும் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் கீழே தரப்படுகின்றன. புதிய தாள் தொடர்களின் விபரமான தகவல்கள் 2011இன் இரண்டாம் காலாண்டில் திட்டமிடப்பட்ட நாணய வெளியீட்டின் பின்னர் புதிய நாணயத் தொடர்களின் விபரமான தகவல்கள் வழங்கப்படும்.

| ஏற்கனவேயுள்ள நாணயத் தொடர்கள் - 1991 | | புதிய நாணயத் தொடர்கள் - 2010 | |
|---|---|---|---|
| தொனிப்பொருள்: இலங்கைப் பாரம்பரியம் | | தொனிப்பொருள்: அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக் கலைஞர்கள் | |
| நாணயத்தின் வகை | பருமன் | நாணயத்தின் வகை | பருமன் |
| ரூ. 2000 | 164 x 82 மிமீ | ரூ. 5000 | 153 x 67 மிமீ |
| ரூ. 1000 | 157 x 78.5 மிமீ | ரூ. 1000 | 148 x 67 மிமீ |
| ரூ. 500 | 150 x 75 மிமீ | ரூ. 500 | 143 x 67 மிமீ |
| ரூ. 100 | 143 x 71.5 மிமீ | ரூ. 100 | 138 x 67 மிமீ |
| ரூ. 50 | 136 x 68 மிமீ | ரூ. 50 | 133 x 67 மிமீ |
| ரூ. 20 | 129 x 64 மிமீ | ரூ. 20 | 128 x 67 மிமீ |
| ரூ. 10 | 122 x 61 மிமீ | | |

**நாணயக் கண்காணிப்பாளர்**

**தொடர்பு எண்: 06/04/01/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 மாச்சு 11

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான அறிவித்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள்**

வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மேலும் தளர்த்தப்பட்டமையினை கருத்திற் கொண்டு, அரச பிணையங்கள் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட பங்கு மூலதனக் கம்பனிகள் மற்றும் இலங்கையிலுள்ள கூறுநம்பிக்கையின் கூறுகள் என்பனவற்றில் தகுதியுடைய முதலீட்டாளர்களினால் செய்யப்படும் முதலீடுகளின் பொருட்டு புதிய பணிப்புரைகளை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2. இதற்கமைய, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு, திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு, திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு, திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள் - தேசாபிமானி என்பன 2010 மாச்சு 11ஆம் நாள் தொடக்கம் பிணையங்கள் முதலீட்டு கணக்குகள் என மீளப் பெயரிடப்பட்டன.

3. **தகுதியுடைய முதலீட்டாளர்கள்:**

(i) நாட்டு நிதி, பிராந்திய நிதிகள் மற்றும் சமவாய நிதிகள் போன்ற வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள்,

(ii) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள்,

(iii) இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ வதியும் வெளிநாட்டுப் பிரசைகள்,

(iv) வதிவற்ற இலங்கையர்கள்,

(v) உள்முக பணவனுப்பல்களைப் பெறுகின்ற இலங்கையில் வசிக்கும் இலங்கை தொழில்சார் நிபுணர்கள், மற்றும்

(vi) உள்முகப் பணவனுப்பல்களைப் பெறும் இரட்டைப் பிரசா உரிமை பெற்றோர்

4. **(அ) அனுமதிக்கப்பட்ட வரவுகள்:**

(i) வங்கித்தொழில் முறைமைகளினூடாக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள்,

(ii) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயம்/ வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள்/ வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருக்குமொருவரினால் அவற்றிலிருந்து செய்யப்படும் நிதியங்களின் மாற்றல்,

(iii) திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்களின் விற்பனை அல்லது மாற்றல் அல்லது முதிர்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகள் அல்லது மூலதன இலாபங்கள் வாயிலாகப் பெறப்பட்ட ஏதாவது வருமானம்,

(iv) ஆவணச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்ட பங்குகளின் விற்பனைப் பெறுகைகள் (தரகர்கள் ஒப்பந்தக் குறிப்புக்கள் மற்றும் வரி போன்றன கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கான சான்றுகள்) மற்றும் பங்கிலாபங்கள்,

(v) ஆவணச் சான்றுகளின் உதவியுடன் வரி நீங்கலாக கூறுநம்பிக்கைகளின் கூறு மீதான பங்கிலாபம்,

(vi) ஆவணச் சான்றுகளின் ஆதரவுடன் வரி நீங்கலாக கூறுகளின் மீட்பு மீதான பெறுகைகள்,

(vii) ஆதரவுச் சான்றுகளுடன் பங்குக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தரகுகள்,

(vii) கம்பனிகளை ஒடுக்கி விடுவதன் மூலம் கிடைக்கும் பெறுகைகள்,

(ix) திறைசேரி முறிகளின் மீது பெறப்பட்ட வட்டி,

(x) பங்குக் கடன்பாடுகள் மற்றும் கடன் வழங்கல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக 2001.11.06 ஆம் நாளிடப்பட்ட எண் 06/02/12/2001 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கிணங்க பங்குகளின் மீது அனுமதிக்கப்பட்ட மற்றைய அனைத்து வரவுகளும்.

**(ஆ) அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்:**

(i) பங்குகள்/ கூறுநம்பிக்கைகளின் கூறுகள்/ திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்கள் என்பனவற்றின் முதலீடுகளுக்கான கொடுப்பனவுகள்,

(ii) பங்குகள்/ கூறுகள் திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்கள் மற்றும் பங்குகளின் அல்லது கூறுகளின் பங்கிலாபங்கள் என்பனவற்றின் விற்பனை/ மீட்பு/ முதிர்ச்சி அல்லது ஒடுக்கிவிடுதல் என்பனவற்றின் பெறுகைகளை வெளியில் அனுப்புதல்,

(iii) தரகர்கள், முதனிலை வணிகர்கள், தலைமை முகாமையாளர்கள் கூறுநம்பிக்கைகளின் முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பனவற்றின் கொடுப்பனவுகள்,

(iv) கணக்கு வைத்திருப்பவரின் உள்ளூர் செலவுகளுக்கான கொடுப்பனவுகள்,

(v) வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் கணக்கு வைத்திருப்பவரினால் பேணப்படும் கணக்குகளுக்கான நிதிய மாற்றல்கள்,

(vi) பங்குகள் மீதான பங்குக் கடன்பாடு மற்றும் கடன் வழங்கல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக 2001.11.06ஆம் நாளிடப்பட்ட எண் 06/02/12/2001 கொண்ட எமது சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டிருந்த அனைத்துப் பற்றுக்களும்.

5. அதே கணக்குடமையாளரின் பங்கு முதலீட்டுக் கணக்கிற்கிடையில் நிதிய மாற்றல்களை அனுமதிக்க முடியும்.

6. பங்கு முதலீட்டு கணக்குகளை தகுதியுடைய முதலீட்டாளர்கள் கூட்டாகவும் பேண முடியும்.

7. வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் பங்குகளில் முதலீடு செய்யும் நோக்கத்திற்கு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஒப்புதல் தேவையாகவுள்ளது.

8. தகுதியுடைய முதலீட்டாளர்களின் அனைத்து முதலீடுகளினதும் கூட்டுத்தொகை எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் வெளிநின்ற திறைசேரி முறிகள் அல்லது திறைசேரி உண்டியல்களின் இருப்பில் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டினூடாகவும் திறைசேரி முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் கொள்வனவு செய்வதற்கு தகுதியுடைய முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். எனினும், இவ்வெல்லையானது வகை 3 (v) இன் கீழுள்ள தகுதியுடைய முதலீட்டாளர்களினாலும் வகை 3 (vi)இன் கீழுள்ள வதியும் இலங்கையர்களினாலும் வைத்திருக்கப்படும் திறைசேரி முறிகளுக்கும் திறைசேரி உண்டியல்களுக்கும் பொருந்தாது.

9. மேலும், திறைசேரி முறிகளிலும் திறைசேரி உண்யடில்களிலும் முதலீடு செய்துள்ள தகுதியுடைய முதலீட்டாளர்கள் இத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த திறைசேரி முறிகளையும் உண்டியல்களையும் பிணையமாகப் பயன்படுத்தி மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

10. **அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் விபரங்களை நாளாந்த அடிப்படையில் கணனி வழி உடனடி முறையில் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேடமானது

இல. 1644/26 வியாழக்கிழமை 2010 மார்ச்சு 11

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

### இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8இன் (1)ஆம் துணைப் பிரிவுகளினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கையிலுள்ள அல்லது வதியும் ஆட்கள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தவொரு வங்கியிலும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும், பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அல்லது எந்தவொரு வெளிநாட்டு வங்கியிலுமுள்ள அத்தகைய கணக்குகளை மூடுவதற்கும் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு இத்தால் பொதுவான அனுமதி வழங்கப்படுகிறது.

**கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்ட ஆட்கள்**

1. (i) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாக சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர்;

   (ii) இலங்கையில் வதிகின்ற அதேவேளையில் இலங்கைக்கு வெளியே தொழில்சார் நிபுணத்துவம் அல்லது தொழில் பயிற்சி பணிகளை வழங்குகின்ற தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கம்பனியொன்று அல்லது நிறுவனம்;

   (iii) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு நிதியமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று;

   (iv) வெளிநாட்டில், வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று;

   (v) வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்யுமொருவர்.

**கணக்குகளிற்கான வரவுகள்**

2. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி அல்லது சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகளின் கீழ் இலங்கைக்கு வெளியே சட்ட ரீதியாகக் கிடைக்கப் பெற்ற அல்லது ஈட்டிய அல்லது கணக்கு வைத்திருப்பவரின் அனுமதிக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளிடமிருந்து பெற்ற வெளிநாட்டு நாணயத்தினை இக் கணக்குகளில் வரவு வைக்கலாம்.

**கணக்குகளிற்கான பற்றுக்கள்**

3. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி அல்லது சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகளின் கீழ் இலங்கையில் வதியும் ஆளொருவருக்காக கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இக் கணக்கிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்த முடியும்.

**கணக்குகளை மூடிவிடுதல்**

4. இத்தால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க வெளிநாட்டு வங்கிகளில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் கணக்கொன்று மூடப்படுமிடத்து கணக்கிலுள்ள மீதி அத்தகைய கணக்கு மூடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்கிடையில் வங்கித்தொழில் வழிப்படுத்தல்களினூடாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

5. சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வறிவித்தலில்-

(i) “அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்” என்பது தங்கம் அல்லது ஏதேனும் நாணயம் தொடர்பில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகராக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்று எனப் பொருள்படும்;

(ii) “அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

(iii) “வெளிநாட்டு நாணயம்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;

(iv) “நாணயம்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;

(v) “இலங்கையில் வதியும் ஆள்” அல்லது “இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 37(i)ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட பணிப்பிலும், 1972 ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல. 15007 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரையிலும் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2010 மார்ச்சு 11

**தொடர்பு எண்: 06/04/02/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 மார்ச்சு 11

*அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து வணிகர்களுக்குமான அறிவித்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

### வெளிநாட்டு நாணயங்களில் முன்னோக்கிய ஒப்பந்தங்கள்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்கு உட்படும் தன்மையிலிருந்து பாதுகாப்பதற்காக அவர்களது வாடிக்கையாளர்களுடன் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாமென இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை அல்லது கொள்வனவு, செலாவணிக் கட்டுபாட்டுச் சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகள் என்பனவற்றின் கீழ் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படுகின்றன-

(i) ஒப்பந்தத்தின் முதிர்ச்சிக் காலம் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் காலத்தினை விஞ்சக்கூடாது. ஒப்பந்தக் காலம் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் காலத்திலும் பார்க்க குறுகியதாக இருக்குமிடத்து ஒப்பந்தத்தினை குறிப்பிட்ட கொடுப்பனவுகள்/ பெறுகைகளுடன் பொருந்தும் விதத்தில் மாற்றியமைக்க முடியும்.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் குறிப்பிட்ட வெளிப்படுத்தலின் உண்மைத்தன்மை பற்றி திருப்தி கொள்ளுதல் வேண்டும்.

(iii) முன்னோக்கிய ஒப்பந்தத்தின் நாணயம் குறித்துரைக்கப்பட்ட நாணயங்களுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

(iv) ஒப்பந்தக் காலம் வாடிக்கையாளரின் விருப்பத்திற்குரியதாகும்.

(v) வெளிநாட்டு நாணயக் கடன்களுடன் தொடர்பான முன்னோக்கிய ஒப்பந்தங்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் ஒப்புதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) இலங்கை ரூபாவுடன் தொடர்புபட்ட ஒப்பந்தங்கள் ஒரு முறை இரத்துச் செய்யப்படின் மீளப் பதிவு செய்யப்பட முடியாது, எனினும் முதிர்ச்சியன்றோ அல்லது அதற்கு முன்போ நிலவுகின்ற வீதங்களில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/03/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 மாச்சு 11

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக முறையே 2008.06.02 மற்றும் 2008.07.03 நாளிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/05/2008 மற்றும் 06/04/09/2008 கொண்ட எங்களது பணிப்புரைகளின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

வதிவற்றோரின் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகளுக்கும் அத்தகைய வதிவற்றோரினால் இலங்கையிலுள்ள கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படும் கணக்குகளுக்குமிடையில் 2010.03.11ஆம் நாளிலிருந்து நிதியமாற்றல்களை மேற்கொள்ளலாம் என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/04/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 மார்ச்சு 11

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிப்பதற்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளின் மீது செய்யப்பட்ட இறக்குமதிகளுக்கான அளவுத் தேவைப்பாடுகள்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 08/12/2008 நாளிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/20/2008 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் நீக்கப்படுகின்றமை பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்** **பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 06/04/05/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 மே 07

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**பன்னாட்டு பணிகள் வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் “பன்னாட்டுப் பணிகள் வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்” இனை பின்வரும் நடைமுறைகளுக்குட்பட்டு திறப்பதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. **தகுதியுடைய பணிகள் வழங்குவோர்**

(i) இலங்கையைத் தளமாகக் கொண்டு இப் பணிப்புரையின் அட்டவணை 1இல் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் தொழில்சார் நிபுணத்துவத்தினை அல்லது தொழிலினை, இலங்கைக்கு வெளியே வதியுமொருவருக்கு வழங்குகின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்ற, ஏதேனும் வதியும் கம்பனி அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்குடமைக் கம்பனி அல்லது இலங்கையில் வதியும் தனிப்பட்ட கம்பனிகள்.

(ii) மேலேயுள்ள துணைப் பந்தி (i) இக் குறிப்பிடப்பட்ட தகுதியுடைய பணிகளை வழங்குவோரினால் நிரந்தரமான அல்லது ஒப்பந்த அடிப்படையில் தொழிலுக்கமர்த்தப்பட்டு அத்தகைய பணிகளை வழங்குவோருடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டவர்களுக்கு

அட்டவணை 1இல் பட்டியல்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் நிபுணத்துவ அல்லது தொழிலை மேற்கொள்கின்ற அத்தகைய தொழில்தருநர் அவர்களின் பணிக்கான ஊதியத்தின் ஒரு பகுதியை அல்லது முழுவதனையும் வெளிநாட்டு நாணயத்தில் வழங்க முடியும்.

**3. கணக்குகளைத் திறத்தல்**

பின்வரும் ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மீது நடைமுறை, சேமிப்பு அல்லது தவணை வைப்புக்கள் என்ற வடிவிலான ஏதாவதொரு கணக்கினை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறக்கலாம்.

(i) தொழில் வழங்குநர்

திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் தொழில்தருநர் வருமான வரி விலக்கல்களுக்கு உரித்துடையவர் என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உள்நாட்டரசிறை ஆணையாளர் நாயகத்திடமிருந்து ஒரு கடிதம்.

(ii) ஊழியர்கள்

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட தொழில்தருநர்களினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களில் ஊழியர்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கின்றனர் என்பதனையும் (இதனகத்துப் பின்னர் “விலக்களிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்” எனக் குறிப்பிடப்படும்) அச் செயற்றிட்டங்களிலிருந்து பேணப்படும் வெளிநாட்டு நாணயங்களிலிருந்து அவரின் பணிக்கான கொடுப்பனவு செலுத்தப்படும் என்பதனையும் உறுதிப்படுத்தும் தொழில்தருநரிடமிருந்தான ஒரு கடிதம்.

**4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(i) பன்னாட்டுப் பணிகளுக்காக வங்கித்தொழில் வழிப்படுத்தலூடாக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட பணப் பெறுகைகள்.

(ii) விலக்களிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்காக தொழில்தருநர்களினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயங்களிலிருந்து செலுத்தப்பட்ட ஊழியர்களுக்கான வருமானம்.

(iii) கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியங்களின் மீது ஒன்று சேர்ந்த வட்டி.

**5. அனுமதிக்கத்தக்க பற்றுக்கள்**

(i) தொழில்தருநரினால் மேற்கொள்ளப்படும் விலக்களிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் நேரடியாக ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு வங்கி மாற்றல்கள் வடிவிலமைந்த வெளிநாட்டு நாணயங்களிலான கொடுப்பனவு.

(ii) இலங்கையில் வதியும் ஆட்களுக்கு அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

(iii) இலங்கை ரூபாவிலான மீளப் பெறுகைகள்.

**6. அறிக்கையிடல்**

“பன்னாட்டு பணிகளை வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்” தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளுக்குப் பிந்தாமல் அட்டவணை IIஇல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் காட்டப்பட்டவாறு மாதாந்த அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

அட்டவணை I

**தொடர்பு எண் 06/04/05/2010 கொண்ட பணிப்புரையின் நோக்கத்திற்கான தொழில்சார் நிபுணத்துவப் பணிகள்**

1. நன்கமைந்த தொழில்சார் நிபுணத்துவத்தினைக் கொண்ட உறுப்பினரான எவரேனும் தனிப்பட்ட ஒருவரினால் இப் பணிக்கு நுழைவதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆற்றல் தரங்களுடன் மற்றும் இதனை நடைமுறைப்படுத்தும் வேளையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நியம நடத்தையுடன் ஆற்றிய பணிகள்;
2. கணக்கீடு, கணக்குப் பதிவு அல்லது கணக்காய்வு;
3. வரி ஆலோசனைப் பணிகள்;
4. பட வரைஞர் ஒருவரின் பணிகள்;
5. பொறியியல் பணிகள்;
6. மென்பொருள் அபிவிருத்தி, தரவு செய்முறைப்படுத்தல், தரவுத்தள அபிவிருத்தி அல்லது கணனி முறைமை வடிவமைப்பு;
7. இலங்கைக்கு வெளியே விளம்பரப்படுத்தல்;
8. ஆராய்ச்சிப்பணி மற்றும் அறிக்கை எழுதுதல்;
9. புகைப்படப் பிடிப்பு;
10. இலங்கைக்கு வெளியே பிரசுரித்தல்;
11. அழகூட்டல் கலாச்சாரம், சிகை அலங்கரிப்பு அல்லது இலங்கைக்கு வெளியே விளம்பரங்களில் நடித்தல்;
12. விளையாட்டு வீரர் அல்லது கலைஞர் ஒருவரின் பணிகள்;
13. மதிப்பீட்டாளர் அல்லது ஏலதாரரின் பணிகள்;
14. நீர்க்குழாய் பொருத்துநர், கொத்தனார் அல்லது தச்சு வேலை செய்பவர்;
15. கணியம்சார் அளவீடு;
16. நலக் கவனிப்புப் பணிகள்;
17. இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் வேளாண்மைச் சொத்துக்களை முகாமை செய்தல்.

அட்டவணை II

**பன்னாட்டுப் பணிகள் வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று**

**........................................ முடிவிலுள்ளவாறு**

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்:..............................................................**

| எண் | விடயம்/ நாணயம் | எண்/ தொகை |
|---|---|---|
| 01. | கணக்குகளின் எண்ணிக்கை | |
| | ஐ.அ.டொலர் | |
| | ஸ்டேர்லிங் பவுண் | |
| | யூரோ | |
| | ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |
| 02. | முன்னைய மாதத்தின் முடிவிலுள்ளவாறு வெளிநின்ற மொத்த நிலுவை 000' | |
| | ஐ.அ.டொலர் | |
| | ஸ்டேர்லிங் பவுண் | |
| | யூரோ | |
| | ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |

| | | |
|---|---|---|
| 03. | நடப்பு மாதத்தின் மொத்த வரவுகள் 000’ | |
| | ஐ.அ.டொலர் | |
| | ஸ்டேர்லிங் பவுண் | |
| | யூரோ | |
| | ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |
| 04. | நடப்பு மாதத்தின் மொத்த பற்றுக்கள் 000’ | |
| | ஐ.அ.டொலர் | |
| | ஸ்டேர்லிங் பவுண் | |
| | யூரோ | |
| | ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |
| 05. | நடப்பு மாத முடிவிலுள்ளவாறு வெளிநின்ற மொத்த நிலுவை 000’ | |
| | ஐ.அ.டொலர் | |
| | ஸ்டேர்லிங் பவுண் | |
| | யூரோ | |
| | ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் .............................**

**தொடர்பு எண்: 06/04/06/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 யூன் 02

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்கின்ற இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்**

வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்கின்ற இலங்கையர்களுக்கான பயணப் படியில் ஒரு பகுதியினை வெளிநாட்டு நாணயத் தாள்களாக வழங்கும் தற்போதைய மட்டத்தினை ஐ.அ.டொலர் 2000 இலிருந்து ஐ.அ.டொலர் 2500 இற்கு அதிகரிப்பதற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. எனினும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தினை வழங்கும் பொழுது கோரிக்கையின் உண்மையான தன்மை பற்றி திருப்தியடைந்த பின்னர் நெருக்கமான கவனிப்பினையும், தற்றுணிபினையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக முன்னர் விடுக்கப்பட்ட 2008.07.11ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/12./2008 கொண்ட பணிப்புரை இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

### அதி விசேடமானது

இல. 1673/43 வெள்ளிக்கிழமை 2010 ஒத்தோபர் 01

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 10 இன் நியதிகளுக்கிணங்க, வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதியும் தனிப்பட்டவர்கள் (இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர் உட்பட) ஆகியோருக்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களை (இதனகத்துப் பின்னர் தொகுதிக் கடன் என குறிப்பீடு செய்யப்படும்) வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

*தற்பொழுது இத்தால்:*

1. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 மற்றும் 11இன் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் மூலம் 2ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வருவனவற்றிற்கு அனுமதி வழங்கப்படுகிறது:-

   (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரின் கணக்கில் வரவு வைப்பதற்கும்;

   (ii) இலங்கையில் வதியும் ஆட்களுக்கும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்குமிடையில் தொகுதிக் கடன்களை மாற்றல் செய்வதற்கும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கிடையே மாற்றல் செய்வதற்கும்.

**2. நிபந்தனைகள்**

   (i) தொகுதிக் கடன்களில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகள் செலாவணிக் கட்டுப்பாட்டாளர்கள் சார்பில் வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் “பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு” ஒன்றிலிருந்து அல்லது கணக்குகளிலிருந்து மட்டுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்;

   (ii) வர்த்தக வங்கியொன்று அல்லது தொகுதிக் கடன்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மூலதனப் பணம், கூப்பன், வட்டி மற்றும் தரகுகளின் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு உரித்துடைய வேறு எவரேனும் ஆட்கள் அத்தகைய கொடுப்பனவுகளை மேலேயுள்ள பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளுக்கு அல்லது அக் கணக்குகளிலிருந்து மட்டுமே மேற்கொள்ள முடியும்.

**3. பொருள்கோடல் - இக் கட்டளைகளின் நோக்கத்திற்காக -**

   (i) இலங்கையில் வதிகின்ற ஆட்கள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்கள் என்பது 1972.04.21ஆம் திகதியிடப்பட்ட 15007 இலக்க அரச வர்த்தமானியில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையில் காணப்படும் அதே கருத்தினையே கொண்டிருக்கும்.

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2010 ஒத்தோபர் 01

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேடமானது

இல. 1681/10 திங்கட்கிழமை 2010 நவெம்பர் 22

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

1977ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவுகள், 29 சி மற்றும் 30ஆம் பிரிவின் (5)ஆம் துணைப் பிரிவு ஆகியவற்றின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் "வெளிநாட்டு கம்பனி" ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கம்பனியொன்று, கீழே குறித்துரைக்கப்பட்டவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கையில் நிறுவப்பட்டுள்ள வியாபாரத் தலமொன்றினூடாக வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

**1. வெளிநாட்டுக் கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள்**

கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று இலங்கையில் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்.

(அ) அட்டவணை 1இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர்ந்த ஏதேனும் வணிக, வர்த்தக, கைத்தொழில் நடவடிக்கைகள். அட்டவணை IIஇல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டனவாகும்;

(ஆ) தொடர்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம், செயற்றிட்ட அலுவலகம் அல்லது அதையொத்த அலுவலகங்களினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படுகின்ற அத்தகைய நடவடிக்கைகளிலிருந்தும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தவொரு வருமானத்தையும் பெறாத வர்த்தகமல்லா, வியாபாரமல்லா அல்லது கைத்தொழில் நடவடிக்கையல்லாத நடவடிக்கைகள் எதனையும்.

**2. வெளிநாட்டுக் கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படுகின்ற நிதியிடல் நடவடிக்கைகள்**

2.1 மேலே பந்தி 1இன் துணைப்பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை கிளை அலுவலகம், செயற்றிட்ட அலுவலகம் அல்லது அதையொத்த ஏனைய அலுவலகங்கள் போன்ற வியாபாரத் தலங்களூடாக மேற்கொள்வதற்காக அல்லது கொண்டு நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியொன்று -

(அ) இது தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய இலங்கையிலுள்ள வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட "உள்முக முதலீட்டு கணக்கு" என குறித்துரைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கினூடாக வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 200,000 அல்லது அத்தொகைக்குச் சமனான வேறு ஏதாவது குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களை முதலீடு செய்யலாம்;

(ஆ) ஆகக் குறைந்தது ஐ.அ.டொலர் 200,000 அல்லது அதற்குச் சமனாக குறித்துரைக்கப்பட்ட நாணயத்தில் அமைந்த பணவனுப்பல்கள் பெறப்பட்டமைக்கான சான்றுகளை பதிவு செய்து 30 நாட்களுக்குள் கம்பனிகளின் பதிவாளருக்கு காட்டுதல் வேண்டும்; அத்துடன்

(இ) மேலே பந்தி (அ) இல் உள்ளவாறு, அனுப்பப்பட்ட நிதியம் கம்பனியின் ஏட்டில் முதலீடாக பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அக் கம்பனி இலங்கையில் அதன் வியாபாரத்தினை நிறுத்தும் வரை அத்தகைய பதிவேடுகள் தொடர்ந்து பேணப்படுதலும் வேண்டும்.

2.2 தொடர்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம் அல்லது அதையொத்த அலுவலகம் போன்ற வியாபாரத்தலமொன்று வெளிநாட்டிலுள்ள அத்தகைய தலங்களின் பேணலுக்கு தேவைப்படும் நிதியினை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் "உள்முக முதலீட்டுக் கணக்கு" ஊடாக அனுப்பமுடியும்.

**3. வெளிநாட்டுக் கம்பனியொன்றால் இலாபம், மிகை நிதியம், வேத்துரிமை, நடத்துரிமை அல்லது அதையொத்த கொடுப்பனவுகளை வெளியே அனுப்புதல்.**

3.1 கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியொன்று வரியைக் கழித்த இலாபம், வேத்துரிமை, நடத்துரிமை அல்லது அதையொத்த கொடுப்பனவுகள் அல்லது மிகை நிதியத்தினை, பின்வரும் ஆவணங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களின் "உள்முக முதலீட்டுக் கணக்கின்" ஊடாக இலங்கைக்கு வெளியே அனுப்ப முடியும்.

3.2 இலாபத்தினை அனுப்பும் விடயத்தினைப் பொறுத்தவரை:

(அ) தொடர்பான ஆண்டிற்குரிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் இலாபநட்டக் கணக்குகளின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி;

(ஆ) அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டமையின் மூலம் இலாபம் உழைக்கப்பட்டதென்பதனை உறுதிப்படுத்துகின்ற இலங்கையிலுள்ள கணக்காய்வாளர் கம்பனியொன்றிலிருந்தான சான்றிதழ்.

3.3 வேத்துரிமை, நடத்துரிமை அல்லது அதையொத்த கொடுப்பனவுகளை அனுப்பும் விடயத்தினைப் பொறுத்தவரை:

(அ) உடன்படிக்கை மற்றும் வர்த்தக ரீதியான பொருட்பட்டியல்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று; அத்துடன்

(ஆ) அனுப்பத்தக்க பணம் பெறப்பட்ட விதத்தினை உறுதிப்படுத்துகின்ற இலங்கையிலுள்ள கம்பனியின் கணக்காய்வாளரிடமிருந்தான சான்றிதழ் ஒன்று.

3.4 பதிவுகள் எதனையும் முடிவுறுத்த முன்னர் மிகை நிதியத்தினை அனுப்பும் விடயத்தினைப் பொறுத்தவரை:

(அ) இலங்கையிலுள்ள கம்பனிக் கணக்காய்வாளரிடமிருந்து பெறப்பட்ட அனுப்பத்தக்க மிகை பெறப்பட்ட முறையினை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்; அத்துடன்

(ஆ) வருமான வரிகள் மற்றும் ஏற்புடைத்தான மற்றைய நியதிக் கடப்பாட்டுக் கொடுப்பனவுகளை ஈடுசெய்கின்ற விதத்தில் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இலங்கையிலுள்ள கணக்காய்வாளர் கம்பனியொன்றினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்.

3.5 பதிவினை முடிவுறுத்துகின்ற நேரத்தில் மிகை நிதியினை அனுப்பும் விடயத்தினைப் பொறுத்தவரை:

(அ) இறுதிக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல்கூற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி;

(ஆ) அனுப்பத்தக்க மிகை நிதி பெறப்பட்ட விதத்தினை உறுதிப்படுத்துகின்ற இலங்கையிலுள்ள கம்பனிக் கணக்காய்வாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்;

(இ) அனைத்து வருமான வரி மற்றும் ஏற்புடைத்தான வரிப் பொறுப்புக்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற உள்நாட்டரசிறைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரித் தீர்ப்பனவுச் சான்றிதழ்;

(ஈ) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநிற்கும் நியதிப் பொறுப்புக்கள் எதுவுமில்லை என்பதனையும் தெரிந்த பொறுப்புக்கள் யாவும் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன என்பதனையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் இலங்கையிலுள்ள கம்பனிகள் கணக்காய்வாளரிடமிருந்தான சான்றிதழ் ஒன்று.

4. எழுதப்பட்ட வேறு ஏதாவது சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு முரணான அல்லது அதனைப் பாதிக்கின்ற உள்ளடக்கமெதனையும் இவ்வறிவித்தல் கொண்டிருக்கக்கூடாது.

5. இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக -

(அ) "வெளிநாட்டுக் கம்பனி" என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதே கருத்தினையே கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) "கிளை அலுவலகம்" என்பதன் கருத்து தாய்க் கம்பனியினால் அல்லது தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அதே வியாபாரத்தினை அல்லது கணிசமானளவிற்கு அதே வியாபாரத்தினை மேற்கொள்கின்ற வெளிநாட்டுக் கம்பனியின் அல்லது நிறுவனத்தின் கிளை என விபரிக்கப்படுகிறது;

(இ) "செயற்றிட்ட அலுவலகம்" என்பதன் கருத்து, இலங்கையில் செயற்றிட்டமொன்றினை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டுக் கம்பனியின் நலவுரித்துக்களை பிரசன்னப்படுத்துவதற்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள வியாபாரத்தலம் எனக் கொள்ளப்படல் வேண்டும்;

(ஈ) "தொடர்பு அலுவலகம்" என்பதன் கருத்து வெளிநாட்டுக் கம்பனி அல்லது அதன் தலைமை அலுவலகம் அல்லது குழுமத்துடன் தொடர்புகளை வழிப்படுத்துவதற்காக இலங்கையில் நிறுவப்பட்டிருக்கும் வெளிநாட்டுக் கம்பனியொன்றின் அலுவலகம் என்பதாக இருத்தல் வேண்டும்;

(உ) "பிரதிநிதித்துவ அலுவலகம்" என்பதன் கருத்து பொருட்களின் பன்னாட்டு வர்த்தகத்தில் அல்லது தலைமை அலுவலகத்திற்கு இலங்கையின் வியாபார போக்குகள் பற்றி அறிக்கையளிப்பதற்கான பணிகளை வழங்குவதில் அல்லது இலங்கையில் விற்பனை செய்யப்படும் குறிப்பிட்ட பொருட்கள் அல்லது பணிகள் பற்றி இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு மதியுரைகள், தகவல்கள் போன்றவற்றை வழங்குவதில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுக் கம்பனிகளினால் இலங்கையில் நிறுவப்பட்டுள்ள அலுவலகமொன்று என்பதாக இருத்தல் வேண்டும்.

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2010 நவெம்பர் 22

**அட்டவணை I**

## வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு அனுமதிக்கப்படாத வர்த்தக, வியாபார அல்லது கைத்தொழில் நடவடிக்கைகள்

(i) பணம் கடன் வழங்கல்;

(ii) அடகு பிடித்தல்;

(iii) ஐ.அ.டொலர் இரண்டு மில்லியனிற்கும் குறைவான மூலதனத்துடன் கூடிய சில்லறை வர்த்தகம்;

(iv) கரையோர மீன்பிடி;

(v) தேயிலை, இறப்பர், தெங்கு, மற்றும் அரிசி என்பனவற்றின் பயிர்ச் செய்கை மற்றும் ஆரம்பப் பதனிடல்;

(vi) புதுப்பிக்கப்பட முடியாத தேசிய மூலவளங்களை அகழ்தல் மற்றும் ஆரம்ப பதனிடல்;

(vii) சரக்கு அனுப்புதல்;

(viii) கப்பற்படுத்தல் முகவர் வியாபாரம்;

(ix) பாரியளவில் பொறிமயப்படுத்தப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு;

(x) லொத்தர்கள்;

(xi) பாதுகாப்பு முகாமைத்துவம் உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகள், தனி நபர்கள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கான மதிப்பீடு மற்றும் நிபுணத்துவம்.

**அட்டவணை II**

## செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி தேவைப்படுகின்ற நடவடிக்கைகள்

(i) பன்னாட்டு ரீதியில், நிர்ணயிக்கப்பட்ட அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட இலங்கை ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி;

(ii) கரும்பு, கொக்கோ மற்றும் வாசனைத் திரவியங்களை பயிரிடல் மற்றும் ஆரம்பப் பதனிடல்;

(iii) உள்நாட்டு மரங்களைப் பயன்படுத்துகின்ற மரத்தினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்;

(iv) மீன்பிடி (ஆழ்கடல் மீன்பிடி);

(v) பொதுமக்கள் தொடர்பூட்டல்;

(vi) கல்வி;

(vii) வெளிநோக்கிய பயணங்களுக்கான முகவர் வியாபாரம்;

(viii) உள்நாட்டு வான் போக்குவரத்து;

(ix) கரையோர கப்பற்படுத்தல்;

(x) பின்வருவனவற்றை தயாரிக்கின்ற அல்லது உற்பத்தி செய்கின்ற ஏதேனும் கைத்தொழில்:-

(அ) ஆயுதங்கள், சுடுபடைக் கலன்கள், வெடி பொருட்கள், இராணுவ ஊர்திகள் மற்றும் கருவிகள், வான் கலம் மற்றும் ஏனைய இராணுவ வன் பொருட்கள்.

(ஆ) நஞ்சு, போதைப் பொருட்கள், மது வகை, அபாயகரமான ஒளடதங்கள் மற்றும் நச்சுப் பொருட்கள், தீங்கிழைக்கக்கூடிய அல்லது புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய பொருட்கள்; அத்துடன்

(இ) நாணயம், நாணயக் குத்தி மற்றும் பாதுகாப்பு ஆவணங்கள்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

இல. 1681/11 திங்கட்கிழமை 2010 நவெம்பர் 22

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

### இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் தொகுதிக் கடன்களை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்குமான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு (இ.ச. வா. அத்தியாயம் 423) ஏற்புடைத்தான விதத்தில் பிரிவு 10, 11 மற்றும் 15ஆம் பிரிவுகளின் நியதிகளில் 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ள கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாற்றத்தக்க அல்லது மாற்றத்தகாத, மீட்கத்தக்க அல்லது மீட்கத்தகாத தொகுதிக் கடன்களை, வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர் உட்பட இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

**1. தொகுதிக் கடன்களுக்கு ஏற்புடைத்தான நியதிகளும் நிபந்தனைகளும்:**

1.1 இவ்வனுமதியின் கீழ் வழங்கப்பட்ட அனைத்துத் தொகுதிக் கடன்களும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அத்தகைய வழங்கல்கள் ஒன்றில் தனிப்பட்ட முறையிலானதாக அல்லது பொதுமக்களுக்கான ஆரம்ப முன் வைப்பாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.2 இவ்வறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட தொகுதிக் கடன்களை மீட்கும் அல்லது சாதாரண பங்குகளுக்கு மாற்றல் செய்யும் காலம் ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்கக்கூடாது என்பதுடன், அத்தகைய மாற்றல், 2002 ஏப்பிறல் 19ஆம் திகதியிடப்பட்ட 1232/14 ஆம் இலக்கம் கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட விலக்கல்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1.3 தொகுதிக் கடன்கள் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளத்தக்க உள்நாட்டுத் தரமிடல் முகவர் அல்லது பன்னாட்டு தரமிடல் முகரிவரிடமிருந்து தற்பொழுது பெறப்பட்ட தரமிடலை கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 தொகுதிக் கடன்கள் மீதான வட்டி வீதம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஐந்தாண்டு திறைசேரி முறி வீதத்தையும் முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தினையும் தொகுதிக் கடன்/ கம்பனியின் குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு காரணிகளிலிருந்து பாதுகாப்புப் பெறத்தக்க விதத்தில் தொகுதிக் கடன்களின் வழங்கல் நாளன்று காணப்பட்ட 200 அடிப்படைப் புள்ளிகளையும் கூட்டிய தொகையினை விஞ்சக்கூடாது.

**2. தொகுதிக் கடன்களை வழங்குகின்ற கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான நியதிகளும் நிபந்தனைகளும்:**

2.1 தொகுதிக் கடன்களை வழங்குகின்ற கம்பனியின் முகாமைத்துவம், கம்பனிக்கு ஏற்படக்கூடிய ஏதாவது கணிசமான திரவ இடர்நேர்வுகளைத் தடுக்கும் பொருட்டு இதன் வியாபாரத் தொழிற்பாடுகளின் காசு உட்பாய்ச்சல்கள் தொகுதிக் கடன்கள் மீதான காலத்திற்குக் காலம் ஏற்படும் வட்டிக் கொடுப்பனவுகளின் மீள்கொடுப்பனவை வழங்குவதற்குப் போதுமானவை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2.2 கம்பனியின் தொகுதிக் கடன்களில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான இடர்நேர்வுகள் அத்துடன்/ அல்லது அத்தகைய பிரச்சனைகள் தொடர்பான எதிர்பாரா இடர்நேர்வுகள் மற்றும் நாட்டிற்கான இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கான தேவையினை முகாமைத்துவம் உணர்தல் வேண்டும்.

2.3 முதிர்ச்சி நாளன்று தொகுதிக் கடன்களை உரிய முறையில் மீள்கொடுப்பனவு செய்யும் விதத்தில் பொருத்தமான கடன் கரைப்பு நிதியமொன்றினை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

2.4 வதிவற்ற முதலீட்டாளர்களினால் தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கான நிதிகளும் தொகுதிக் கடன்களுக்கான கொடுப்பனவுகளும் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினூடாக பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் மூலமாக அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் சார்பில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்க இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் வெளிநாட்டு முதலீட்டாளரின் “பிணையங்கள் முதலீட்டுக் கணக்கில்” வரவு வைக்கப்பட்ட கணக்கிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

2.5 இங்கே அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகவும் மூலதனப் பணம், நறுக்குப் பணம், வட்டி மற்றும் தரகுகளின் கொடுப்பனவுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கி அல்லது எவரேனும் ஆள் மேலேயுள்ள பந்தி (10)இல் குறிப்பிடப்பட்ட பிணையங்களின் முதலீட்டுக் கணக்கிற்கோ அல்லது அதிலிருந்து மட்டுமே அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

2.6 தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கான பணவனுப்பல்கள் பெறப்பட்டு 30 நாட்களுக்கிடையில் வழங்கும் கம்பனி பின்வரும் விபரங்களைக் கொண்ட அறிக்கையொன்றினை செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு வழங்குதல் வேண்டும்:-

(அ) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினூடாக பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை;

(ஆ) பணவனுப்பல் எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாகப் பெறப்பட்டதோ அவரின் பெயர் மற்றும் முகவரி;

(இ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் தொகுதிக் கடன்களின் வழங்கல் தொடர்பாக சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் என்பனவற்றிற்கு உரிய முறையில் இணங்கியொழுகப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தும் விதத்தில் கம்பனிச் செயலாளரிடமிருந்து ஒரு சான்றிதழ்.

3. பந்தி 2இன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொகுதிக் கடன்களை கொள்வனவு செய்த வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 11இன் கீழ் தொகுதிக் கடன்களை மாற்றல் செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

4. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் இங்கே அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவுகள் அல்லது வரவுகளைச் செய்வதற்கு அனுமதி இத்தால் வழங்கப்படுகிறது.

5. இவ்வறிவித்தலில் உள்ளவை பின்வருவனவற்றிற்கு முரணான அல்லது அதனைப் பாதிக்கின்ற உள்ளடக்கம் எதனையும் கொண்டிருக்கக்கூடாது:-

(அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபையில் தொழில் முயற்சிகளாக வரைவிலக்கணம் செய்யப்பட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ள தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை அத்தகைய விலக்கல் காலம் வரை;

(ஆ) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள்.

6. இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக, “இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்” என்பது, 1972.04.21ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி இல. 15007இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2010 நவெம்பர் 22

**தொடர்பு எண்: 06/04/09/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 நவெம்பர் 22

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு மேலதிக பற்றுக்கள் மற்றும் வரவுகளை அனுமதித்தல்**

பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் மீது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட 2010.03.11ஆம் நாளிடப்பட்ட எண் 06/04/01/2010 கொண்ட பணிப்புரைக்கு மேலதிகமாக இப் பணிப்புரை விடுக்கப்படுகின்றது.

2010.11.22 ஆம் நாளிடப்பட்ட எண் 1681/11 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களை வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்கள் ஆகியோரும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

இதற்கமைய, பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளுக்கு பின்வரும் மேலதிக வரவுகளையும் பற்றுக்களையும் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

4 **(அ) அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

xi தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கான உள்முக பணவனுப்பல்கள்

xii தொகுதிக் கடன்களின் விற்பனை அல்லது மாற்றல் அல்லது முதிர்ச்சியிலிருந்து பெறப்பட்ட பெறுகைகள்

xiii தொகுதிக் கடன்களில் ஒன்று சேர்ந்த வட்டி

**(ஆ) அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

vii தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கான கொடுப்பனவுகள்

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/10/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 நவெம்பர் 22

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**உள்முக முதலீட்டுக் கணக்கு**

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுக் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கம்பனியொன்று கிளைகள், செயற்றிட்டங்கள், தொடர்பு அலுவலகங்கள், பிரதிநிதித்துவ அலுவலகம் அல்லது அது போன்ற அலுவலகங்களூடாக வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு, 2010.11.22ஆம் திகதியிடப்படட எண் 1681/10 கொண்ட விசேட அரச வர்த்தமானி மூலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய வெளிநாட்டுக் கம்பனிகள், இலங்கையில் அவற்றின் வியாபாரத் தொழிற்பாடுகளின் பொருட்டு, பின்வரும் வழிகாட்டல்களுக்கு உட்பட்டு உள்முக முதலீட்டு கணக்குகளைத் திறக்கலாம் என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

1. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள தாய்க் கம்பனியின் அகவிதிகளினையும் கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதிகளையும் சமர்ப்பிப்பதன் மூலம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கம்பனியின் பெயரில் கணக்கொன்றினைத் திறக்க முடியும்.
2. குறிப்பிட்ட தாய்க் கம்பனி வெளிநாட்டுக் கம்பனியொன்றாக கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம், கணக்கினை, இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனியின் பெயருக்கு மீளப் பெயர் மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.
3. உள்முக முதலீட்டுக் கணக்கின் தொழிற்பாடுகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்:-

   3.1 வரவுகள்:

   (அ) மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட உள்முக பணவனுப்பல்களின் ரூபாப் பெறுகைகள்

   (ஆ) வெளிநாட்டுக் கம்பனியின் உள்ளூர் வருமானம்

   3.2 பற்றுக்கள்:

   (அ) மேலே பந்தி 1இல் குறிப்பிடப்பட்டுள்ள அரச வர்த்தமானியின் அறிவித்தலிலுள்ள 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இலாபம், வேத்துரிமை, நடத்துரிமை அல்லது அதையொத்த கொடுப்பனவுகள் அல்லது வரியைக் கழித்த மிகை நிதியம்.

   (ஆ) வெளிநாட்டுக் கம்பனியின் உள்ளூர் செலவுகள்

   3.3 இக் கணக்கிற்கான மற்றைய பற்றுக்களுக்கும் வரவுகளுக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி தேவையாகும்.

   3.4 இக் கணக்கில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேலதிக எடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாது.
4. ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த பின் இரண்டு கிழமைகளுக்குள் இக் கணக்கிற்கு செய்யப்பட்ட மாதாந்த மொத்த வரவுகளையும் பற்றுக்களையும் குறிக்கின்ற காலாண்டுக் கூற்றுக்களை இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
5. மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 1993.06.25ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/54/93 (சி அன்ட் எவ்)இன் கீழ் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/11/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 நவெம்பர் 22

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள், இராஜதந்திர ஆளணியினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான வெளிநாட்டு நாணய மற்றும் ரூபாக் கணக்குகள்**

கீழே குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க வெளிநாட்டு இராஜதந்திர நாணயக் கணக்குகளையும் இராஜதந்திர ரூபாக் கணக்குகளையும் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. தகுதியுடைய ஆட்கள்

இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள், இராஜதந்திர ஆளணியினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள்

3. அனுமதிக்கப்பட்டுள்ள கணக்கின் வகை

3.1 நடைமுறை, சேமிப்பு/ அல்லது தவணை வைப்புக் கணக்குகள்

3.2 இராஜதந்திர ஆளணியினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைப் பொறுத்தவரை அவர்கள் கணக்குகளை கூட்டாகவும் பேணலாம்.

3.3 ஒரு இராஜதந்திர வெளிநாட்டுக் கணக்கிலிருந்து இன்னொரு இராஜதந்திர வெளிநாட்டுக் கணக்கிற்கு இடையிலும் ஒரு இராஜதந்திர ரூபாக் கணக்கிலிருந்து மற்றொரு இராஜதந்திர ரூபாக் கணக்கிற்குமிடையிலும் நிதியினை செலாவணிக் கட்டுப்பாட்டாளரை தொடர்பு கொள்ளாமலே மாற்றல் செய்ய முடியும்.

3.4 இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிலிருந்து கணக்கு வைத்திருப்பவர்கள் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவிற்கிடையிலும் அல்லது இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிலிருந்து இராஜதந்திர தூதுவராலயத்தின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக் கணக்கிற்குமிடையில், செலாவணிக் கட்டுப்பாட்டாளரை தொடர்பு கொள்ளாமலே நிதிகளை மாற்றல் செய்யமுடியும்.

4. இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

4.1 வரவுகள்

(அ) வங்கித்தொழில் வழிப்படுத்தல்களூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட உள்முக பணவனுப்பல்களின் பெறுகைகள்

(ஆ) கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைச் சுங்கத்திற்கு பிரகடனப்படுத்தி நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்

(இ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதியத்தின் மீது வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்படத்தக்க வட்டி

4.2 பற்றுக்கள்

(அ) செலாவணிக் கட்டுப்பாட்டாளரைத் தொடர்பு கொள்ளாமல் இலங்கைக்கு வெளியேயான பணவனுப்பல்

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் உள்நாட்டுச் செலவிற்காக வெளிநாட்டு நாணயத்தில் அல்லது ரூபாவில் மேற்கொள்ளப்படும் மீளப் பெறல்

(இ) இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட இராஜதந்திரிகள் ரூபாக் கணக்கு

5. இராஜதந்திர ரூபாக் கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

5.1 வரவுகள்

(அ) இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட இராஜதந்திரிகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்

(ஆ) கணக்கிலுள்ள நிதியத்தின் மீது ரூபாவில் செலுத்தப்படத்தக்க வட்டி

(இ) இலங்கையிலுள்ள எவரேனும் ஆள் அல்லது நிறுவனத்திலிருந்து கணக்கு வைத்திருப்பவருக்கு வரவேண்டிய மீளளிப்புக்கள், மீளனுப்பல்கள் மற்றும் கொடுப்பனவுகள்

5.2 பற்றுக்கள்

(அ) கணக்கு வைத்திருப்பவரின் உள்முகச் செலவுகள்

(ஆ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றைய ஏதேனும் கொடுக்கல்வாங்கல்

(இ) செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதலுடன் இலங்கைக்கு வெளியேயிருந்து வரும் பணவனுப்பல்கள்

6. இராஜதந்திரிகள் ரூபாக் கணக்கிலிருந்து இராஜதந்திரிகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான நிதிய மாற்றல்கள், செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியிருந்தாலொழிய அனுமதிக்கப்படமாட்டாது.

7. இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதுவராலயங்கள் அல்லது இராஜதந்திர ஆளணியினா் அத்துடன்/ அல்லது குடும்ப உறுப்பினா்களின் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்புபட்ட நிதிகளை வெளியில் அனுப்புதல் அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவுகள், அவர்களது தொடர்பான இராஜதந்திரிகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளினூடாக இருந்தாலொழிய அனுமதிக்கப்படக்கூடாது.

8. வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் ஏனைய தூதரகங்களுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கணக்கு வசதிகளை வழங்குவதற்கு அடிப்படையாகவிருந்த 1964 செத்தெம்பர் 15ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈடி/35/64(ஈ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் புறக்கீடு செய்யப்படுகின்றன. அதேசமயம் வெளிநாட்டுக் கணக்கிலுள்ள நிலுவைகள் வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்டு தொடர்பான இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படக்கூடிய வேளையில் உள்நாட்டுக் கணக்குகளிலுள்ள நிலுவைகள், இங்கே தரப்பட்டுள்ள பணிப்புரைகளின் நியதிகளில் திறக்கப்படவுள்ள இராஜதந்திரிகள் ரூபாக் கணக்கில் வரவு வைக்கப்படலாம்.

9. இப் பணிப்புரைகளின் நோக்கத்திற்காக

(i) “இராஜதந்திர தூதரகம்” என்பது தூதரகம், உயர்ஸ்தானிகராலயம், காவற் தூதரகம், ஐக்கிய நாடுகளின் நிரந்தரப் பணியகம் அல்லது ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு என்பனவற்றைக் குறிக்கும்.

(ii) “இராஜதந்திர ஆளணியினா்” என்பது இராஜதந்திர பணியகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டுப் பிரசைகளைக் குறிக்கும்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/12/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 நவெம்பர் 22

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வதிவற்ற இலங்கையரல்லாதவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு**

அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்கள், கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள வரவுகள் மற்றும் பற்றுக்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, குறித்துரைக்கப்பட்ட நாணயமொன்றில், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் வதிவற்ற இலங்கையரல்லாதவர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறந்து பேணி வர அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

2. **தகுதியுடைய ஆட்கள்**

ஒன்றில், இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது விஜயம் செய்ய எண்ணியுள்ள இலங்கையரல்லாதோர்.

3. **கணக்கின் வகை**

இக் கணக்குகளை நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்குகளின் வடிவில் மட்டுமே திறக்க முடியும்.

4. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(i) கணக்கு வைத்திருப்பவரின் சார்பாகப் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள்

(ii) விருந்தினர்கள் தற்காலிகமாக இலங்கைக்கு விஜயம் செய்யும் போது ஏற்புடைத்தானவாறு கணக்கு வைத்திருப்பவரினால் சுங்கத்திற்கு பிரகடனம் செய்து நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நேரடியாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பயணிகள் காசோலை, வங்கி வரைவு அல்லது குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள். பயணிகள் காசோலைகள் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டனவாகவும் வங்கி வரைவு கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் புறக்குறிப்பீடு செய்யபட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(iii) கணக்கிலுள்ள நிதியத்தின் மீது சேருகின்ற வட்டி

(iv) இலங்கைக்கு தற்காலிக விஜயமொன்றினை மேற்கொள்பவரின் சார்பில் மேற்கொள்ளப்படுகின்ற கணக்கு வைத்திருப்பவரின் அல்லது கம்பனியின் வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவிலிருந்தான மாற்றல்கள்

5. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(i) உள்ளூர் விநியோகங்களுக்காக இலங்கை ரூபாவில் செய்யப்படும் மீளப் பெறுகைகள்

(ii) வெளிநாட்டு நாணயத்தில் மீளப் பெறுகைகள்

(iii) வெளிமுகப் பணவனுப்பல்கள்

6. **அறிக்கையிடல்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தம் வசமிருக்கும் வதிவற்ற இலங்கையரல்லாதவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு தொடர்பான மாதாந்த அறிக்கைகளை தொடர்ந்து வரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இங்கேயுள்ள இணைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு**

**வதிவற்ற இலங்கையரல்லாதவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்கின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ..........................................................................................................................................................

....................................................................................................................................... மாதத்திற்கானது

| நாணயம் | கணக்குகளின் எண்ணிக்கை | மாதத்தின் தொடக்கத்திலுள்ள ஆரம்ப மீதி | மாத காலத்தில் மொத்த வரவுகள் | மாத காலத்தில் மொத்த பற்றுக்கள் | | மாத இறுதியில் காணப்படும் முடிவு நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | | | | வெளிநாட்டு நாணயம் | ரூபா | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**தொடர்பு எண்: 06/04/13/2010**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2010 நவெம்பர் 22

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் தயாரிப்பு, வர்த்தகப்படுத்தல் மற்றும் சில்லறை வர்த்தகம் என்பனவற்றிற்கான மையமாக இலங்கையை மாற்றும் கொள்கைக் குறிக்கோளுக்கு வசதியளிக்கும் ஒரு வழிமுறையாக இரத்தினக்கற்கள் அத்துடன்/ அல்லது ஆபரணங்களின் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கு வசதிகளை இரத்தினக்கற்கள் அத்துடன்/ அல்லது ஆபரணங்களின் இறக்குமதியாளர்களுக்கும் விரிவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கமைய, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது உள்நாட்டு பிரிவுகளில், கீழே குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு “இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளை” திறப்பதற்கும் பேணுவதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. **தகுதியுடைய ஆட்கள்**

பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள்

(அ) இரத்தினக்கற்கள் அத்துடன்/ அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதிகள்

(ஆ) இரத்தினக்கற்கள் அத்துடன்/ அல்லது ஆபரணங்களின் இறக்குமதிகள்

(இ) ஏற்றுமதியாளர்களுக்கு முடிவடைந்த அல்லது முடிவடையாத இரத்தினக்கற்கள் அத்துடன் அல்லது ஆபரணங்களை வழங்குதல்

3. **அனுமதிக்கப்பட்ட கணக்குகளின் வகை**

காசோலை நடவடிக்கைகளற்ற சேமிப்பு அல்லது நிலையான வைப்புக் கணக்கு

4. **கணக்குகளைத் திறத்தல்**

தனிப்பட்டவர்கள், நிறுவனம் அல்லது கம்பனியொன்று உரிமம் பெற்ற இரத்தினக்கல் அத்துடன் அல்லது ஆபரண வணிகர் என உறுதிப்படுத்துகின்ற சான்றிதழொன்றினை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வங்கித்தொழில் முறையினூடாக பெறப்பட்ட இரத்தினக்கல் அத்துடன் அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதிப் பெறுமதி.

(ஆ) வெளிநாட்டில் இரத்தினக்கற்கள் அத்துடன்/ அல்லது ஆபரணங்களின் விற்பனை மூலம் கிடைத்த பெறுகைகள் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடம் கணக்கு வைத்திருப்பவரினால் நேரடியாக ஒப்படைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(இ) இரத்தினக்கற்கள் அத்துடன் அல்லது ஆபரணங்களின் மறைமுக அத்துடன் அல்லது நேரடி ஏற்றுமதியாளர்களுக்கு மூலப் பொருட்களை வழங்கியமை தொடர்பாக இரத்தினக்கல் அத்துடன் அல்லது ஆபரணங்களின் இறக்குமதியாளர்களினால் வங்கி வரைவு அல்லது வங்கி மாற்றல்கள் வடிவில் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் உள்ளூர் பெறுகைகள்.

(ஈ) இரத்தினக்கற்கள் அத்துடன் அல்லது ஆபரணங்களின் மறைமுக அத்துடன்/ அல்லது நேரடி இறக்குமதியாளர்களுக்கு மூலப் பொருட்களை வழங்கியமை தொடர்பாக இரத்தினக்கல் அத்துடன் அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதியாளர் வங்கி வரைவு அல்லது வங்கி மாற்றல்கள் வடிவில் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் உள்ளூர் பெறுகைகள்; அத்துடன்

(உ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின் ஒன்று சேர்ந்த வட்டி.

6. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இரத்தினக்கற்களினதும் மற்றைய மூலப் பொருட்களினதும் இறக்குமதிகள் 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 1998ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 8ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் இசைந்தவையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இறக்குமதி செய்யப்படும் வெட்டப்பட்டு பட்டை தீட்டப்பட்ட அல்லது செப்பமிடப்படாத இரத்தினக்கற்கள் மற்றும் மூலப்பொருட்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த கொடுப்பனவுகள்;

(ஆ) வெட்டப்பட்டு பட்டை தீட்டப்பட்ட அல்லது செப்பமிடப்படாத இரத்தினக்கற்கள் மற்றும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் நேரத்தில் ஐ.அ.டொலர் 50,000 இனை விஞ்சாத வெளிநாட்டு நாணயங்களிலான மீளப் பெறுகைகள்;

(இ) உள்ளூர் பகிர்ந்தளிப்புக்களுக்காக இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்படும் மீளப் பெறுகைகளுக்கு எவ்வித கட்டுப்பாடுமில்லை. எனினும், அத்தகைய மீளப்பெறுகைகளை வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றவும் அவற்றை மீள வரவு வைக்கவும் உரித்துக் கிடையாது;

(ஈ) வெட்டப்பட்டு பட்டை தீட்டப்பட்ட அல்லது செப்பமற்ற இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணங்களின் உள்ளூர் வழங்குநருக்கு வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படும் கொடுப்பனவுகள் வங்கி மாற்றல் அல்லது வங்கி வரைவுகளின் வடிவில் இருத்தல் வேண்டும்.

7. **குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடு**

இத் திட்டத்தின் கீழான கணக்கொன்றில் குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 1000 கொண்ட மீதி பேணப்படல் வேண்டும்.

8. **அறிக்கையிடல் தேவைப்பாடு**

இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கிடையில், ஒவ்வொரு கணக்கினதும் விபரங்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு காலாண்டு ரீதியில் சமர்ப்பிக்க வேண்டும் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9. 2008 மே 29ஆம் நாளிடப்பட்ட எண்: 06/04/04/2008 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இத்தால் நீக்கப்படுவதுடன் மேற்கூறப்பட்ட திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் "இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்" என மீளப் பெயரிடப்படுதலும் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு**

வங்கியின் பெயர்

காலாண்டுப் பகுதி

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்கு**

| கணக்கு இலக்கம் | கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | நாணயம் | ஆரம்ப மீதி | மொத்த வரவுகள் | மொத்தப் பற்றுக்கள் | இறுதியிலுள்ள மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

இல. 1685/2 செவ்வாய்க்கிழமை 2010 திசெம்பர் 21

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7, 10, 11, 15 பிரிவுகளினதும் அத்துடன் 30ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவினதும் நியதிகளின் கீழான அனுமதி**

2002, ஓகத்து 8ஆம் திகதியிடப்பட்ட 1248/19 ஆம் இலக்க அரச வர்த்தமானி மூலம் (அதிவிசேடமானது) இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 2002, ஏப்பிறல் 19ஆம் திகதியிடப்பட்ட 1232/14ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேடமானது) வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது.

(i) பந்தி 2இன் விடயம் (iv)இனை உடனடுத்து பின்வரும் புதிய விடயத்தினை உட்புகுத்துவதன் மூலமும்;

"(v) பிணைய முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனிப்பட்டவர்கள் அல்லது தனியார் நிறுவனங்களுடனான ஆலோசனைகள் உட்பட பிணையப் பணிகளின் ஏற்பாடுகள்".

(ii) 4ஆம் பந்தியின் துணைப் பந்திகள் (ஆ) மற்றும் (இ) இலுள்ள பங்கு முதலீட்டு வெளிப்புறக் கணக்கு என்ற சொற்களுக்குப் பதிலாக "பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு" என்ற சொற்களை உட்புகுத்துவதன் மூலமும்".

பி எச் ஓ சந்திரவன்ச

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2010 திசெம்பர் 21

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 திசெம்பர் 3

**கொடுகடன் அட்டை வழிகாட்டல் எண்: 01/2010**

*கொடுகடன் அட்டை தொழில்துறையில் ஈடுபட்டிருக்கும் பணிகள் வழங்குவோரின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

## கொடுகடன் அட்டை தொழிற்பாட்டு வழிகாட்டல்கள்

### 1. வழிகாட்டல்களுக்கான அறிமுகம்

பொதுமக்கள் தமது நாளாந்த கொடுக்கல்வாங்கல்களுக்காக கொடுகடன் அட்டைகளைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குவது அதிகரித்து வருவதன் முக்கிய காரணமாக பொருட்கள் மற்றும் பணிகள் அத்துடன்/ அல்லது காசு மீளப் பெறுகைகளுக்கானதொரு கருவியாக கொடுகடன் அட்டைகளைப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்கிறது. இவ்வதிகரிப்பிற்கு வாடிக்கையாளரின் வசதி மற்றும் கொடுக்கல்வாங்கலின் பாதுகாப்பு என்பனவும் தூண்டுதலாக அமைந்தன. இதற்கு, விற்பனை நிலையங்களின் இலத்திரனியல் மையங்களின் அளவில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு மற்றும் கொடுகடன் பாவனையினை ஊக்குவிப்பதற்காக கொடுகடன் அட்டை வழங்குபவர்களினால் முன் வைக்கப்படும் வெகுமதித் திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்புக்கள் என்பனவும் இதற்கு வலுச் சேர்த்தன.

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினூடாக இலங்கை மத்திய வங்கியிடம் பாதுகாப்பு, வினைத்திறன், போட்டித்தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றினை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கொடுப்பனவு முறைமைக் கொள்கையினை நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் நாட்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மேற்பார்வை செய்யும் சட்ட ரீதியான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் கொடுப்பனவு பொறிமுறையினையை உரிய நேரத்தில் மேம்படுத்த வேண்டிய தேவையினையும் அதேநேரம் வாடிக்கையாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனையும் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2009 யூலை 31ஆம் திகதியிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்தது. கொடுகடன் அட்டைகளை கொடுப்பனவுச் சாதனங்களாகப் பயன்படுத்தப்படும் பொழுது அவற்றின் தொழிற்பாடுகள் மீதான பாதுகாப்பு, பத்திரமான தன்மை, வினைத்திறன் என்பனவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி கொடுகடன் அட்டை தொழிற்பாடுகள் தொடர்பாக பின்வரும் வழிகாட்டல்களை வெளியிட்டிருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளை அடிப்படையாகக் கொண்ட கொடுகடன் அட்டைகளுக்கான இத் தொழிற்பாட்டு வழிகாட்டல்கள் கொடுகடன் அட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பணி வழங்குவோருக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும் என்பதுடன் 2010 மாச்சு 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

இவ் வழிகாட்டல்களின் சொற்கள் காட்டுகின்ற அல்லது தெரிவிக்கின்ற ஒற்றை இலக்கங்கள் பன்மை இலக்கங்களையும் அதற்கு மறுதலையாகவும் அத்துடன் ஆண்பாலை சுட்டுகின்ற அல்லது தெரிவிக்கின்ற சொற்கள் பெண்பாலையும் உள்ளடக்கும்.

### 2. கொடுகடன் அட்டைகளைச் சந்தைப்படுத்தல்

கொடுகடன் அட்டைகளை வழங்குவதன் மூலமாக ஏதேனும் நிறுவனம் (இதனகத்துப் பின்னர் “அட்டை வழங்குநர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டை உடமையாளருடன் (இதனகத்துப் பின்னர் “வாடிக்கையாளர்” எனக் குறிப்பிடப்படும்) மேற்கொள்கின்ற ஒப்பந்த ரீதியான உறவு முறையானது கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகளின் சந்தைப்படுத்தல் உபாயங்கள் பின்வரும் வழிகாட்டல்களுக்கு இணங்க வடிவமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துகிறது.

2.1 சந்தைப்படுத்தும் அலுவலர்கள் ஊக்குவிப்பு பிரச்சாரத்தின் போது வாடிக்கையாளராகத்தக்க அத்துடன்/ அல்லது ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளருடனான கூட்டத்திற்கு முன்பு அல்லது கூட்டத்தின் போது அவர்களது அலுவல்சார் அடையாளத்தினை வெளிப்படுத்தல் வேண்டும்.

2.2 கொடுகடன் தொழிற்பாடுகள் தொடர்பாக எந்தவொரு ஊக்குவிப்பு பிரச்சாரம் அல்லது நிகழ்வின் போதும் கடன்வழங்குநர்களினால் முன்வைக்கப்படும் நன்மைகள், ஊக்குவிப்புக்கள், வெகுமதிகள் அல்லது ஏதும் விதிப்புக்கள் கட்டணங்களின் குறைப்புக்கள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு விளங்கத்தக்க விதத்தில் எழுத்து மூலமாக (இலத்திரனியல் ரீதியாக அல்லது ஆவண வடிவில்) தெளிவாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

2.3 கொடுகடன் அட்டை தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும் வாடிக்கையாளர்களுக்கு மிகத் தெளிவாக தொடர்புறுத்தப்பட வேண்டியதுடன் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து அவை கேட்டுக் கொள்ளப்பட்ட மொழியில் எழுத்தில் வழங்கல்படுதலும் வேண்டும். நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அட்டை வழங்குபவர்களின் வெப்தளத்திலும் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

2.4 சந்தைப்படுத்தல் செயன் முறைகளின் போது அட்டை வழங்குநர்கள் கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகள் மீதான தமது ஒழுக்கக் கோவையினை/ நிறுவன ரீதியான கொள்கையினை வாடிக்கையாளர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியதுடன் அதனை அட்டை வழங்குநரின் வெப்தளத்திலும் வெளியிடுதல் வேண்டும்.

2.5 அட்டை வழங்குநர்களின் சந்தைப்படுத்தல் ஆளணியினர் பண்புகள், நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு முழுமையான தகவலொன்றினை வழங்குதல் வேண்டும். அட்டை வழங்குநர் வழங்க முன்வராத பொய்யான ஏதேனும் பண்புகள்/ நன்மைகள் பற்றி பிழையான வாக்குறுதிகளை வழங்கக்கூடாது.

2.6 பிழையாக வழிநடத்தக்கூடிய மற்றும் ஒழுக்கவிழுமியங்கள் சாராத தகவல்களை/ விளம்பரங்களை அட்டை வழங்குநர்கள் பரப்பவோ/ வெளியிடவோ கூடாது.

2.7 முன் அனுமதி பெற்றிருந்தாலொழிய வேலை செய்கின்ற/ அலுவலக நேரங்களில் அல்லது வாடிக்கையாளர்களுக்கு வசதியீனமான நேரங்களில் தீவிரமான மற்றும் கடுமையான விற்பனைச் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் அட்டை வழங்குநர்கள் ஈடுபடக்கூடாது.

2.8 வாடிக்கையாளர்களினால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பாதுகாப்பு வழிமுறைகள், முறைப்பாடுகள்/ பிணக்குகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள் போன்றன உட்பட கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விதத்தில் அட்டை வழங்குவோர் தமது சந்தைப்படுத்தல் அலுவலர்களுக்கு கிரமமான பயிற்சி மற்றும் அறிவூட்டல் தொடர் நிகழ்ச்சிகளை நடத்துதல் வேண்டும்.

**3. கொடுகடன் அட்டைகளின் வழங்கல்**

**(அ) பிரதான கொடுகடன் அட்டைகளின் வழங்கல்**

3.1 பின்வரும் தகைமைகளைக் கொண்ட தனிப்பட்டவர்களுக்கு மட்டுமே கொடுகடன் அட்டையினை வழங்குதல் வேண்டும்.

- விண்ணப்பத் திகதியிலிருந்து 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரசையொருவர் அல்லது இலங்கையில் வதியுமொருவராக இருக்க வேண்டியதுடன் சுதந்திரமான நிதியியல் நிலைமையினை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்

- வதிவற்ற ஒருவராக இருக்குமிடத்து அவர், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக் கணக்கு ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டியதுடன் கொடுகடன் அட்டை தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளும் அத்தகைய கணக்குகளூடாக வெளிநாட்டு நாணயத்திலேயே தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

3.2 அட்டை வழங்குநர்கள் "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற முழுத் தேவைப்பாட்டினையும் பூர்த்தி செய்ய வேண்டிய முழுப் பொறுப்பினையும் கொண்டிருப்பதுடன் அத்தகைய ஆவணங்கள் பாதுகாப்பான கட்டுக்காப்பின் கீழ் பேணப்படுதலும் வேண்டும்.

3.3 அட்டை வழங்குநர்கள், வங்கித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக, எந்த நேரத்திலும் எந்த வழியிலேனும் வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்பொன்றாக நிதியினை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

3.4 சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை வாடிக்கையாளராக வரவிருக்கும் ஒருவரிடமிருந்து தேவையான ஆவணங்களுடன் பெற்றுக் கொண்டதும் அட்டை வழங்குநர் கொடுகடன் அட்டையினை வழங்குதல் வேண்டும். முன் ஒப்புதல் பெற்ற அட்டைகளை வாடிக்கையாளரின் சம்மதத்திற்கான கையொப்பத்தினைப் பெற்றுக் கொண்ட பின்னரே செயற்படுத்தல் வேண்டும். கேட்டுக் கொள்ளப்படாத அட்டைகளை வழங்குதல் கூடாது.

3.5 அட்டை வழங்குநர், வாடிக்கையாளரின் கொடுகடன் நம்பகத்தன்மையினைக் கண்டறிவதற்கு மிகக் கூடியளவு கவனமெடுத்தல் வேண்டும். கொடுகடன் அட்டையினை வழங்குவதற்கு முன்னர், கொடுகடன் இடர்நேர்வுகளைப் பற்றி நியாயமான நடவடிக்கைகளை மேற்கொண்டும் கொடுகடன் நம்பகத்தன்மையினை மதிப்பிடுவதற்கு நம்பகமான வழிமுறைகளைப் பயன்படுத்தலையும் சுதந்திரமான மதிப்பீடொன்றினையும் மேற்கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளரின் நம்பகத்தன்மையை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு, கடன்வழங்குநர் கொடுகடன் தகவல் பணியகத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.6 அதே வருமான விபரங்களை வழங்கியதன் மூலம் இதே வழங்குநரிடமிருந்து அல்லது வேறு கொடுகடன் அட்டை வழங்குநரிடமிருந்து ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ள எவரேனும் வாடிக்கையாளருக்கு, வாடிக்கையாளரின் மொத்த வெளிநிற்கின்ற கொடுகடன் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்ளாது கொடுகடன்களை வழங்குதல் கூடாது.

3.7 வாடிக்கையாளரினால் சுயமாக பிரகடனப்படுத்தப்பட்ட மற்றும் கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மற்றைய கொடுகடன் அட்டைகளிலிருந்து வாடிக்கையாளர் அனுபவிக்கின்ற கொடுகடன் எல்லைகளை பரிசீலனையில் கொண்டு வாடிக்கையாளருக்கான கொடுகடன் எல்லையினை கொடுகடன் அட்டை வழங்குநர் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

3.8 தற்பொழுதுள்ள கொடுகடன் எல்லை, உயர்ந்தபட்சம் 6 மாதங்கள் என்ற வரையறைக்குட்பட்டு, வாடிக்கையாளரின் கோரிக்கையின் மீது கோரிக்கையின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு தற்காலிகமாக அதிகரித்துக் கொள்ள முடியும். எனினும், அத்தகைய நீடிக்கப்பட்ட வசதியினால் ஏற்படுகின்ற அனைத்துப் பொறுப்புக்களையும் தீர்ப்பனவு செய்யக்கூடிய இயலாற்றலை வாடிக்கையாளர் கொண்டுள்ளமை பற்றி அட்டை வழங்குநர் திருப்திப்பட்டு கொள்ளுதல் வேண்டும்.

3.9 அட்டை வழங்குநர் வாடிக்கையாளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்காமல் ஒரு தலைப்பட்சமாக கொடுகடன் அட்டையின் வகையை/ வரையறையினை தரமுயர்த்தவோ அல்லது/ அத்துடன் அதிகரிக்கவோ கூடாது.

3.10 வாடிக்கையாளரொருவருக்கு கொடுகடன் அட்டையினை வழங்கும் பொழுது, கொடுகடன் அட்டைத் தொடர்பாக பிரயோகிக்கத்தக்க நியதிகள் மற்றும் நிபந்தனைகளை சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களின் போது வழங்கியிருப்பினும் கூட அவற்றை இப்பொழுது வாடிக்கையாளர் முன்னுரிமையளிக்கின்ற மொழியில் விளங்கத்தக்க எழுத்து உருவில் வழங்குதல் வேண்டும்.

3.11 வாடிக்கையாளரின் உரிமைகளுக்கு நியாயமற்ற விதத்தில் தடைகளை விளைவிக்கின்ற விதத்தில் ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் நிபந்தனைகள், முன்னெச்சரிக்கை நிபந்தனைகள், கிளை வாசகங்கள் அல்லது ஏற்பாடுகளை உள்ளடக்குதல் கூடாது.

3.12 அட்டை வழங்குநர் பின்வரும் விபரங்களை இலகுவான மொழியில் வாடிக்கையாளருக்கு எழுத்தில் (இலத்திரனியல் அல்லது ஆவண வடிவத்தில்) தெரிவித்தல் வேண்டும். அதே விடயத்தினை அட்டை வழங்குநரினால் பேணப்படும் வெப்தளத்திலும் பேணுதல் வேண்டும்.

(i) வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள்/ பணிகள்

(ii) நியதிகள், நிபந்தகைள் அதேபோன்று வாடிக்கையாளர்கள் கொடுகடன் அட்டைகளைப் பயன்படுத்தும் பொழுது தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான தகவல்கள், விளைவுகள் மற்றும் இடர்நேர்வுகள்

(iii) பிரதான வாடிக்கையாளர் மற்றும் துணை வாடிக்கையாளர்களின் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

(iv) வாடிக்கையாளர் செலுத்துவதற்குக் கேட்டுக் கொள்ளப்படுகின்ற இணைவுக் கட்டணம், ஆண்டுக் கட்டணம், நிருவாக அல்லது கையாளல் கட்டணம் அல்லது வேறு ஏதேனும் கட்டணங்கள்

(v) முற்பணக் காசின் வரையறை மற்றும் பொருத்தமான கட்டணங்கள்

(vi) வட்டியற்ற (சலுகைக்) காலம்

(vii) குறைந்தபட்சக் கொடுப்பனவினைக் கணிக்கும் முறை

(viii) சுழலும் கொடுகடன் (குறைந்தபட்சக் கொடுப்பனவினைச் செலுத்திய பின்னர் வெளிநின்ற தொகை) மற்றும் காசு முற்பணம் ஆகிய இரண்டும் தொடர்பாக நிலுவையிலுள்ள வட்டியையும் வாடிக்கையாளரினால் செலுத்தப்பட வேண்டிய பொருந்தத்தக்க ஆண்டு வட்டி வீதங்கள் மற்றும் தண்டங்கள்/ கட்டணங்கள் என்பனவற்றைக் கணிக்கும் முறை. நிலுவையிலுள்ளவற்றின் வட்டியைக் கணிக்கின்ற முறையினை, உதாரணங்களைப் பயன்படுத்தி தெளிவாக விளங்கப்படுத்துதல் வேண்டும்.

(ix) பிந்திய கொடுப்பனவுக் கட்டணங்கள் மற்றும் அத்தகைய கட்டணங்களைக் கணிக்கின்ற முறை உதாரணங்களுடன்

(x) பகுதிக் கொடுப்பனவுகள் வாடிக்கையாளரினால் செலுத்தப்படுகின்ற குறைந்தபட்சக் கொடுப்பனவுகளை விஞ்சுகின்ற பொழுது வட்டியைக் கணிக்கின்ற முறை, உதாரணங்களுடன்

(xi) தொலைந்து போன, களவு போன அல்லது சேதமடைந்த கொடுகடன் அட்டைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான நடைமுறைகள் மற்றும் அத்தகைய முறைப்பாடுகளைக் கையாள்வதற்குத் தேவைப்படும் காலம்.

(xii) முறைப்பாடுகளைக் கையாள்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புக்களின் தொடர்பு இலக்கங்கள்

(xiii) அதிகாரமளிக்கப்படாத மூன்றாந்தரப்பினர் கொடுகடன் அட்டைகளை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்

(xiv) கொடுகடன் அட்டைகளின் கொடுக்கல்வாங்கல் தொடர்பான குறைபாடுகள்/ பிணக்குகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்

(xv) வாடிக்கையாளர் செலுத்தத் தவறியிருக்குமிடத்து அதாவது கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையளிக்கின்ற நடைமுறைகள் போன்றவற்றினால் அவர்களுக்கு ஏற்படும் பிரதிகூலங்கள்

(xvi) கொடுகடன் அட்டையினை இரத்துச் செய்வது தொடர்பான நடைமுறை

3.13 காணியை அல்லது வேறு ஏதேனும் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு, வாடிக்கையாளர் அல்லது மூன்றாந்தரப்பினரினால் கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் சொத்துக்களின் மாதாந்த தவணைப் பணத்தினை செலுத்துவதற்கு அத்துடன்/ அல்லது

செலாவணிக்கட்டுப்பாடு தொடர்பான அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மூலதன கணக்குக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு கொடுகடன் அட்டைகளைப் பயன்படுத்துமாறு வாடிக்கையாளரை, அட்டை வழங்குநர் ஊக்குவிக்கவோ/ தூண்டவோ கூடாது.

3.14 இலங்கை சட்டத்தின் கீழ் குற்றமெனக் கருதப்படக்கூடிய ஏதேனும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளுக்கு கொடுகடன் அட்டையினைப் பயன்படுத்த முடியாத விதத்தில் அட்டை வழங்குநர் நியதிகளையும் நிபந்தனைகளையும் விதித்தல் வேண்டும். எவரேனும் வாடிக்கையாளர் கொடுகடன் அட்டையினை சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அட்டை வழங்குநர் அட்டை வசதியை உடனடியாக நிறுத்தி அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

**(ஆ) துணை கொடுகடன் அட்டைகளை வழங்குதல்**

3.15 அட்டை வழங்குநர்கள் முதன்மை/ துணை/ மேலதிக அட்டைகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட அட்டை மீது கூறப்படுகின்ற பொறுப்புக்களுக்கு வாடிக்கையாளர்களே பொறுப்பாண்மையாக இருப்பது பற்றி தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். துணை/ மேலதிக அட்டை வாடிக்கையாளர்களினால் உறப்படுகின்ற அனைத்துப் பொறுப்புக்களுக்கும் இறுதியில் பிரதான வாடிக்கையாளரே பொறுப்பு என்பதனை அவருக்கு அறியத் தருதல் வேண்டும்.

3.16 கல்வி நோக்கங்களுக்காக 16-18 வயதிற்குமிடைப்பட்ட மாணவர்கள் தவிர்ந்த மற்றும் 18 வயதிற்குக் குறைந்த எந்தவொரு தனிப்பட்டவர்களுக்கும் துணை அட்டைகளையோ, மேலதிக அல்லது பதில் அட்டைகளையோ அட்டை வழங்குநர் வழங்குதல் கூடாது. அத்தகைய விதிவிலக்குகள் பிரதான வாடிக்கையாளரினால் நேரடியாக தங்கியுள்ள மாணவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுதல் வேண்டும்.

**4. வட்டி வீதங்களும் ஏனைய கட்டணங்களும்**

4.1 அட்டை வழங்குநர், பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு மற்றும் காசு முற்பணம் என்பனவற்றிற்கான வட்டி வீதங்கள் மற்றும் பணிக் கட்டணங்களை ஆண்டு அடிப்படையில் தனித்தனியாக குறிப்பிடுதல் வேண்டும்.

4.2 கொடுகடன் அட்டை வழங்குநர், கொடுகடன் அட்டையினை வழங்குகின்ற நேரத்தில் வாடிக்கையாளருக்கு தெளிவாகக் குறிப்பிடப்படாத ஏதேனும் தொகையினை முன்னறிவித்தல் எதுவுமின்றி விதித்தல்கூடாது. எனினும், இது அரசாங்கத்தினால் அல்லது ஏனைய நியதிச்சட்ட அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வரி போன்ற விதிப்புக்களுக்குப் பொருந்தாது.

4.3 கட்டணம் விதிக்கத்தக்க புதிய பணிகளை வழங்குவதற்கு முன்னதாக வாடிக்கையாளர்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

4.4 விதிப்புக்கள்/ கட்டணங்கள், வட்டி வீதங்களின் அட்டவணைகளில் அல்லது நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் செய்யப்படும் ஏதேனும் திருத்தங்கள் மற்றும் ஏதேனும் ஊக்குவிப்புக்களில் செய்யப்படும் திருத்தங்கள் என்பன, அட்டை வழங்கப்படும் நேரத்தில் தெரியப்படுத்தப்பட்டிருக்காவிடின் அவற்றை அத்திருத்தங்கள் நடைமுறைக்கு வரவுள்ள திகதிக்கு குறைந்தபட்சம் பத்து (10) நாட்களுக்கு முன்னதாக விளங்கத்தக்க எழுத்து/ இலத்திரனியல் வடிவில் செயற்படும் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**5. பட்டியலிடல் செயன்முறை**

5.1 அட்டை வழங்குநர், செயற்படும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் கொடுகடன் அட்டை கொடுக்கல்வாங்கல்கள் மீதான பட்டியல் கூற்றுக்களை, ஒவ்வொரு பட்டியல் சுற்று (காலம்) முடிவடைந்தவுடன் எழுத்தில் அல்லது இலத்திரனியல் முறையினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். பட்டியலிடல் கூற்றுக்கள் பின்வருவனவற்றை முழுமையாக வெளிப்படுத்தல் வேண்டும்.

(i) கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட திகதி, வணிகரின் பெயர், நாணயத்தின் வகை மற்றும் பட்டியலிடப்பட்ட தொகை

(ii) வட்டி அட்டுறுகின்ற திகதி

(iii) வாடிக்கையாளர்களினால் செலுத்தப்படுகின்ற கட்டணங்களை கணிக்கின்ற முறை

(iv) வாடிக்கையாளரினால் செலுத்தப்படவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகை

(v) குறைந்தபட்சக் கொடுப்பனவினை மேற்கொள்ள வேண்டிய திகதி

(vi) பொருட்கள்/ பணிகளின் கொள்வனவு மற்றும் காசு முற்பணங்களுக்கான வட்டியின் ஆண்டுக்கான சதவீதம் (குறிப்பிட்ட கட்டணங்களை தனித்தனியாக உள்ளடக்குதல் வேண்டும்)

(vii) பிந்திய கொடுப்பனவுகளுக்கான தண்டப் பணம் மற்றும் வட்டித் தொகை

(viii) ஏற்றுக் கொள்ளத்தக்க கொடுப்பனவு முறை (காசு மூலம், நேரடிப்பற்று, காசோலை, கணக்கிலிருந்து மாற்றல் செய்யும் வசதி)

(ix) குறிப்பிட்ட கொடுப்பனவு முறையொன்று தீர்ப்பனவு செய்யப்படுவதற்கும் கட்டணங்கள் ஏதுமிருப்பின் அதனைக் கையாள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்ற நாட்களின் எண்ணிக்கை

(x) வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு நாணயத்தின் தொகையும் இலங்கை ரூபாவில் பட்டியலிடப்பட்ட தொகையும்.

பட்டியலிடப்படும் கூற்றுக்களின் படிவம் அட்டை வழங்குநரின் வெப்தளத்தில் அனைத்து மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

5.2 அட்டை வழங்குநர்கள், ஒவ்வொரு பட்டியல்படுத்தல் காலமும் முடிவடைகையில் பட்டியல் கூற்றுக்களை கொடுப்பனவு செய்ய வேண்டிய திகதிக்குக் குறைந்தபட்சம் பதினான்கு (14) நாட்களுக்கு முன்னதாக ஒவ்வொரு செயற்படும் வாடிக்கையாளருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

5.3 நடப்பு பட்டியல் கூற்று கிடைக்கவில்லையென வாடிக்கையாளர் முறைப்பாடொன்றினைச் செய்யுமிடத்து, முறைப்பாடு கிடைத்த பத்து (10) கலண்டர் நாட்களுக்குள் கட்டணமெதுவுமின்றி வாடிக்கையாளருக்கு கூற்றின் பிரதியொன்றினை வழங்குதல் வேண்டும்.

5.4 வாடிக்கையாளரின் வியாபாரத்திட்டம் மற்றும் தேவைப்பாடுகளுக்கு இசைவான முறையில், அட்டை வழங்குநரால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கிளைகள், சேகரிப்பு நிலையங்கள், காசோலை சேகரிப்பு பெட்டிகள் அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் முறைகளினூடாக பட்டியல் கொடுப்பனவுகளைச் சேகரிப்பதற்கு அட்டை வழங்குநர் அனைத்தையுமுள்ளடக்கியதும் வசதியானதுமான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

5.5 அட்டை வழங்குநர், தேறல் செய்யப்படாத காசோலை தொடர்பான நிலையினை, செலுத்தப்படாத காசோலை பெறப்பட்ட நாளிலிருந்து ஏழு (7) வேலை நாட்களுக்குள் வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும். அட்டை வழங்குநரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் காசோலை சமர்ப்பிக்கப்பட்டு உரிய திகதிக்குப் பின்னர் காசோலை தீர்ப்பனவாகியிருக்குமிடத்து அதற்காக வாடிக்கையாளர் தண்டிக்கப்படக்கூடாது.

5.6 அட்டை வழங்குநர், கொடுப்பனவிற்கான "தவணைத் திகதி" சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை அல்லது ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் அரச/ வங்கி விடுமுறைகளில் வராமல் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். எனினும், அட்டை வழங்குநர் இந் நிலையினை பின்பற்ற முடியாமலிருக்குமிடத்து, தவணைத் திகதி விடுமுறை நாளொன்றாக இருக்கும் பொழுது கொடுப்பனவு செய்ய வேண்டிய திகதியை கூற்றில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**6. சேகரிப்பு/ அறவிடல் பொறிமுறை**

6.1 கொடுகடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான ஏதேனும் வரவேண்டிய தொகையின் சேகரிப்புக்கள் அட்டை வழங்குநரினால் முன்மதியுடைய முறையில் சேகரிக்கப்படுகின்றமையினை அட்டை வழங்குநர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சேகரிப்புக்களைக் கையாள்வதில் பொதுமக்களின் நலனுக்கு குந்தகம் விளைக்கும் ஏதேனும் நடவடிக்கைகளில் அட்டை வழங்குநர் ஈடுபடக்கூடாது என்பதுடன் நேர்மை மற்றும் நல்லெண்ணம் என்னும் தத்துவங்களைப் பயன்படுத்தி இவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

6.2 அறவிடல் கடிதங்கள் வாடிக்கையாளரின் இறுதியாகத் தெரிந்த முகவரிக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதனை அட்டை வழங்குநர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் அத்தகைய கடிதங்கள் குறிப்பிட்ட அலுவலரின் பதவி, தொடர்பு எண், அலுவலக முகவரி என்பனவற்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

6.3 அறவிடல் செயற்பாடுகள் வாடிக்கையாளருக்காக, அவரது குடும்ப உறுப்பினர்களுக்கோ அல்லது நடுவர்களுக்கோ அல்லது நண்பர்களுக்கோ வாய்மொழி ரீதியான அல்லது உடல் ரீதியான தொல்லைகளையோ ஏற்படுத்தாமையினையை அட்டை வழங்குநர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

6.4 அட்டை வழங்குநர் நியாயமான காலப்பகுதியொன்றிற்குள் அறவிடல் கடிதம் தொடர்பாக எழும் விசாரணைகளுக்கு பதிலிறுத்தல் வேண்டும். அத்தகைய காலப்பகுதி அவர்களது ஒழுக்கக் கோவையில் விசேடமாக வரைவிலக்கணம் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இது வாடிக்கையாளர்களுக்கு சரியான முறையில் தெரிவிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

6.5 செலுத்தத் தவறிய கொடுப்பனவுகளை அறவிடும் பொழுது அட்டை வழங்குநர் பின்பற்றுகின்ற நடைமுறைகள் கொடுகடனை வழங்குகின்ற நேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு சரியான முறையில் தெரியப்படுத்தப்படல் வேண்டும். அட்டை வழங்குநர்கள், கொடுகடன் அட்டைக் கொடுப்பனவுகள் உரிய தவணையில் செலுத்தப்படாதமை பற்றிய தகவல்களை மூன்றாந்தரப்பினருக்கு வெளிப்படுத்தக்கூடாது

**7. வாடிக்கையாளர் உரிமைகளை இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருத்தல்**

7.1 அட்டை வழங்குநர் வாடிக்கையாளர் தகவல்களை இரகசியமாகப் பேண வேண்டியதுடன் சந்தைப்படுத்தல் ஆளணியினர், கடன் அறவீட்டு முகவர்கள் அல்லது இவ் வியாபாரச் செயற்பாடுகளிலுள்ள மூன்றாந்தரப்பினரால் பயன்படுத்தப்படும் அத்தகைய தகவல்களுக்கு பொறுப்பாதலும் வேண்டும்.

7.2 கொடுகடன் அட்டையைத் திறக்கும் பொழுது/ வழங்கும் பொழுது பெறப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பான ஏதேனும் தகவல்களை/ தொடர்பு விபரங்களை, அட்டை வழங்குநர் வாடிக்கையாளரின் முன் அனுமதியின்றி எவரேனுமாட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ தெரியப்படுத்தல் கூடாது. குறித்துரைக்கப்பட்ட சட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் மூன்றாந்தரப்பினரினால் கோரப்படும் தகவல்கள் கொடுக்கல்வாங்கல்களின் இரகசியத் தன்மை தொடர்பான சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக அமையாது என்பதனையிட்டு அட்டை வழங்குநர்கள் திருப்திப்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

7.3 விரும்பிக் கேட்கப்படாத கடன்களை அல்லது கொடுகடன் வசதிகளை கொடுகடன் அட்டையை அடிப்படையாகக் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடாது.

**8. பிணக்குகளைத் தீர்த்தல்**

8.1 அட்டை வழங்குநர் பொருத்தமான பிணக்குகளை தீர்த்தல் பொறிமுறையொன்றினையும் பணிகள் நடைமுறையினையும் முறைப்பாடுகளின் அளவிற்கு ஒத்தவிதத்தில் கொண்டிருக்க வேண்டியதுடன் அவற்றை குறைந்த காலப்பகுதியொன்றிற்குள் தீர்த்தலும் வேண்டும்.

8.2 கொடுகடன் அட்டை பிணக்குத் தீர்த்தல் பொறிமுறையை அட்டை வழங்குநரின் அலுவல்சார் வெப்தளத்தில் வெளிப்படுத்த முடியும் அட்டை வழங்குநர் கணனி வழியில் உடனடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் ஒழுங்குகளையும் கொண்டிருக்கலாம். அட்டை வழங்குநர் முறைப்பாடுகளை கண்டறிவதற்கான பொறிமுறைகளை விருத்தி செய்ய வேண்டியதுடன் அதனை வாடிக்கையாளருக்கு தெரியப்படுத்தவும் வேண்டும்.

8.3 அட்டை வழங்குநர் வாடிக்கையாளருடனான கொடுக்கல்வாங்கல் பிணக்குகளை கொடுக்கல்வாங்கல்களின் தன்மை, தூரம், நேர வளையம் போன்றவற்றினைக் கணக்கிலெடுத்து, விசா, மாஸ்டர் அட்டை, அமெக்ஸ் அல்லது வேறு ஏதேனும் பன்னாட்டு அட்டைக் கம்பனி/ அமைப்பு என்பனவற்றின் வர்த்தக உரிமை விதிகளின்படி தீர்த்தல் வேண்டும்.

8.4 அட்டை வழங்குநர், பிணக்குகள் தொடர்பான புலனாய்வுக் காலப்பகுதியில், வாடிக்கையாளர் கொடுகடன் அட்டைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்களா என்பது பற்றி அவர்களுக்கு தெளிவாக அறிவித்தல் வேண்டும்.

8.5 பிணக்கு வாடிக்கையாளருக்கு சாதகமாக தீர்க்கப்படுமிடத்து பிணக்கிற்குரிய கொடுக்கல்வாங்கல் மீதான வட்டி வீதங்களையும் மற்றைய கட்டணங்களையும் அட்டை வழங்குநர் மாற்றிக்கொள்வதுடன் பிணக்குகள் அட்டை வழங்குநருக்கு சாதகமாக பிணக்குகள் தீர்க்கப்படுமிடத்து மட்டும் ஒன்று சேர்ந்த வட்டி அறவிடப்படும்.

8.6 முறைப்பாடுகள் வாடிக்கையாளருக்கு சாதகமாக தீர்க்கப்படுமிடத்து பிணக்கிற்குரிய கொடுக்கல்வாங்கல் பற்றிய தொடர்பான சான்றுகளை அட்டை வழங்குநர் வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

**9. சந்தைப்படுத்தல்/ அறவிடல் செயற்பாடுகளையும் தொழிற்பாடுகளையும் வெளியாருக்கு வழங்குதல்**

9.1 அட்டை வழங்குநர் சந்தைப்படுத்தல், அறவிடல் மற்றும் அட்டைகளை பதித்து உருவாக்குதல், விண்ணப்பங்களை செயற்படுத்தல் போன்ற மற்றைய தொழிற்பாடுகளையும் மூன்றாந்தரப்பு பணி வழங்குவோர்க்கு கூரியர் பணிகளையும் வழங்கலாம்.

9.2 கொடுகடன் அட்டை வழங்குபவர்கள் வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர்களின் பொறுப்பாண்மைகளையும் பொறுப்புக்களையும் மிகத் தெளிவாக வரைவிலக்கணம் செய்து கொள்ளல் வேண்டும்.

9.3 வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர்கள் வாடிக்கையாளரின் நம்பகத்தன்மையினையும் இரகசியத் தன்மையும் பேணுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9.4 கொடுகடன் அட்டை வழங்குநர், சந்தைப்படுத்தல் மற்றும் சேகரிப்பு/ அறவிடல் பொறிமுறை என்பன தொடர்பாக முறையே மேலே பிரிவு 2 மற்றும் 6இல் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களை வெளியிலிருந்து பணி வழங்குவோர் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.5 வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர்களின் ஊழியர்கள் வாடிக்கையாளர்களை கோருதல், அவர்களுக்கு வசதியான நேரத்தில் அழைத்த கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான சரியான நியதிகளையும் நிபந்தனைகளையும் பாதுகாத்தல் போன்ற அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பாக சரியான அறிவும் பயிற்சியும் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.6 வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர் அப் பணிகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு இயலாதவராக இருக்கின்றார் என்பதனை அவதானிக்குமிடத்து வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதிலிருந்து வெளியேறுவதற்கான பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**10. இணங்கி ஒழுகாமை குற்றச்சாட்டினை விதிப்பதற்கான உரிமைகள்**

2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டை பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ், இவ் வழிகாட்டல்கள் எவற்றையேனும் மீறும் அட்டை வழங்குநர்கள் மீது இணங்கியொழுகாமைக் குற்றச்சாட்டினை விதிக்கின்ற உரிமையினை மத்திய வங்கி கொண்டுள்ளது.

**11. சட்ட ரீதியான ஏற்பாடுகள்**

11.1 கொடுகடன் அட்டை வழங்குநர் பொருத்தமான விதிகள் மற்றும் நடைமுறைகளுடன் சேர்த்து கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகளுக்கான வலுவான சட்ட அடிப்படைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.2 விதிகளும் நடைமுறைகளும் அதேபோன்று தொடர்பான தரப்பினர்களுடனான (உ-ம்: நிதியியல் கையேற்பாளர்கள் மற்றும் கொடுகடன் அட்டை வழங்குபவர்கள், வணிகர்கள் மற்றும் கொடுகடன் அட்டை வைத்திருப்போர்) ஒப்பந்த ரீதியான உறவு முறைகள் செல்லுபடியானவையாகவும் நடைமுறைக்கிடத்தக்கனவாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான செயன்முறைகள் நடைமுறையில் இருத்தல் வேண்டும். ஏற்புடைத்தானவிடத்து, இது, உள்நாட்டு மற்றும் கரைகடந்த கொடுக்கல்வாங்கல் இரண்டிற்கும் அங்கீகாரமளிப்பதனை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் மேற்கொள்வதற்கான தெளிவான விதிகளையும் நடைமுறைகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**12. தடங்கலற்ற வியாபாரம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இணங்குவிப்பு**

12.1 கொடுகடன் அட்டை வழங்குநர் உட்படக்கூடிய நிதியியல் மற்றும் நிதியியல் அல்லா இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு கொடுகடன் அட்டை வழங்குபவர் முன்மதியுடைய ஆற்றல் வாய்ந்த முகாமைத்துவம், நிருவாகம், கணக்கீடு மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12.2 கொடுகடன் அட்டை வழங்குனர் இடர்நேர்வும் பகுப்பாய்வுகளையும் புதிய சாதனங்கள்/ பணிகள் மீதான சாத்தியமான ஆய்வுகளையும் நடத்துதல் வேண்டும். மேலும், தொடர்பான சூழ்நிலைகள் மாற்றமடையும் பொழுது, சாதனம்/ பணிகளின் பாதுகாப்பு மற்றும் தடங்கலற்ற தன்மை என்பன தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக ஏற்கனவேயுள்ள சாதனங்கள்/ பணிகளின் இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளின் மீது கொடுகடன் அட்டை வழங்குநர் மீளளிப்பொன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.3 பொருத்தமான மட்டமொன்றில் கணனி முறைமையினை தொழிற்படுத்தக் கூடிய சரியான பயிற்சியும் தகுதியும் கொண்ட ஆளணியினர் போதுமான எண்ணிக்கையில் இருப்பதனை கொடுகடன் அட்டை வழங்குநர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

12.4 கடன் அட்டை வழங்குநர் கொடுகடன் அட்டை தொழிற்பாடுகளின் பின்னணியில், நியாயமானது எனத் தான் கருதுகின்ற மோசடி தொடர்பான அறிவூட்டலையும் மோசடி இடர்நேர்வினைக் குறைப்பதற்கு கொடுகடன் அட்டைகளை சரியான முறையில் பயன்படுத்துவது அல்லது செயன்முறைப்படுத்துவது பற்றி வாடிக்கையாளர்களுக்கும் தொடர்பான பணியாட்களுக்கும் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

12.5 தவறான தொழிற்பாடுகள், முறைமையில் தடங்கல்கள் மற்றும் கடத்திகளில் தவறுகள் அல்லது தாமதங்கள் காணப்படும் நிலையில் நியாயமான தொழிற்பாட்டு நம்பகத்தன்மை, வலையமைப்பின் ஒருங்கிணைப்பு மற்றும் சரியான நேரத்தில் கொடுக்கல்வாங்கல் இடம்பெறல் என்பனவற்றை வலியுறுத்தும் விதத்தில் அட்டை வழங்குநர் அனைத்தையுமுள்ளடக்கிய வலுவான, நன்கு ஆவண மயப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு, தொழில்நுட்ப நடைமுறைகளை கொண்டிருத்தல் வேண்டும். அட்டை வழங்குநர் எதிர்பாராத தடங்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கான நியாயமானதும், காத்திரமானதும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டு, கிரமமாகப் பரீட்சிக்கப்படுகின்றதுமான தடங்கலற்ற வியாபாரத் திட்டமொன்றினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

12.6 வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வது கொடுகடன் முறைமையின் தொழிற்பாடுகளைப் பாதிக்கக்கூடும் எனக் கருதுவாராயின் அவர் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளும் உறவு முறையினை முகாமைப்படுத்துவதற்கான முழுமையான நுணுக்கமான கண்காணிப்பினையும் மேற்பார்வை தொழிற்பாட்டினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

12.7 தற்பொழுது நடைபெற்று வரும் தொழிற்பாடுகளை தொடர்வதற்கு போதுமான இயலளவுடன் கொடுகடன் அட்டை செயன்முறைப்படுத்தலுக்கான தொழில்நுட்ப முறைமையினை வடிவமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதனை அட்டை வழங்குநர் காலத்திற்குக் காலம் கண்காணித்து அவசியமானது எனக் கருதும் வேளையில் தரமுயர்த்தலை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.8 கொடுகடன் அட்டை முறைமையின் தொழிற்பாடுகளை வினைத்திறனுடனும் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்புடனும் மேற்கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் அட்டை வழங்குநர் போதுமானளவு தீர்த்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.9 அட்டை வழங்குநர் பாதுகாப்பு குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் தொழிற்பாட்டு பணிகளை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் வேண்டும்.

12.10 ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் ஒழுக்கக் கோவை என்பனவற்றிற்கு கொடுகடன் அட்டை வழங்குநர்கள் இணங்கியொழுகுவது தொடர்பான சுய மதிப்பீடொன்றினை மேற்கொள்வதனை கொடுகடன் அட்டை வழங்குநர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். உள்ளகக் கணக்காய்வாளர்கள், உள்ளக இணங்குவிப்பு அலுவலர் அல்லது நியமிக்கப்பட்ட சுதந்திரமான மதிப்பீட்டாளர் ஆகியோர் அவர்களது தற்போதைய தொழிற்பாட்டின் ஒரு பகுதியாக இச் சபை மதிப்பீட்டினை மேற்கொள்ளல் வேண்டும்.

12.11 அட்டை வழங்குநர் சொத்துடமை மற்றும் முகாமைத்துவ அமைப்பு போன்றவற்றில் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஆவணமயப்படுத்தப்பட்ட அமைப்பியல் ஒழுங்குகளைக் கொண்டிருக்க வேண்டியதுடன் தவறான முகாமைத்துவம் மற்றும் மோசடிகளைக் குறைக்கும் நிமித்தம் பொருத்தமான கடமை வேறாக்கல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு ஒழுங்குகளுடன் பொருத்தமான அட்டை வழங்குநராக தொழிற்படுதல் வேண்டும்.

12.12 அட்டை வழங்குநர் இவ் வழிகாட்டல்கள் மற்றும் அவர்களின் ஒழுக்கக் கோவைக்கு இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் நியாயமான காத்திரம் மிக்க வழிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**13. பொதுவான நிபந்தனைகள்**

13.1 இலங்கையில் வழங்கப்பட்டு இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற பன்னாட்டு கொடுகடன் அட்டைகளின் தீர்ப்பனவு இலங்கை ரூபாவிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இலங்கையில் வழங்கப்பட்டு வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் வெளிநாட்டு கொடுகடன் அட்டைகளின் தீர்ப்பனவும் வெளிநாடுகளில் வழங்கப்பட்டு இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற வெளிநாட்டுக் கொடுகடன் அட்டைகளின் தீர்ப்பனவும் தொடர்பான தத்துவங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட தொடர்பான நாணயங்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பம்: திரு பி டி ஜே பர்னாந்து
**துணை ஆளுநர்**

**பின்னிணைப்பு**

**மிக முக்கியமான நியதிகள்**

அ. "கொடுகடன் அட்டை உடமையாளர்" என்பது அட்டை வழங்குநர் ஒருவரால் வழங்கப்படும் கொடுகடன் அட்டையொன்றை பயன்படுத்தி அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்.

ஆ. "கொடுகடன் அட்டை வழங்குநர்" என்பது கொடுகடன் அட்டையொன்றை வழங்குகின்றதும் அதன் மூலம் கொடுகடன் அட்டையை வைத்திருப்பவருடன் ஒப்பந்தம் சார் உறவு முறைக்குள் நுழைகின்றதுமான நிறுவனம் என்று பொருளாகும்.

இ. "இலங்கை மத்திய வங்கி" என்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க (422ஆம் அத்தியாயம்) நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

ஈ. "கொடுகடன் அட்டை" என்பது கொடுகடன் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குநரால் கணிக்கப்படும் தொடர் கொடுகடனை தெரியப்படுத்தும் கொடுகடன அட்டையொன்று என்பதுடன் கொடுகடன் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்தப்பட்ட கடனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொடுத்துத்தீர்த்தலை பயன்படுத்துநரால் பயன்படுத்தப்பட்ட கடனின் ஏதேனும் தொகை குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாக கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்காதவிடத்து வட்டி, இலாபம் அல்லது வேறு விதிப்பனவுகளுக்கு அமைவானதாகலாம்.

உ. "நாள்" என்பது கலண்டர் நாள் என்று பொருளாகும்.

ஊ. "நேரடியாகத் தங்கியிருப்பவர்" என்பது பிரதான அட்டை உடமையாளரின் பிள்ளை அல்லது பிரதான அட்டை உடமையாளரை பாதுகாவலரராகக் கொண்ட பிள்ளை

எ. "உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" என்பது இலங்கையில் வங்கித்தொழிலைக் கொண்டு நடத்த 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் பெற்ற கம்பனியொன்று அல்லது கம்பனிச் சபை என்று பொருள்படும்.

ஏ. "உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி" என்பது வைப்புப் பணத்தை ஏற்றல், அத்தகைய பணத்தினை முதலீடு செய்தல் மற்றும் அத்தகைய பணத்தினைக் கடனாக வழங்குதல் போன்ற வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்காக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கம்பனி அல்லது கம்பனிச் சபை எனப் பொருள்படும்.

ஐ. "பிரதானமானவர்" என்பது கொடுகடன் அட்டையின் வர்த்தக உரிமைகளுக்கு ஏக சொந்தக்காரராகவுள்ளவர் எனப் பொருள்படும்.

ஒ. "விரும்பிக் கோரப்படாத அட்டை" என்பது கொடுகடன் அட்டை உடனடியாளரிடமிருந்து சம்மதத்திற்கான கையொப்பத்தினை பெறாமலேயே வழங்கப்பட்ட கொடுகடன் அட்டை எனப் பொருள்படும்.

ஓ. "விரும்பிக் கோரப்படாத கடன்கள்" என்பது வாடிக்கையாளரின் சம்மதத்திற்கான கையொப்பத்தினைப் பெறாமலேயே வழங்கப்பட்ட கடன் எனப் பொருள்படும்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 சனவரி 20

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/01/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### 2010 சனவரி 26ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

2010 சனவரி 26ஆம் நாளன்று சனாதிபதி தேர்தல் தினமாகையால் லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலக நேரம் கட்டுப்படுத்தப்படுவதனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2010 சனவரி 26ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது. இதற்கமைய 2010 சனவரி 26ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 12.45 |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

நஞ்சனி வீரசிங்க
**மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 சனவரி 21

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/02/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### நேரடி பரீட்சிப்புக்களை நடத்தும் வியாபாரத்திற்காக லங்கா செட்டில் முறைமையை திறந்து விடுதல்

நேரடியான சூழ்நிலையொன்றில், புதிய வாசகத்தினை (வாசகம் 3.5) பரீட்சிக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்காக 2010 சனவரி 30ஆம் நாள் சனிக்கிழமையன்று லங்கா செட்டில் முறைமை (அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறை) திறந்திருக்கும் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். எனினும், மேலே குறிப்பிடப்பட்ட நாளில் ஏதேனும்

கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஏதேனும் தொடர்பான உள்முக பிரயோகங்களை (திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்றன) மேற்கொள்வதற்கு லங்கா செட்டில் முறைமை கிடைக்கத்தக்கதாக இருக்கமாட்டாது.

ஆகவே, மேலே குறிப்பிட்ட நாளில் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சிப்பு கொடுக்கல்வாங்கல்களுக்காக மட்டுமே லங்கா செட்டில் முறைமை திறந்திருக்கும்.

ஆகவே, நீங்கள்

(1) 2010 சனவரி 30ஆம் திகதியை பெறுமதி நாளாகக் கொண்ட முன்னோக்கிய திகதியிடப்பட்ட சுவிப்ற் செய்திகள் எவற்றையேனும் அனுப்ப வேண்டாம். நேரடி பரீட்சிப்பு நாள் தவிர்ந்த வேறு ஏதேனும் நாளில் 2010 சனவரி 30ஆம் திகதியை பெறுமதியாகும் திகதியாகக் கொண்ட ஏதேனும் செய்திகளை நீங்கள் பெற்றிருந்தால் அத்தகைய செய்திகள் தீர்ப்பனவிற்கான செல்லுபடியாகும் கொடுக்கல்வாங்கல்களாக கருதப்படமாட்டாது;

(2) 2010 சனவரி 30ஆம் திகதி சனிக் கிழமையன்று ஏதேனும் முன்னோக்கிய திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை பதிய வேண்டாம். ஏனெனில் அத்தகைய பதிவுகள் நேரடி பரீட்சிப்பு முடிவடைகையில் முறைமையிலிருந்து நீக்கப்பட்டு வரும்.

(3) CBCELKLAXXX, CBCELKLSXXX மற்றும் CBCELKLXXXX என்பனவற்றினால் தயாரிக்கப்பட்ட 2010 சனவரி 30ஆம் நாள் பெறுமதித் திகதியாகக் கொண்டு கிடைக்கப்பட்ட அனைத்து சுவிப்ற் செய்திகளையும் பொருட்படுத்த வேண்டாம் என்றும்; அத்துடன்

(4) உங்கள் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிலுள்ள அனைத்து பிணையங்களையும் 2010 சனவரி 28ஆம் நாளன்று ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று முடிவடைந்த பி.ப. 4.15 மணிக்கு 'சொந்த' கணக்கிற்கு மாற்றுமாறும் அதே நாளன்று பி.ப. 4.30 மணிக்கு உங்கள் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கு பூஜ்ய நிலுவையில் காணப்படுவதனை உறுதிப்படுத்துமாறும்;

தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அடுத்த வேலை நாள் (2010 பெப்புருவரி 01ஆம் திகதி) தொடங்கும் பொழுது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைப் பெற விரும்பும் பங்கேற்பாளர்கள், தேவையான நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கணக்குகளில் தொடர்பான பிணைய அளவுகள் மேற்கொள்ளவும் பங்கேற்பாளர் புறோசர் என அழைக்கப்படும் கோவை தேடலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பங்கேற்பாளர் முகாமைப்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குகின்ற விதியை பயன்படுத்தவும் முடியும்.

**குறிப்பு:** நேரடி பரீட்சிப்பு ஆரம்பிக்கும் நேரம் 2010 சனவரி 30ஆம் திகதி சனிக்கிழமை **மு.ப. 10.30** மணியாகும். தேவையான பரீட்சிப்பு வழிகாட்டல்கள் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் 2010 சனவரி 30ஆம் திகதிக்கு முன்னதாக மின்னஞ்சல் மூலமாக நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 சனவரி 25

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**2010.01.27ஆம் திகதியை சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல்**

அரசாங்கம் 2010.01.27இனை (புதன்கிழமை) சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தியிருப்பதன் காரணமாக அன்று லங்கா செட்டில் முறைமை வியாபாரத்திற்காக திறக்கப்படமாட்டாது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். 2010.01.27 பெறுமதித் திகதியைக் கொண்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கலையும் முறைமையில் பதிவு செய்வதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து

பங்கேற்பாளர்களும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2010.01.27ஆம் திகதியை பெறுமதியாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருப்பின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை 2010.01.26ஆம் திகதி வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸாகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 சனவரி 26

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/04/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**உத்தேச லங்கா செட்டில் முறைமையின் நேரடிப் பரீட்சிப்பினை பிற்போடுதல்**

2010 சனவரி 30ஆம் நாள் நடத்துவதற்கு அட்டவணையிடப்பட்டிருந்த மேலே குறிப்பிடப்பட்ட நேரடி பரீட்சிப்பு பிற்போடப்பட்டிருப்பதனைத் தங்களுக்கு அறியத் தருகின்றோம். எனவே, மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை 2010 சனவரி 30ஆம் திகதி சனிக்கிழமை திறக்கப்படமாட்டாது.

நேரடி பரீட்சிப்பிற்கான அடுத்த திகதி மிக விரைவில் தங்களுக்கு அறியத் தரப்படும்.

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸாகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்:** 34/07/029/0001/001

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 பெப்புருவரி 10

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/05/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**நேரடி பரீட்சிப்புக்களை நடத்தும் வியாபாரத்திற்காக லங்கா செட்டில் முறைமையை திறந்து விடுதல்**

நேரடியான சூழ்நிலையொன்றில், புதிய வாசகத்தினை (வாசகம் 3.5) பரீட்சிக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்காக 2010 **பெப்புருவரி 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று** லங்கா செட்டில் முறைமை (அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறை) திறந்திருக்கும் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். எனினும், மேலே குறிப்பிடப்பட்ட நாளில் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஏதேனும் தொடர்பான உள்முக பிரயோகங்களை (திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்றன) மேற்கொள்வதற்கு லங்கா செட்டில் முறைமை கிடைக்கத்தக்கதாக இருக்கமாட்டாது.

ஆகவே, மேலே குறிப்பிட்ட நாளில் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சிப்பு கொடுக்கல்வாங்கல்களுக்காக மட்டுமே லங்கா செட்டில் முறைமை திறந்திருக்கும்.

ஆகவே நீங்கள்

(1) 2010 பெப்புருவரி 21ஆம் திகதியை பெறுமதி நாளாகக் கொண்ட முன்னோக்கிய திகதியிடப்பட்ட சுவிப்ற் செய்திகள் எவற்றையேனும் அனுப்ப வேண்டாம். நேரடி பரீட்சிப்பு நாள் தவிர்ந்த வேறு ஏதேனும் நாளில் 2010 பெப்புருவரி 21ஆம் திகதியை பெறுமதியாகும் திகதியாகக் கொண்ட ஏதேனும் செய்திகளை நீங்கள் பெற்றிருந்தால் அத்தகைய செய்திகள் தீர்ப்பனவிற்கான செல்லுபடியாகும் கொடுக்கல்வாங்கல்களாக கருதப்படமாட்டாது;

(2) 2010 பெப்புருவரி 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று ஏதேனும் முன்னோக்கிய திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை பதிய வேண்டாம். ஏனெனில் அத்தகைய பதிவுகள் நேரடி பரீட்சிப்பு முடிவடைகையில் முறைமையிலிருந்து நீக்கப்பட்டு விடும்;

(3) CBCELKLAXXX, CBCELKLSXXX மற்றும் CBCELKLXXXX என்பனவற்றினால் தயாரிக்கப்பட்ட 2010 பெப்புருவரி 21ஆம் நாள் பெறுமதித் திகதியாகக் கொண்டு கிடைக்கப்பட்ட அனைத்து சுவிப்ற் செய்திகளையும் பொருட்படுத்த வேண்டாம் என்றும்; அத்துடன்

(4) உங்கள் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிலுள்ள அனைத்து பிணையங்களையும் 2010 பெப்புருவரி 19ஆம் நாளன்று ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று முடிவடைந்த பி.ப. 4.15 மணிக்கு 'சொந்த' கணக்கிற்கு மாற்றுமாறும் அதே நாளன்று பி.ப. 4.30 மணிக்கு உங்கள் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கு பூஜ்ய நிலுவையில் காணப்படுவதனை உறுதிப்படுத்துமாறும்

தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அடுத்த வேலை நாள் (2010 பெப்புருவரி 22ஆம் திகதி திங்கட்கிழமை) தொடங்கும் பொழுது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைப் பெற விரும்பும் பங்கேற்பாளர்கள், தேவையான நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கணக்குகளில் தொடர்பான பிணைய அளவுகள் மேற்கொள்ளவும் பங்கேற்பாளர் புறோசர் என அழைக்கப்படும் கோவை தேடலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பங்கேற்பாளர் முகாமைப்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குகின்ற விதியை பயன்படுத்தவும் முடியும்.

**குறிப்பு:** நேரடி பரீட்சிப்பு ஆரம்பிக்கும் நேரம் 2010 பெப்புருவரி 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை **மு.ப. 10.30** மணியாகும். தேவையான பரீட்சிப்பு வழிகாட்டல்கள் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் 2010 பெப்புருவரி 21ஆம் திகதிக்கு முன்னதாக மின்னஞ்சல் மூலமாக நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

| சி என் விஜயசேகர | கே பீ திஸ்ஸகருணா |
|---|---|
| **பதில் கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்** | **பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்** |

**தொடர்பு எண்:** 34/07/029/0001/001

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 பெப்புருவரி 17

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/06/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### 2010 பெப்புருவரி 26ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

மிலாத்-உன்-நபியின் (முகமது நபியின் பிறந்த நாள் சனிக்கிழமையன்று வருவதனால்) அவ் விடுமுறைக்குப் பதிலாக 2010 பெப்புருவரி 26ஆம் திகதி அரைநாள் விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதனால் லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலக நேரம் கட்டுப்படுத்தப்படுவதனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2010 பெப்புருவரி 26ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது. இதற்கமைய

2010 பெப்புருவரி 26ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 12.45 |
| பல்புடை கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள், ரூபா வரைவுத் தீர்ப்பனவுகள் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸகருணா
**மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 மாச்சு 30

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/07/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## லங்கா செட்டில் முறைமையிலுள்ள ஆர்ரிஜிஎஸ்/எஸ்எஸ்எஸ்எஸ் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் திருத்தம்

லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையினது விதிகளின் தொகுதி 4இல் உள்ள 8ஆம் விதியிலுள்ளவாறும் (திருத்தப்பட்ட) விஞ்ஞாபன உடன்படிக்கையின் 4ஆம் பிரிவின் படியும் ஆர்ரிஜிஎஸ்/எஸ்எஸ்எஸ்எஸ் கொடுக்கல்வாங்கல் மீதான கட்டணங்களும் விதிப்புக்களும் இணைப்பு 1இன் அட்டவணையிலுள்ளவாறு 2010 மே 01ஆம் நாளிலிருந்து திருத்தப்படவுள்ளமை பற்றி இத்தால் அறியத் தரப்படுகின்றது.

கே பீ திஸ்ஸகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

இணைக்கப்பட்டுள்ளவை: இணைப்பு 1 - லங்கா செட்டிலின் கட்டணம் மற்றும் விதிப்பின் அட்டவணை

இணைப்பு I

## லங்கா செட்டில் கட்டணம் மற்றும் விதிப்புக்களின் அட்டவணை

இலங்கை மத்திய வங்கி, 2010 மே 1ஆம் நாளிலிருந்து அனைத்து லங்கா செட்டில் பங்கேற்பாளர்களிடமிருந்தும் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு அனைத்துமுட்பட கட்டணமாக இலங்கை ரூ.420 இனை விதிக்கும்.

கட்டணம் மற்றும் விதிப்புக்களின் நோக்கத்திற்காக “கொடுக்கல்வாங்கல்” என்பது பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

(1) பின்வரும் செய்திகளைப் பயன்படுத்துவதன் மூலமாக லங்கா செட்டிலிலுள்ள பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் அவர்களது சொந்த கணக்குகளுக்கு தீர்ப்பனவு செய்யப்படும் எந்த ஒன்றிற்கும்

அ) எம்ரி 102 - பல் வாடிக்கையாளர் வரவு மாற்றல்

ஆ) எம்ரி 103 - தனியொரு வாடிக்கையாளர் வரவு மாற்றல்

இ) எம்ரி 202 - பொதுவான நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்

ஈ) எம்ரி 205 - நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்களை நிறைவேற்றுதல்

உ) எம்ரி 541 - கொடுப்பனவிற்கு எதிராக பெறப்படுபவை

(2) எம்ரி 540 - இலவசமாக செய்திகளைப் பெறுதல் - இதனைப் பயன்படுத்துவதனூடாக லங்கா செட்டிலில் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணங்களுக்குப் புறம்பாக, பங்கேற்பாளர்கள் சுவிப்ற் தகவல் அனுப்புவதுடன் தொடர்பான கட்டணங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இவை சுவிப்றினால் தனியான முறையில் பட்டியற்படுத்தப்படவுள்ளதுடன் பங்கேற்பாளர்களினால் சுவிப்ற்கு நேரடியாகச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 ஏப்பிறல் 05

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/08/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2010 ஏப்பிறல் 8ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

பாராளுமன்ற தேர்தல் காரணமாக 2010 ஏப்பிறல் 8ஆம் நாளன்று லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலக நேரம் கட்டுப்படுத்தப்படுவதனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2010 ஏப்பிறல் 8ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது. இதற்கமைய 2010 ஏப்பிறல் 8ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவு | பி.ப. 12.45 |
| பல்புடை கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள், ரூபா வரைவுத் தீர்ப்பனவுகள் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 ஏப்பிறல் 06

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/09/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### 2010 ஏப்பிறல் 9ஆம் திகதியை சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல்

அரசாங்கம் 2010 ஏப்பிறல் 09ஆம் திகதியினை சிறப்பு வங்கி விடுமுறையாக பிரகடனப்படுத்தியிருப்பதன் காரணமாக அன்று லங்கா செட்டில் முறைமை வியாபாரத்திற்காக திறக்கப்படமாட்டாது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். 2010 ஏப்பிறல் 09ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் முறைமையில் பதிவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்துப் பங்கேற்பாளர்களும் இத்துடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2010 ஏப்பிறல் 9ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருப்பின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை 2010 ஏப்பிறல் 08ஆம் திகதி வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 ஏப்பிறல் 23

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/10/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2010 ஏப்பிறல் 30ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

2010 ஏப்பிறல் 30ஆம் நாளன்று (மே தினம் சனிக்கிழமையில் வருவதனால் அதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது) லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலக நேரம் கட்டுப்படுத்தப்படுவதனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2010 ஏப்பிறல் 30ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது. இதற்கமைய 2010 ஏப்பிறல் 30ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவு | பி.ப. 12.45 |
| பல்புடை கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள், ரூபா வரைவுத் தீர்ப்பனவுகள் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

சி என் விஜயசேகர
**மேலதிக கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 மே 10

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/11/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### 2010 மே 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளுதல்

தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கும் நோக்கத்திற்காக லங்கா செட்டில் (ஆர்ரிஜிஎஸ் மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான முறைமைகளின் தொழிற்பாடுகள் **2010 மே 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை** அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளவுள்ளமை பற்றி மத்திய வங்கி அறியத் தருகின்றது. தொழில்நுட்ப மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளிட்ட தேவையான பயன்படுத்துநர் வழிகாட்டல் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் உரிய காலத்தில் நேரடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

சி ஜே பி சிறிவர்த்தன
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

ரஞ்சனி வீரசிங்க
**பதில் பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 யூன் 17

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/12/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

### 2010 யூன் 21ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்கு செய்யப்படும் மாற்றங்கள்

லங்கா செட்டில் முறைமை விதிகளின் பிரிவு 4.8.2 இற்கிணங்க, அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 2010 யூன் 18ஆம் திகதிக்குரிய கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கும் பொருட்டு 2010 யூன் 21ஆம் திகதியன்று லங்கா செட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையை மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

முறையே 2010 யூன் 18 மற்றும் 2010 யூன் 21 ஆகிய இரண்டு பெறுமதித் திகதிகளுக்குரிய தீர்ப்பனவுகளை நிறைவேற்றும் பொருட்டு, 2010 யூன் 21ஆம் நாளிற்காக இங்கு இணைக்கப்பட்டுள்ள தொழிற்பாட்டு அட்டவணைகளைப் பின்பற்றுமாறு தாங்கள் தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பெறுமதித் திகதி 2010 யூன் 18இன் கீழான தொழிற்பாட்டு அட்டவணை**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 6.30 | முறை ஆரம்பமாகிறது | அ.நே.மொ.தீ.முறை/ ப.பி. முறைப் பிரயோகம் ஆரம்பம் |
| மு.ப. 7.30 இலிருந்து மு.ப. 8.00 மணி வரை | நாளாந்த செய்முறைகள் ஆரம்பமாதல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை பூரணப்படுத்தல் **(2010 யூன் 18)** மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைக் குறிப்பிடல் |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ மீள் கொள்வனவு தன்னியக்கமாக நேர்மாற்றுதல் | கணனி முறையானது கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ள திறக்கப்படுகிறது |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ மீள் கொள்வனவு தன்னியக்கமாக நேர்மாற்றுதல் | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குதல் மற்றும் தி.ச.தொழிற்பாட்டின் மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்த்தல் |
| மு.ப. 8.15 | முதிர்ச்சி/ வட்டிக் கொடுப்பனவுகள் நாளின் கோவையைத் தொடங்குதல் | முதிர்ச்சிப் பெறுகைகளை தீர்ப்பனவு செய்தல்/ பிணையங்களின் நறுக்குக் கொடுப்பனவுகள், லங்கா செட்டிலின் கட்டணங்கள்/ தண்டப்பணத்தினை மேற்கொள்ளுதல் |
| மு.ப. 8.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பிரதான தீர்ப்பனவுகள் (யூன் 17இல் தேறிய எண்தொகை) |
| மு.ப. 10.00 | முதலாந்தர ஏல தீர்ப்பனவினை மூடுதல்/ வாடிக்கையாளர் நிலைமையினை மீளவமைத்தல் | முதலாந்தர ஏலங்களின் கீழ் பிணையங்களைத் தீர்ப்பனவு செய்தல்/ இ.ம. வங்கியின் பரந்த பிரதேச வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் நிலைமையினை மீளவமைத்தல் கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்தல் |
| மு.ப. 10.05 | கேட்டுக் கொள்ளப்படுமிடத்து மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவின் முதல் பிரிவின் தீர்ப்பனவு |
| மு.ப. 10.20 | ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொடுப்பனவு | ஒரு நாளுக்குள்ளேயான மீள்கொடுப்பனவு |
| மு.ப. 10.30 | இறுதி வெட்டு நேரம் வியாபாரத்திற்காக மூடிவிடுதல் | மேலதிக உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. வியாபாரத்திற்காக முறைமை மூடப்பட்டதும் ஒழுங்கு/ தீர்ப்பனவு செயற்பாடுகள் நிறுத்தப்படுவதுடன் இன்னமும் ஒழுங்கிலிருந்தும் எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் நிராகரிக்கப்படும் |
| மு.ப. 10.30 இலிருந்து மு.ப. 11.00 மணி வரை | நாளின் முடிவிலுள்ள செய்முறை | நாளின் முடிவிலுள்ள செய்முறைகள், அதாவது அறிக்கை/ பொதுப்பேரேட்டு ஏற்றுமதிக் கோவை, பட்டியலிடல் கூற்றுக்களை அச்சடிக்கும் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| மு.ப. 11.00 | கணனி முறையினை மூடிவிடுதல் | அ.நே.மொ.தீ. முறை/ ப.பி.தீ. முறையின் மென்கல பிரயோகங்களை மூடிவிட ஆரம்பித்தல், வேறிடத்தில் சேமிப்பதற்கான தகவல்களை பெற்றுக் கொள்ளல் |

**பெறுமதித் திகதி 2010 யூன் 21இன் கீழான தொழிற்பாட்டு அட்டவணை**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 11.45 | முறை ஆரம்பமாகிறது | அ.நே.மொ.தீ.முறை/ ப.பி. முறைப் பிரயோகம் ஆரம்பம் |
| நண்பகல் 12.00 முதல் பி.ப. 12.15 மணி வரை | நாளாந்த செய்முறைகள் ஆரம்பமாதல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை பூரணப்படுத்தல், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைக் குறிப்பிடல். **(21 யூன் விலைகள்)** |
| பி.ப. 12.15 | லங்கா செட்டில் முறைமை வியாபாரத்திற்காக திறக்கப்படல் | கணனி முறையானது கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளத் திறக்கப்படுகிறது |
| பி.ப. 12.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ மீள் கொள்வனவு தன்னியக்கமாக நேர்மாற்றமடைதல் | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குதல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவின் இரண்டாவது பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 12.20 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | சிலிப்ஸ் (17 யூனின் தேறிய எண்தொகை) |
| பி.ப. 12.30 | முதிர்ச்சிகள்/ வட்டிக் கொடுப்பனவுகள் | முதிர்ச்சிப் பெறுகைகளை தீர்ப்பனவு செய்தல்/ பிணையங்களின் நறுக்குக் கொடுப்பனவுகள் |

| | | |
|---|---|---|
| பி.ப. 2.00 | வாடிக்கையாளரை மீளநிலைப்படுத்தல் | இ.ம. வங்கியின் பரந்த பிரதேச வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் நிலையினை மீளவமைத்தல் கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 2.30 | மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மீள்கொள்வனவின் முதலாவது பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 2.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | ரூபா வரைவுகளின் தீர்ப்பனவு |
| பி.ப. 2.45 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | 2010 யூன் 17ஆம் திகதிக்கான கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவு மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் |
| பி.ப. 3.30 | மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்கல்களுக்கான பிரதான நேரக் குறைப்பு/ முதலாந்தர ஏலத் தீர்ப்பனவு | வங்கியிலிருந்து வங்கிக்கானவை (MT2XX தொடர்கள்) நீங்கலாக, மூன்றாந்தரப்பினர் சார்பாக புதிய கொடுக்கல்வாங்கல்களை (ரி+0) மூடுதல்/ முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 4.00 | மீள்கொள்வனவு (நிலையியல்)/ வாடிக்கையாளர் மீளநிலைப்படுத்தல் | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாவது பிரிவினை தீர்ப்பனவு செய்தல்/ இ.ம. வங்கியின் WAN ஊடாக மேற்கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் நிலையினை மீளவமைத்தல் |
| பி.ப. 4.15 | நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொள்வனவு | ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் மீள்கொள்வனவு |
| பி.ப. 4.30 | வியாபாரத்தினை மூடுவதற்கான இறுதி வெட்டு நேரம் | மேலதிக உள்ளீடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டமாட்டாது. வியாபாரத்திற்கு முறைமை மூடப்பட்டதுடன் ஒழுங்கு/ தீர்ப்பனவு செயற்பாடுகள் நிறுத்தப்படுவதுடன் இன்னமும் ஒழுங்கிலிருந்த எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் நிராகரிக்கப்படும். |
| பி.ப. 4.30 மணியிலிருந்து பி.ப. 5.00 வரை | நாளின் முடிவிலுள்ள செயன்முறை | நாளின் முடிவிலுள்ள செய்முறைகள், அதாவது அறிக்கை பொதுப் பேரேட்டு ஏற்றுமதிக் கோவை. பட்டியல் கூற்றுக்களை அச்சடிக்கும் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| பி.ப. 5.00 | கணனி முறையினை மூடிவிடுதல் | அ.நே.மொ.தீ. முறை/ ப.பி.தீ. முறையின் மென்கலப் பிரயோகங்களை மூடிவிட ஆரம்பித்தல். வேறிடத்தில் சேமிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் |

பங்கேற்பாளர்கள் அவர்களது தீர்ப்பனவுக் கணக்குகளை “புறோசர்” என அழைக்கப்படும் கோவைத்தேடல் பணி நிலையத்தினூடாக கண்காணிக்குமாறும் அட்டவணையிடப்பட்ட நேரங்களுக்கமைவாக அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களினதும் சுமுகமான தீர்ப்பனவிற்கு வசதியளிக்கும் விதத்தில் அவர்களது கணக்கில் போதுமான நிதிகள் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

சி என் விஜயசேகர
**மேலதிக கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

கே பீ திஸ்ஸகருணா
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 செத்தெம்பர் 16

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/13/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**2009 ஓகத்தின் லங்கா செட்டில் முறைமையின் விதிகள் வாசகம் 2.0 இற்கு திருத்தம்**
**லங்கா செட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை**

லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டின் புதிய சிலிப்ஸ் பிரயோகங்களை 2010 செத்தெம்பர் 20ஆம் திகதியிலிருந்து நேரடியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இப் பிரயோகத்தின் அதிகரித்த தொழிற்பாடுகள் பின்வரும் விதத்தில் இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

- தற்போதைய தொழிற்பாடுகளைப் போன்று, கட்டம் 1, 2010 செத்தெம்பர் 20ஆம் நாளன்று மு.ப. 8.30இல் தொடங்கும் அ.நே. மொ. தீர்ப்பனவுகளுடன் தனியொரு தீர்ப்பனவு ஒன்றினை உள்ளடக்கியிருக்கும் (தொடர் 1).
- கட்டம் 2, 2010 செத்தெம்பர் 27ஆம் நாளன்று முறையே மு.ப. 8.30 இற்கும் பி.ப. 3.00 மணிக்கும் தொடங்கும் அ.நே.மொ. தீர்ப்பனவுகளுடன் இரண்டு தீர்ப்பனவுச் சுற்றுக்களை உள்ளடக்கியிருக்கும். தொடர் காலப்பகுதியில் உள்ளடக்கப்பட்ட ரி+1 இலிருந்து ரி +14 தீர்ப்பனவுகளுக்கு மேலதிகமாக, கட்டம் 2 ஆனது தொடர் 2 இன் தீர்ப்பனவுச் சுற்று வட்டத்தின் போது ரி+0 தீர்ப்பனவிற்கான (சம்பளக் கொடுப்பனவுகள் நீங்கலாக) வசதியை உள்ளடக்கும்

பங்கேற்பாளர்கள், சிலிப்ஸ் கொடுக்கல்வாங்கலொன்றின் உயர்ந்தபட்சப் பெறுமதி ரூ. 1(ஒரு) மில்லியனாகவும் ரி+0 கொடுக்கல்வாங்கல்களை 2010 செத்தெம்பர் 27ஆம் நாளன்று கட்டம் 2 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரமே லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு அனுப்பமுடியும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்ட புதிய சிலிப்ஸ் பிரயோகங்கள் மீதான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2. இதற்கமைய, நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை தொடர்பான 2009 ஓகத்தின் - லங்கா செட்டில் முறைமை விதிகளின் வாசகம் 2இன் தொகுதி 4இன் கிளை வாசகம் 1.2 இலுள்ள அட்டவணை **2010 செத்தெம்பர் 27ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் திருத்தம் செய்யப்படுகிறது** என்பதனை தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 6.30 | முறை ஆரம்பமாகிறது | அ.நே.மொ.தீ.முறை/ ப.பி. முறைப் பிரயோகம் ஆரம்பம் |
| மு.ப. 7.30 இலிருந்து மு.ப. 8.00 மணி வரை | நாளாந்த செய்முறைகள் ஆரம்பமாதல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை பூரணப்படுத்தல் மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைக் குறிப்பிடல் |
| மு.ப. 8.00 | லங்கா செட்டில் முறை வியாபாரத்திற்காக திறக்கப்படுதல் | கணனி முறையானது கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ள திறக்கப்படுகிறது |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ மீள் கொள்வனவு தன்னியக்கமாக நேர்மாற்றுதல் | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குதல் மற்றும் தி.ச.தொழிற்பாட்டின் மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்த்தல் |
| மு.ப. 8.15 | முதிர்ச்சி/ வட்டிக் கொடுப்பனவுகள் நாளின் கோவையைத் தொடங்குதல் | முதிர்ச்சிப் பெறுகைகளை தீர்ப்பனவு செய்தல்/ பிணையங்களின் நறுக்குக் கொடுப்பனவுகள், லங்கா செட்டிலின் கட்டணங்கள்/ தண்டப்பணத்தினை மேற்கொள்ளுதல் |
| மு.ப. 8.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | சிலிப்ஸ்/ பிரதான தீர்ப்பனவுகள் |
| மு.ப. 8.30 | உடனடி விற்பனை/ கொள்வனவுகள் | தி.ச. தொழிற்பாட்டின் உடனடி விற்பனை மற்றும் கொள்வனவுகளை தீர்த்தல் |
| மு.ப. 11.00 | நேர்மாற்று மீள்கொள்வனவினை நேர்மாற்றுதல் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |

| | | |
|---|---|---|
| மு.ப. 11.45 | நேர்மாற்று மீள் கொள்வனவு (ஏலம்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 12.45 | மீள்கொள்வனவு ஏலம் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 1.00 | முதலாந்தர ஏலத் தீர்ப்பனவினை மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழ் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 2.15 | லங்கா கிளியலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | ரூபா வரைவுத் தீர்ப்பனவு |
| பி.ப. 2.45 | லங்கா கிளியலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | தீர்ப்பனவு இசைவு மற்றும் சீராக்க இசைவு |
| பி.ப. 3.00 | மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்கல்களுக்கான பிரதான நேரக் குறைப்பு | வங்கியிலிருந்து வங்கிக்கானவை (MT2XX தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினர் சார்பாக புதிய கொடுக்கல் வாங்கல்களை (ரி + 0 இற்காக) மூடுதல் |
| பி.ப. 3.00 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | சிலிப்ஸ் (தொடர் 2) |
| பி.ப. 4.00 | மீள்கொள்வனவு (துணைநில்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | நேர்மாற்று மீள்கொள்வனவு (துணைநில்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு |
| பி.ப. 4.30 | வியாபாரத்திற்கான மூடும் நேரத்தினை இறுதியாகக் குறைத்தல் | மேலதிக உள்ளீடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வியாபாரத்திற்கு முறை மூடப்பட்டதுடன் ஒழுங்கு/ தீர்ப்பனவு செயற்பாடுகள் நிறுத்தப்படுவதுடன் இன்னமும் ஒழுங்கிலிருந்த எந்த ஒரு கொடுக்கல் வாங்கலும் நிராகரிக்கப்படும். |
| பி.ப. 4.30 இலிருந்து பி.ப. 5.00 வரை | நாளின் முடிவிலுள்ள செய்முறை | நாளின் முடிவிலுள்ள செய்முறைகள் அதாவது அறிக்கை/ பொதுப் பேரேட்டு ஏற்றுமதிக் கோவை, பட்டியலிடல் கூற்றுக்களை அச்சடிக்கும் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| பி.ப. 5.00 | கணனி முறையை மூடிவிடுதல் | அ.நே.மொ.தீ.முறை/ ப.பி முறையின் மென்கலப் பிரயோகங்களை மூடிவிட ஆரம்பித்தல், வேறிடத்தில் சேமிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் |

3. பங்கேற்பாளர்கள், தமது தீர்ப்பனவுக் கணக்குகளை "புறோசர்" என அழைக்கப்படும் கோவைத் தொழிற்படு நிலையத்தினூடாகக் கண்காணிக்குமாறும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியின் தீர்ப்பனவு நேரத்தில் அவர்களது தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமான நிதி வைத்திருப்பதனை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டனர்.

எல் எச் எம் எஸ் ஹேரத்
**பதில் கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

றஞ்சினி வீரசிங்க
**பதில் பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்:** 34/07/029/0001/001

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 ஒத்தோபர் 27

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/14/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**2010 நவெம்பர் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளுதல்**

தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கும் நோக்கத்திற்காக லங்கா செட்டில் (ஆர்ரிஜிஎஸ் மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான முறைமைகளின் தொழிற்பாடுகள் **2010 நவெம்பர் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை** அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளவுள்ளமை பற்றி மத்திய வங்கி அறியத் தருகின்றது. தொழில்நுட்ப மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளிட்ட தேவையான பயன்படுத்துநர் வழிகாட்டல் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் உரிய காலத்தில் நேரடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

சி என் விஜயசேகர
**மேலதிக கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

ரஞ்சனி வீரசிங்க
**பதில் பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 நவெம்பர் 11

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/15/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்வதற்கான அட்டவணையை பிற்போடுதல்**

**தொடர்பு:** 2010 ஒத்தோபர் 27ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/14/2010

2010 நவெம்பர் 12ஆம் திகதி லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளை அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்வதற்கான அட்டவணையிடப்பட்டிருந்த அதன் நேரடித் தொழிற்பாடுகள் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளினால் பிற்போடப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றோம். ஆகவே, லங்கா செட்டில் முறைமை வழமை போன்று 2010 நவெம்பர் 12ஆம் நாளன்று, இலங்கை மத்திய வங்கியின் அதன் ஆரம்ப இடத்தில் வியாபாரத்திற்காக திறக்கப்பட்டிருக்கும்.

லங்கா செட்டில் முறைமையின் நேரடித் தொழிற்பாடுகள் அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளப்படுவதற்கான அடுத்த திகதி உரிய காலத்தில் தங்களுக்கு அறியத் தரப்படும்.

எஸ் எஸ் ரத்னாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்:** 34/07/029/0001/001

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 நவெம்பர் 15

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/16/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2010 நவெம்பர் 19ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் தொழிற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கி லங்கா செட்டில் முறைமையின் வழமையான நாளாந்தத் தொழிற்பாடுகளை **2010 நவெம்பர் 19ஆம்** நாளன்று (வெள்ளிக்கிழமை) அதன் மாற்று அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளவுள்ளமை பற்றி தங்களுக்கு அறியத் தரப்படுகின்றது. தொழில்நுட்ப மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளிட்ட தேவையான பயன்படுத்துநர் வழிகாட்டல்கள் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் ஏற்கனவே மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளன.

எஸ் எஸ் ரத்னாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

பீ எம் ஏ டென்சில்
**பதில் பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்:** 34/07/029/0001/001

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2010 திசெம்பர் 3

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/17/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2010 திசெம்பர் 24ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

2010 திசெம்பர் 24ஆம் நாளன்று லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலக நேரம் கட்டுப்படுத்தப்படுவதனைக் கருத்திற் கொண்டு (நத்தார் தினம் சனிக்கிழமையன்று வருவதற்குப் பதிலாக அரை நாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது) இலங்கை மத்திய வங்கி 2010 திசெம்பர் 24ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது. இதற்கமைய 2010 திசெம்பர் 24ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 12.45 |
| பல்புடை கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள், ரூபா வரைவுத் தீர்ப்பனவுகள் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| பல்புடை கொடுத்துத்தீர்த்தல் தீர்ப்பனவுகள் - சிலிப்ஸ் (தொடர் 2) | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

எஸ் எஸ் ரத்னாயக்க
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

றஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொடர்பு எண்: 08/25/034/0001/001**

பொதுப்படுகடன் திணைக்களம்
2010 மாச்சு 31

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2010**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட்டினை செலான் வங்கி பிஎல்சி யுடன் ஒருங்கிணைத்தல்**

இல 90, காலி வீதி, கொழும்பு 3இல் அமைந்துள்ள செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட்டினை 2010 மாச்சு 31ஆம் நாளிலிருந்து அதே முகவரியிலுள்ள முதனிலை வணிகராக நியமிக்கப்படவிருக்கும் செலான் வங்கி பிஎல்சி (வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்)உடன் ஒருங்கிணைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை அனுமதித்திருக்கிறது.

இதற்கமைய, செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட் 2010 மாச்சு 31ஆம் நாளிலிருந்து முதனிலை வணிகராகத் தொழிற்படுவதுனை நிறுத்திக் கொள்ளும் என்பதனை தங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

இதன் விளைவாக, செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட்டின் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடான SBAELKLXXXX மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கணக்கு இலக்கமான SBAELKLXXXX010004557 என்பன 2010 மாச்சு 31ஆம் நாளிலிருந்தும் தொழிற்படுவதனை நிறுத்திக் கொள்ளும். செலான் வங்கியின் கீழ் வரும் நடைமுறை சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் கணக்கு இலக்கமும் செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட்டின் அனைத்து முதனிலை தொழிற்பாடுகளுக்குமாக பயன்படுத்தப்படும்.

செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட்டின் கீழான லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2010 மாச்சு 31 இலிருந்து செலான் வங்கி பிஎல்சி இன் தொடர்பான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும்.

| | |
|---|---|
| சுவிப்ற் பயன்படுநர் அடையாளக் குறியீடு | : SEYBLKLXXXX |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கு | : SEYBLKLXXXX010004419 |

சி ஜே பி சிறிவர்த்தன
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

ரஞ்சனி வீரசிங்க
**மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை**

கொழும்பு
2010, சனவரி 01 ஆம் திகதி

## 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை

1. இப் பணிப்புரை 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (அ) நிதிக் கம்பனியொன்றினால் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதிக்கு பின்னர் ஆரம்பமாகும் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக் கூடிய ஆகக் கூடிய ஆண்டு வட்டி வீதம்:-

(i) அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 4 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சக் கூடாது.

எப்படியிருப்பினும், 2010.01.01 ஆம் திகதியன்று அறுபது (60) வயதினை கடந்த நபர்களிடமிருந்து (இதன் பின்னர் “மூத்த பிரஜைகள்” என குறிப்பிடப்படும்) இந்தப் பந்தியின் (i) அல்லது (ii) இன் கீழ் ஏற்றுக்கொள்ளும் அல்லது புதுப்பிக்கும் தவணை வைப்புக்கள் தொடர்பில், நிதிக் கம்பனி இந்தப் பந்தியின் (i) அல்லது (ii) வட்டிக்கு மேலதிகமாக வட்டியாக ஒரு சதவீத புள்ளியினை வழங்கலாம்.

(ஆ) நிதிக் கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதிக்கு பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் வைப்புச் சான்றிதழின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்:

(i) வைப்புச் சான்றிதழ் 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 4 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) வைப்புச் சான்றிதழ் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும் விஞ்சாத வகையில், அத்தகைய முறி சம்பந்தமாக வழங்கப்படக் கூடிய வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3. நிதிக் கம்பனியொன்றினால் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதிக்கு பின்னா் ஆரம்பமாகும் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக் கூடிய வட்டி வீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை விஞ்சக்கூடாது.

எப்படியிருப்பினும், மூத்த பிரஜைகளினால் பேணப்படும் சேமிப்பு வைப்புக்கள் தொடர்பில், சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினிற்கு மேலதிக வட்டியாக ஒரு சதவீத புள்ளியினை நிதிக் கம்பனி வழங்கலாம்.

4. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களையும் வைப்புச் சான்றிதழின் கழிவு வீதங்களின் விபரங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனியினால், அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ பணிப்பாளருக்கு சமா்ப்பிக்க வேண்டும்.

5. இப் பணிப்பில்

   1. “தவணை வைப்புக்கள்” என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும் மற்றும்

   2. “பணிப்பாளா்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பாா்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப் பெறப்படுகின்றது.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவா்/**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநா்**

கொழும்பு, 2010 செத்தெம்பா் 27

## 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வைப்புப் பொறுப்புக்களின் காப்புறுதி) பணிப்புரைகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 27ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி நாணயச் சபை 2010 ஒத்தோபா் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு இப் பணிப்புரைகளை இத்தால் வழங்குகிறது.

**1. எடுத்துக்காட்டல்**

1.1 இப் பணிப்புரைகள் 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் (வைப்புப் பொறுப்புக்களின் காப்புறுதி) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

**2. நியதி ஏற்பாடுகள் இயலுமைப்படுத்தல்**

2.1 நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கி அச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களின் காப்புறுதிக்கான திட்டத்தை உருவாக்கவும் பேணவும் முகாமைப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் அல்லது நாணயச் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு ஏதேனும் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின் கீழுள்ள அத்தகைய வைப்புக்களை காப்புறுதி செய்யுமாறு அத்தகைய கம்பனிகளைக் கேட்டுக் கொள்ளவும் முடியும்

**3. பணிப்புரைகளின் குறிக்கோள்**

3.1 நியதி ஏற்பாட்டு நியதிகளின்படியும் நிதி வியாபாரத்தின் மிகச் சிறந்த நடைமுறைகளின்படியும், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் பொதுமக்களின் நம்பிக்கையில் மிக முக்கியமாகத் தங்கியிருக்குமென்பதால் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் மிக முக்கிய வியாபாரமானது காத்திரமான இடா்நோ்வு முகாமைத்துவ வழிமுறைகளைத் தேவைப்படுத்துகின்றது.

**4. வைப்புக்களை காப்புறுதி செய்தல்**

4.1 எனவே, அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் நாணய விதிச் சட்டத்தின் 32அ மற்றும் 32உ ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குகளின் நியதிகளில் நாணயச் சபையினால் தொழிற்படுத்தப்படும் வைப்புக் காப்புறுதித் திட்டத்திலுள்ள அவற்றின் வைப்புப் பொறுப்புக்களை 2010 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து காப்புறுதி செய்தல் வேண்டும்.

4.2 பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகளும் வைப்புக்களுக்கு வேண்டுகோள் விடுகின்ற தமது விளம்பரங்களில் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கின்றமை பற்றியும் தகுதி வாய்ந்த வைப்புப் பொறுப்புக்கள் மீது வைப்பாளர் ஒருவர் உயர்ந்தபட்சம் ரூ.200,00 கொண்ட நட்ட ஈட்டிற்கான காப்புறுதிக் கட்டணத்தினைப் பெறுவதற்கு ஏற்புடைத்தனவாக இருக்கும் என்ற விடயத்தினையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

## 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம்

1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட விதி

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை**

கொழும்பு
2010 ஒத்தோபர் 06

## 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல் - திருத்தம்) விதி

1. இவ்விதியானது 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல் - திருத்தம்) விதி என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2இன் நியதிகளுக்கிணங்க பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலும், அத்துடன் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலும் வேண்டும்.

2. 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல்) விதியின் கிளை வாசகம் 5 மற்றும் 6 என்பன இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலீடாக பின்வரும் வாசகங்கள் புகுத்தப்படுகின்றன:-

***“5. பதிவு செய்யப்படும் முதல் ஆண்டிற்காக நிதிக் கம்பனிகளினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் 2011 சனவரி 1ஆம் நாளிலிருந்து ரூ.500,000 ஆக இருக்குமென்பதுடன், இதனை பதிவு செய்யும் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படவும் வேண்டும்.”***

***“6. 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனியும் முன்னைய கலண்டர் ஆண்டு முடிவடைவதற்கு 30 நாட்களுக்கு முன்னதாக, முன்னைய நிதியியல் ஆண்டு முடிவிலிருந்தவாறான ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டவாறு வருடாந்த உரிமக் கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும்.”***

| மொத்தச் சொத்து | வருடாந்த உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூ. 1 பில்லியன் அல்லது அதற்குக் குறைவான | ரூ. 150,000 |
| ரூ. 1 பில்லியனிற்கு மேல் ரூ. 10 பில்லியன் வரை | ரூ. 250,000 |
| ரூ. 10 பில்லியனிற்கு மேல் | ரூ. 500,000 |

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் இப் பணிப்புரை விடுக்கப்படுகிறது.

கே.எம்.ஏ.என் டவுலாகல
பணிப்பாளர்
**வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2010 திசெம்பர் 09

## 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப் பணிப்புரையானது 2010ஆம் ஆண்டு 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்கக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடுதல் கம்பனி எனக் குறிப்பிடப்படும்) உடனடியாக ஏற்புடையதாதலும் வேண்டும்.

**அடுத்த 5 ஆண்டு காலப்பகுதிக்கான குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடு**

2. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் கீழே காட்டப்பட்டிருக்கின்றவாறான தொகைக்கு குறையாததொரு பழுதுறா மைய மூலதனத்தினைப் பேணுதல் வேண்டும்.

| ஆகக் குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடுகள் (ரூ. மில்.) | நடைமுறைக்கு வரும் நாள் |
|---|---|
| 100 | 2012.01.01 இலிருந்து |
| 150 | 2013.01.01 இலிருந்து |
| 200 | 2014.01.01 இலிருந்து |
| 250 | 2015.01.01 இலிருந்து |
| 300 | 2016.01.01 இலிருந்து |

**மைய மூலதனத்தின் வரைவிலக்கணம்**

3. “மைய மூலதனம்” என்பது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகை எனப் பொருள்படும்.

**(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரணப் பங்குகள்**

ஒதுக்குகள் அல்லது மிகைகள் அல்லது பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபங்கள் என்பவற்றிற்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் பங்குகள் மற்றும் பகுதியளவில் செலுத்தப்பட்ட பங்குகள் அல்லது இருப்புக்களைப் பொறுத்தவரை செலுத்தப்பட்ட தொகை என்பன நீங்கலாக வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்/ பொதுவான இருப்புக்கள்;

**(ஆ) ஒன்று சேர்க்கப்படாத, மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள்**

பங்கிலாபக் கொடுப்பனவுகளுக்கு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ உதவியளிப்பதற்கு இலாபத்தன்மை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் பங்கிலாபங்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாக தளர்த்தப்படக்கூடிய விடத்து, வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்ட ஒன்று சேராத மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள்;

**(இ) பங்குக் கட்டுப்பணம்**

ஏற்புடைத்தானவிடத்து சாதாரண பங்குகள் பொதுவான பங்கு அல்லது ஒன்று சேராத மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் முகப்புப் பெறுமதியிலும் பார்க்க வழங்கல் விலைகளின் மிகை;

**(ஈ) நியதி ஒதுக்கு நிதியம்**

2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரையின் கீழ் பேணப்படும் ஒதுக்கு நிதியத்தின் வரவிலுள்ள தொகை;

**(உ) பொதுவான அல்லது ஏனைய கட்டற்ற ஒதுக்குகள்**

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின்படி வைத்திருக்கப்பட்ட இலாபங்கள், பங்குக் கட்டுப்பணங்கள் அல்லது தேறல் செய்யப்பட்ட மிகைகள் என்பனவற்றின் ஒதுக்கீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்டு பொதுவான அல்லது ஏனைய ஒதுக்குகள் வடிவிலுள்ள வெளிப்படுத்தப்பட்ட ஒதுக்குகள்;

**(ஊ) வெளியிடப்பட்ட வைத்திருக்கப்பட்ட இலாபங்கள்/ (ஒன்று சேர்ந்த நட்டங்கள்)**

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு முதலீட்டுச் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டிலிருந்தும் தோன்றிய மிகைகள் நீங்கலான முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட இலாப/ (நட்டக்) கணக்கிலிருந்த மீதி;

**(எ) வெளியிடப்படாத நடைமுறையாண்டின் இலாபங்கள்/ (நட்டங்கள்)**

இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கையின் முடிவுத் திகதிக்குப் பின்னர் உழைக்கப்பட்ட/ உறப்பட்ட நடைமுறையாண்டு இலாபங்கள்/ (நட்டங்கள்) (நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னைய ஏதேனும் மிகை/ இழப்பு நீங்கலாக);

**(ஏ) நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட, வரிக்குப் பின்னைய ஏதேனும் மிகை/ (நட்டம்)**

கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கையின் முடிவுத் திகதிக்குப் பின்னர் நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வரிக்குப் பின்னய ஏதேனும் மிகை/ (நட்டம்).

**2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரை இரத்துச் செய்யப்படுகிறது**

4. 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் இப்பணிப்புரை விடுக்கப்படுகிறது.

கே.எம்.ஏ.என் டவுலகல
பணிப்பாளர்
**வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2010 திசெம்பர் 09

## 2010ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப் பணிப்புரையானது 2010ஆம் ஆண்டு 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன்; 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்கக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட குத்தகைக்குவிடுகின்ற நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் “சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி” எனக் குறிப்பிடப்படும்) உடனடியாக ஏற்புடையதாதலும் வேண்டும்.

2. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் பின்வரும் காலாந்தரக் கூற்றுக்களை, மத்திய வங்கியின் நிதியியல் தகவல் முறையினால் வழங்கப்பட்டுள்ள வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தரவுப் பரிமாற்ற முறைமையினூடாக கீழே குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**சமர்ப்பிக்கப்பட வேண்டிய கூற்றுக்கள்**

| கூற்று | காலப்பகுதி | சமர்ப்பிக்க வேண்டிய திகதி |
|---|---|---|
| என்பீஎல்-எம்எவ்-01-எஸ்பீ<br>(கடன்பாட்டு அறிக்கைகள்) | மாதாந்தம் | அடுத்த மாதம் 7ஆம் திகதியளவில் |
| என்பீஎல்-எம்எவ்-02-பிஎல்<br>(இலாபம் மற்றும் நட்டம்) | மாதாந்தம் | அடுத்த மாதம் 15ஆம் திகதியளவில் |
| என்பீஎல்-எம்எவ்-03-பீஎஸ்<br>(ஐந்தொகை) | மாதாந்தம் | |
| என்பீஎல்-கியூஎவ்-04-எம்ஜி<br>(முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு) | காலாண்டு | |
| என்பீஎல்-கியூஎவ்-05-சிஏ<br>(கடன் வசதிகளின் பகுப்பு) | காலாண்டு | |
| என்பீஎல்-கியூஎவ்-06-ஏஜி<br>(வழங்கப்பட்ட கடன் வசதிகளும் வெளிநின்றவையும்) | காலாண்டு | |
| என்பீஎல்-கியூஎவ்-07-ஏடி<br>(பணிப்பாளர்கள், உடமை/ துணைக் கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள்) | மாதாந்தம் | வழங்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் |
| என்பீஎல்-கியூஎவ்-08-ஏஐ<br>(மீள உடமையாக்கப்பட்ட சொத்துக்கள்) | காலாண்டு | அடுத்த மாதம் 15ஆம் திகதியளவில் |
| என்பீஎல்-கியூஎவ்-09-எஸ்ஏ<br>(துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை) | காலாண்டு | |
| என்பீஎல்-கியூஎவ்-10-ஏஆர்<br>(கடன் வசதி (நிர்ணயிக்கப்பட்ட தவணைகளில் மீளச் செலுத்தப்பட்டவை) 3 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக நிலுவையிலுள்ளவை) | காலாண்டு | |
| என்பீஎல்-கியூஎவ்-11-ஏசி<br>(கடன் வசதி (நிர்ணயிக்கப்பட்ட தவணைகளில் மீளச் செலுத்தப்படாதவை) 3 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக நிலுவையிலுள்ளவை) | காலாண்டு | |
| என்பீஎல்-கியூஎவ்-12-ஓஎல்<br>(3 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக நிலுவையிலுள்ள தொழிற்படுகின்ற குத்தகைகள்) | காலாண்டு | |
| என்பீஎல்-எம்எவ்-14-ஏஜி<br>(வழங்கப்பட்ட கடன் வசதிகளும் மூலதன நிதியத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலாக வெளிநிற்பவையும்) | காலாண்டு | |
| கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கை (ஐந்தொகை/ இலாபம் மற்றும் நட்டக் கணக்குகள்) | வருடாந்தம் | ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் ஆறு மாதங்களுக்குள் (செத்தெம்பர் 30ஆம் திகதியளவில்) |
| கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு எழுதப்பட்ட கணக்காய்வாளரினது இரகசியக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி | வருடாந்தம் | |

**மற்றைய பணிப்புரைகளில் நீக்கப்படும் பிரிவுகள்**

3. சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பின்வரும் பணிப்புரைகள் மற்றும் அறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களைச் சமா்ப்பித்தல் தொடா்பான காலங்கள் மற்றும் படிவங்களின் இலக்கங்கள் என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

(அ) 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (அறவிடமுடியா மற்றும் ஐயத்திற்குரிய கடன் வசதிகளுக்கான ஏற்பாடுகள்) பணிப்புரையின் 8ஆம் மற்றும் 9ஆம் பந்திகள்.

(ஆ) 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (தனியொரு கடன்பாட்டாளா் வரையறை) பணிப்புரையின் 5ஆம் மற்றும் 7ஆம் பந்திகள்

(இ) 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (இணைவு விகிதம்) பணிப்புரையின் 6ஆம் பந்தி

(ஈ) பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 07.06.2007ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் 2ஆம் பந்தி (தொடா்பு எண்: 24/07/0002/0004/002)

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணிப்புரை இரத்துச் செய்யப்படுகிறது**

4. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (நிதியியல் அறிக்கை) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரை

கே.எம்.ஏ.என். டவுலகல
பணிப்பாளா்
**வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பாா்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2010 திசெம்பா் 09

## 2010ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல்

## (கிளைகளை/ வியாபாரத்தலங்களை திறத்தல்/ இடம் மாற்றுதல்/ மூடிவிடுதல்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப் பணிப்புரையானது 2010ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (கிளைகளை/ வியாபாரத்தலங்களைத் திறத்தல்/ இடம் மாற்றுதல்/ மூடிவிடுதல்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்கக் கம்பனியாகவுள்ள பதிவு செய்யப்பட்ட குத்தகைக்குவிடும் நிறுவனத்திற்கு (இதனகத்துப் பின்னா் “சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி” எனக் குறிப்பிடப்படும்) உடனடியாக ஏற்புடையதாதலும் வேண்டும்.

2. பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் அதன் கிளைகளை/ வியாபாரத்தலங்களை திறக்கவோ அல்லது அவற்றின் இடங்களை மாற்றவோ அல்லது அவற்றை மூடிவிடவோ கூடாது. வியாபாரத் தலங்கள் என்பது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியினால் தொழிற்படுத்தப்படும் அலுவலகங்கள், அலுவலக நிலையங்கள், பணி வழங்கல் நிலையங்கள் அல்லது வேறு ஏதேனும் நிலையங்கள் எனப் பொருள்படும்.

**மதிப்பீட்டுப் பிரமாணம்** 3. புதிய கிளைகள் அல்லது வியாபாரத்தலங்களை திறப்பதற்கான ஒப்புதல்களுக்கான கோரிக்கையினை மதிப்பிடுவதற்கான சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியின் மதிப்பீட்டு பிரமாணங்கள் பின்வருமாறு:

(அ) இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கைகளின்படி மைய மூலதனம்

(ஆ) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்/ பணிப்புரைகள்/ அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகும் மட்டம்;

(இ) வியாபார/ நிதியியல் தோற்றப்பாடும் இலாபத்தன்மையும்;

(ஈ) சொத்துக்களின் தரம்;

(உ) திரவத்தன்மையின் மட்டம்;

(ஊ) அனைத்து மட்டங்களிலும் தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த அலுவலர்களின் கிடைப்பனவு;

(எ) உத்தேச அமைவிடத்தின் வாடிக்கையாளர்களுக்கான வசதி; அத்துடன்

(ஏ) தகவல் தொழில் நுட்பத்தின் பலம்.

**படுகடன் சாதனங்களை வழங்குதல்** 4. படுகடன் கருவிகளின் வழங்கலை சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தலைமை அலுவலகத்தினால் அல்லது கிளையினால் மாத்திரம் மேற்கொள்ள முடியும்.

**விண்ணப்பங்கள்** 5. ஒப்புதலைப் பெறுவதற்காக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் பின்வரும் விண்ணப்பப் படிவங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(i) புதிய கிளை/ வியாபாரத் தலத்தினைத் திறப்பதற்கு படிவம் 'ஏ'

(ii) தற்போதுள்ள கிளையினை/ வியாபாரத் தலத்தினை மூடிவிடுவதற்கு படிவம் 'பீ'

(iii) கிளையினை/ வியாபாரத் தலத்தினை இடம்மாற்றுவதற்கு படிவம் 'சி'

**செல்லுபடியாகும் காலம்** 6. ஒப்புதல் செல்லுபடியாகும் காலம் ஒப்புதலளிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களாக இருக்கும்.

**அலுவல் நேரம்** 7. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி எதுவும், பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் ஒப்புதல் இல்லாமல், இலங்கை வர்த்தகச் சம்மேளத்தினால் விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டிராத ஏதேனும் நாளில் அதன் ஏதேனும் கிளைகளை/ வியாபாரத்தலங்களை மூடிவிடக்கூடாது.

படிவம் ஏ

## கிளைகள்/ வியாபாரத்தலங்களைத் திறப்பதற்கான விண்ணப்பம்

1. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர்:
2. வகை: தலைமை அலுவலகம்/ கிளை/ அலுவலக நிலையங்கள்/ பணி நிலையங்கள்/ ஏதாவது வேறு ஏதேனும் நிலையங்கள்
3. மைய மூலதனம் (கடைசியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு):
4. உத்தேச அமைவிடத்தின் முகவரி:
5. கம்பனிக்கு அல்லது அதன் தொடர்பான கம்பனிகளுக்குச் சொந்தமான வியாபாரங்கள் ஏற்கனவே அமைந்துள்ள நிருவாக மாவட்டத்தில் கிளைகள்/ வியாபாரத்தலங்கள் நிறுவப்படவுள்ள இடங்களின் விபரங்கள்

அ. விண்ணப்பிக்கும் கம்பனி:

ரூ. 000'

| வியாபாரத்தலம் அமைந்துள்ள இடம் | நிறுவப்பட்ட திகதி | வியாபாரத்தின் வகை | இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையின்படி | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தக் கடன் வசதி | குத்தகைக்கு விடப்படும் நிதி | படுகடன் சாதனங்களின் வழங்கல் மூலமான கடன்பாடுகள் | மொத்தச் சொத்துக்கள் | நிதியாண்டிற்கான இலாபம்/ (நட்டம்) |
| | | | | | | | |
| | | | | | | | |

ஆ. கிளை/ வியாபாரத்தலத்தினை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் நிருவாக மாவட்டத்தில் தொழிற்படுகின்ற இதே கம்பனியின் குழுமத்திற்குச் சொந்தமான ஏனைய நிறுவனங்கள்

| நிறுவனத்தின் பெயர் | வியாபாரத்தலத்தின் முகவரி | வியாபாரத்தின் வகை | கம்பனிக்கான உறவு முறை |
|---|---|---|---|
| | | | |
| | | | |

6. உத்தேச கிளைகள்/ வியாபாரத்தலங்கள் அமையவுள்ள நகரம்/ கிராமத்திலுள்ள ஏனைய சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெயர்கள்:
7. உத்தேச கிளைகள்/ வியாபாரத்தலங்கள் அமையவுள்ள நகரம்/ கிராமத்திலுள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பெயர்கள்
8. உத்தேச கிளை/ வியாபாரத்தலத்தினது வியாபாரத்தின் முக்கிய வகைகள்
9. புதிய கிளை/ வியாபாரத்தலத்தினை திறப்பது தொடர்பான மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு

   (அ) காணி மற்றும் கட்டடம்/ முன்கூட்டியே செலுத்தப்பட்ட வாடகை

   (ஆ) தளபாடங்கள் பொருத்துக்கள் மற்றும் இணைப்புக்கள்

   (இ) அலுவலகக் கருவிகள்

   (ஈ) ஏனைய பொருத்தப்பட்ட சொத்துக்கள்

   (உ) ஏனையவை

10. உத்தேச கிளை/ வியாபாரத்தலத்திற்கும் தலைமை அலுவலகத்திற்குமிடையில் தொடர்பூட்டல்/ தகவல்களை பரிமாறும் முறைகள் (அதாவது செய்திகளைக் கொண்டு செல்லும் தூதர்/ கூரியர்/ தொலைநகல்/ கணனி வழி உடனடி தொடர்பு முறைமை) மற்றும் தகவல்களைப் பரிமாறும் கால இடைவெளி (அதாவது நாளாந்தம்/ வாராந்தம்/ மாதாந்தம்):
11. உத்தேச கிளையின்/ வியாபாரத்தலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான தொழிற்பாடுகளின் எறிவுகள்:

| | | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு |
|---|---|---|---|---|
| (அ) | கடன் வசதி: | .......................... | .......................... | .......................... |
| | நிதிக்குத்தகை | .......................... | .......................... | .......................... |
| | தவணைக் கடன்கள் | .......................... | .......................... | .......................... |
| | தவணைக் கொள்வனவு | .......................... | .......................... | .......................... |
| | காரணிப்படுத்தல் | .......................... | .......................... | .......................... |
| | உண்மைச் சொத்து | .......................... | .......................... | .......................... |
| | ஏனையவை | .......................... | .......................... | .......................... |
| (ஆ) | கடன்பாடுகள்: | .......................... | .......................... | .......................... |
| | வாக்குறுதிச் சான்றிதழ்கள் | .......................... | .......................... | .......................... |
| | வர்த்தகப் பத்திரங்கள் | .......................... | .......................... | .......................... |
| (இ) | வருமானம்: | .......................... | .......................... | .......................... |
| | வட்டியிலிருந்தான வருமானம் | .......................... | .......................... | .......................... |
| | நிதிக்குத்தகை | .......................... | .......................... | .......................... |
| | தவணைக் கடன்கள் | .......................... | .......................... | .......................... |
| | தவணைக் கொள்வனவு | .......................... | .......................... | .......................... |
| | காரணிப்படுத்தல் | .......................... | .......................... | .......................... |
| | உண்மைச் சொத்து | .......................... | .......................... | .......................... |
| | ஏனையவை | .......................... | .......................... | .......................... |
| | வட்டியல்லா வருமானம் | .......................... | .......................... | .......................... |
| (ஈ) | செலவுகள் | .......................... | .......................... | .......................... |
| | படுகடன் சாதனங்கள் மீதான வட்டி | .......................... | .......................... | .......................... |
| | சம்பளங்கள் மற்றும் கூலிகள் | .......................... | .......................... | .......................... |
| | வாடகை | .......................... | .......................... | .......................... |
| | தேய்மானம் | .......................... | .......................... | .......................... |
| | ஏனைய செலவுகள் | .......................... | .......................... | .......................... |
| (உ) | இலாபம்/ (இழப்புக்கள்): | .......................... | .......................... | .......................... |

12. உத்தேச கிளைக்கு/ வியாபாரத்தலத்திற்கு முகாமையாளராகவும் (பொறுப்பான அலுவலர்) இரண்டாவது அலுவலராகவும் பதவி ஏற்க அனுப்பப்படவுள்ள அலுவலர்களின் பெயர், தகைமை மற்றும் அனுபவம், மற்றும் உதவி அலுவலர்களின் விபரங்கள்:

13. கிளை/ வியாபார அமைவிடத்தினை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அமைவிடத்தின் தொடர்பாக உள்ளூராட்சி மன்றத்திடமிருந்து தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டிருக்கின்றதா:

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையும் சரியானவையும் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அலுவலரின் பெயர்: ......................................................................................

பதவி: ....................................................................................................................

தொலைபேசி: ..................................................................................................

திகதி: ..................................................................................................................

படிவம் பீ

## கிளையொன்றினை/ வியாபாரத்தலமொன்றினை மூடுவதற்கான விண்ணப்பம்

1. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர்:
2. வகை: தலைமை அலுவலகம்/ கிளை/ அலுவலக நிலையம்/ பணிகள் நிலையம்/ வேறு ஏதேனும் நிலையங்கள்
3. மூடப்படவுள்ள அமைவிடத்தின் முகவரி
4. மூடப்படவுள்ள கிளையின்/ வியாபாரத்தலத்தின் விபரங்கள் வருமாறு:

| வகை | இறுதியான நிதியியல் அறிக்கையின்படி ரூ.000' |
|---|---|
| மொத்த மைய மூலதனம் | |
| மொத்தக் கடன் வசதி | |
| நிதிக் குத்தகை (ஒப்பந்தங்களின் எண்ணிக்கை உட்பட) | |
| தவணைக் கொள்வனவு | |
| மொத்தக் கடன்பாடுகள் | |
| வாக்குறுதிச் சான்றிதழ் கடன்பாடுகள் | |
| வர்த்தகப்பத்திரக் கடன்பாடுகள் | |
| ஏனையவை | |
| மொத்தச் சொத்துக்கள் | |
| இலாபம்/ (நட்டம்) | |
| படுகடன் சாதனங்களில் முதலீடு செய்துள்ள முதலீட்டாளர்களின் எண்ணிக்கை | |

5. கிளையினை/ வியாபாரத்தலத்தினை மூடுவது பற்றி தொடர்பான உள்ளூராட்சி மன்றத்திலிருந்து தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளனவா:
6. படுகடன் சாதனங்களின் உடமையாளர்களின் முதலீடுகளில் மீது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்
7. கிளைகள்/ வியாபாரத்தலங்களை மூடுவதற்கு நியாயப்படுத்துகின்ற காரணங்கள்:

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

அலுவலரின் பெயர்: ..............................................................................................

பதவி: ...............................................................................................................

தொலைபேசி: ....................................................................................................

திகதி: ...............................................................................................................

படிவம் சி

## கிளையொன்றினை/ வியாபாரத்தலமொன்றின் அமைவிடத்தினை மாற்றுவதற்கான விண்ணப்பம்

1. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர்:
2. வகை: தலைமை அலுவலகம்/ கிளை/ கிளை நிறுவனம்/ பணிகள் நிலையம்/ வேறு ஏதேனும் நிலையங்கள்
3. தற்போதைய அமைவிடத்தின் முகவரி
4. உத்தேச அமைவிடத்தின் முகவரி
5. அமைவிடம் மாற்றப்படவுள்ள கிளையின்/ வியாபாரத்தலத்தின் விபரங்கள் வருமாறு:

| வகை | இறுதியான நிதியியல் அறிக்கையின்படி ரூ.000' |
|---|---|
| மொத்த மைய மூலதனம் | |
| மொத்தக் கடன் வசதி | |
| நிதிக் குத்தகை (ஒப்பந்தங்களின் எண்ணிக்கை உட்பட) | |
| தவணைக் கொள்வனவு | |
| மொத்தக் கடன்பாடுகள் | |
| வாக்குறுதிச் சான்றிதழ் கடன்பாடுகள் | |
| வர்த்தகப்பத்திரக் கடன்பாடுகள் | |
| ஏனையவை | |
| மொத்தச் சொத்துக்கள் | |
| இலாபம்/ (நட்டம்) | |
| படுகடன் சாதனங்களில் முதலீடு செய்துள்ள முதலீட்டாளர்களின் எண்ணிக்கை | |

6. தற்போதைய அமைவிடத்திலிருந்து உத்தேசிக்கப்படவுள்ள அமைவிடத்திற்கு கிளையினை/ வியாபாரத்தலத்தினை மாற்றுவது தொடர்பான உள்ளூராட்சி மன்றத்திலிருந்து தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளனவா:
7. கிளைகள்/ வியாபாரத்தலங்களை இடம் மாற்றுகின்றமைக்காக நியாயப்படுத்துகின்ற காரணங்கள்:

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

அலுவலரின் பெயர்: .......................................................................................

பதவி: ..................................................................................................................

தொலைபேசி: ...................................................................................................

திகதி: .................................................................................................................

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் பிரிவு 3(இ), 4(1) மற்றும் 6 என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 35ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியும் நிதி திட்டமிடல் துறைக்குப் பொறுப்பான அமைச்சருமானவரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மகிந்த ராஜபக்ஷ
**சனாதிபதியும் நிதி திட்டமிடல் அமைச்சரும்**
**கொழும்பு**

2010 திசெம்பர் 27

### ஒழுங்குவிதிகள்

**எடுத்துக்காட்டல்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2010ஆம் அண்டின் 1ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

**உரிமத்திற்கு விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியின் குறைந்தபட்ச வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட மூலதனம்**

2. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் பிரிவு 3(இ)இன் நோக்கங்களுக்காக, இச் சட்டத்தின் கீழ் உரிமம் பெறுவதற்காக விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியொன்றின் குறைந்தபட்ச வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட மூலதனத்தின் அளவு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| வழங்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனம் (ரூ. மில்.) | நடைமுறைக்கு வரும் நாள் |
|---|---|
| 100 | 2011.01.01 இலிருந்து |
| 150 | 2012.01.01 இலிருந்து |
| 200 | 2013.01.01 இலிருந்து |
| 250 | 2014.01.01 இலிருந்து |
| 300 | 2015.01.01 இலிருந்து |

**எனினும், சாதாரண பங்குகள், வழங்கப்பட்ட ஒன்று சேராத பங்குகள், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் என்பன காசிற்காக வழங்கப்பட்டவையாக இருக்குமிடத்து, மாத்திரம் அவை செலுத்தப்பட்டவையாகக் கருதப்படலாம்.**

**பதிவிற்கான விண்ணப்பக் கட்டணம்**

3. சட்டத்தின் பிரிவு 4(1)(உ) இன் நோக்கங்களுக்கான, பதிவிற்கான விண்ணப்பக் கட்டணங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

   அ. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகளுக்கு ரூ.25,000/-

   ஆ. மற்றைய ஏதேனும் பகிரங்க கம்பனிக்கு ரூ.50,000/-

**பதிவுக் கட்டணம்**

4. சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் பதிவினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்புடைத்தான கட்டணமான (கலண்டர் ஆண்டிற்கான பதிவிற்கு) ரூ.250,000 ஐ பதிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

**ஆண்டு உரிமக் கட்டணம்**

5. சட்டத்தின் 6ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகை நிறுவனமும், முற்போந்த கலண்டர் ஆண்டு முடிவடைந்த இரண்டு மாதங்களுக்குள் ஆண்டு உரிமக் கட்டணத்தினை கீழே காட்டப்பட்டவாறு, முற்போந்த நிதியாண்டு முடிவிலுள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்

| நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் (ரூ.) |
|---|---|
| ரூ. 1 பில்லியன் அல்லது அதற்குக் குறைவானது | ரூ.150,000 |
| ரூ. 1 பில்லியனுக்கு மேல் ஆனால் ரூ.10 பில்லியனுக்குக் குறைவானது அல்லது சமனானது | ரூ.250,000 |
| ரூ. 10 பில்லியனுக்கு மேல் | ரூ.500,000 |

**2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதியை புறக்கீடு செய்தல்**

6. 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (கட்டணம்) ஒழுங்குவிதி இத்தால் புறக்கீடு செய்யப்படுகிறது.